# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

■ தடி-2, அடி-9 ■ டிசம்பர் 2018 ■ தனிச்சுற்றுக்கு மட்டும் ■ நன்கொடை ரூ.20


## வீழ்த்தப்பட முடியாதவர் வீரமணி!

ஆசிரியர் பிறந்தநாள் சிறப்புக் கட்டுரை





## தமிழர் தலைவர் (குடும்பத் தலைவர்)

# ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு

## எங்கள் குடும்பத்தின் சார்பில்
## பிறந்தநாள் வாழ்த்துகளை பகிர்ந்து கொள்கிறோம்!



**இரா.சின்னசாமி முனியம்மாள்**

காரிமங்கலம் ஒன்றிய தலைவர்
திராவிடர் கழகம்

**சி.முனியம்மாள்**

மாவட்ட அமைப்பாளர்
மகளிர் அணி
திராவிடர் கழகம்



**இரா.இராஜா**

மேனாள் மாவட்ட
இளைஞரணி செயலாளர்
திராவிடர் கழகம்

**இரா.தேவிகா**

மகளிரணி
திராவிடர் கழகம்



**மு.சி.அறிவழகன்**

மாவட்ட துணைச் செயலாளர்
பகுத்தறிவு எழுத்தாளர் மன்றம்

**இரா.மதியழகன்**

பெரியார் பிஞ்சு

**இரா.கலையரசி**

பெரியார் பிஞ்சு



– சிகரன் –

## வாசகர் பார்வையில்

**க**டந்த நவம்பர் மாதத்தோடு 20வது இதழ்களை நிறைவு செய்து இருக்கிறீர்கள்! மிகச் சரியான திட்டமிடுதலோடு இதனைச் சாத்தியப்படுத்தி இருக்கிறீர்கள் என்று கருதுகிறேன்! இந்த இதழ் தொடர்ந்து பரவலாக்கப்பட வேண்டும் என்பது எனது விருப்பம், வாழ்த்துகள்.

**– அறிவுச்செல்வன், திருச்சி.**

**ந**வம்பர் மாதத்தில் இடம்பெற்ற அனைத்து கட்டுரைகளும் அருமை! அதிலும் தோழர் மு.சி.அறிவழகன் அவர்கள் எழுதிய சோதிடத்தை சோதிப்போமா! சிறுகதை ஒருநிமிடம் சிந்திக்க செய்தது. சோதிடத்தின் மீது இருந்த நம்பிக்கையை கேள்வி கேட்க வைத்துள்ளது. மகிழ்ச்சி, வாழ்த்துகள்.

**– தேவிப்பிரியா, சென்னை.**

**இ**ன்றைய அரசியல் சூழ்நிலையில், பொருளாதார இடர்ப்பாடுகளில் கல்லூரி மாணவரால் இப்படி ஒரு இதழ் நடத்தப்பட்டு வருகிறது என்ற செய்தி சமூக மாற்றத்திற்கான தொடக்கமாகவே பார்க்கிறேன்! வாழ்த்துகள்.

**– சிந்துஜா பிரியா, தேனி.**

## பொதுத் தொண்டு

**ஊ**ராட்சித் தலைவர்கள் அவர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!

ஏதோ மனிதனாகப் பிறந்தோம்; சுயநலத்திற்கு ஏற்ப வாழாமலிருக்க வேண்டுமென்று கருதுகிறோம். நம் வாழ்வின் பயனாகத் தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் தொண்டாற்றி வருகிறேன். பலர் கருதுகிறார்கள்- நான் பொதுமக்களுக்காகத் தொண்டாற்றுகிறேன் என்று; ஒரு மாதிரியில் அந்தக் கருத்து சரி. இந்த நாட்டில் பார்ப்பானைத் தவிர மற்றவர்களெல்லாம் பொதுமக்களுக்கு பாடுபடுகிறவர்கள்தாம். உலகத்தில் மனிதனாக உள்ள அனைவரும், பார்ப்பானைத் தவிர மற்றவர்கள் அனைவரும் பொதுமக்களுக்குத் தொண்டாற்றுகிறவர்கள்தாம்.

சாதாரணமாக அருவருப்பாகத் தோன்றும் கக்கூஸ் சுத்தம் செய்யும் (மலம் எடுப்பது) வேலை முதல், அரசனாக இருந்து ஆட்சிப்புரிகிற வரையில் எல்லோருடைய வேலையும் பொதுத்தொண்டுதான்.

கக்கூஸ் எடுக்கிறான் என்றால் தனக்கு மட்டுமா எடுக்கிறான்? வேலைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள், உத்தியோகம் செய்பவன், விறகு வியாபாரம் செய்பவன், மற்றும் பல வியாபாரிகள், தொழில் செய்வோர்கள் இவர்களை எடுத்துக்கொண்டால் அவனவன் செய்கிறதெல்லாம்-அது அவனுக்கு மட்டுமல்ல,

உயர்வு- தாழ்வு என்னவென்றால், அதன் மூலம்தான் தன் வாழ்வை வளப்படுத்திக் கொள்கிறான் என்றோமே தவிர வேறு வகையில் அதுதொண்டுதான். மற்றவனுக்குள்ள வசதி வாய்ப்பு, அமைப்பு இவற்றைப் பயன்படுத்திக்கொண்டு, இலாபம் பார்த்துக் கூலி பார்த்துச் செய்கிறார்கள் என்று சிலரைக் கூறலாமேத் தவிர, அவர்கள் இறக்கும்போது எடுத்துக்கொண்டா போகிறார்கள்? அவைகளை விட்டுவிட்டுத்தான் போகிறார்கள்; மற்றவர்கட்குத்தான், அது நம் மகனுக்கு, அல்லது நம் மனைவிக்கு, என்று நினைப்பார்கள். கணக்குப் பார்த்தால் அவர்களும்(மனைவி, மக்களும்) மற்றவர்கள்தாம். தனக்கு என்று ஒன்றும் இல்லை. பொதுத் தொண்டில், தனக்கு என்று ஒன்றைச்செய்கிறவர்கள் சிலர்தான்.

தேடி வைத்தவர்கள் யாரென்றால், மற்றவர்களைத் தேடாமால்- எதிர்பாராமல் தொண்டாற்றிப் போகும் அத்தனைப்பேரும், அவர்கள்தாம் தமக்கென்று புகழைத்தேடிக் கொண்டு போகிறார்கள்; பிரதியுபவகாரம் இல்லாமல் தொண்டு செய்கிறார்கள் என்ற பெயரைத் தம்மோடு எடுத்துப் போகிறார்கள். உலகத்தில் அது இருக்கிற வரையில் தம் பெயர் நிலைக்கும்படி செய்துவிடுகிறார்கள். நிலம், காணி இவையெல்லாம் எவ்வளவுதான் சேர்த்து வைத்திருந்தாலும் அவன் செத்துப் போனதும் அவனது என்று சொல்லமாட்டார்கள். இவனுடைய மகனது என்றுதான் கூறுவார்கள்; இது இயல்பு. தனது என்று கூறும்படியானது தொண்டு ஒன்றுதான். மற்றவர்களுக்காகப் பலனை எதிர்பாராமல் தொண்டு செய்வதுதான்.

**தேரெழுந்தூரில், 31–03–1959–ல் சொற்பொழிவு**
**– "விடுதலை" 11–04–1959**

# கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**மு.சி.அறிவழகன்**

உதவி ஆசிரியர்:
**கா. தமிழரசன்**

ஆசிரியர் குழு:
**புலவர் நாகை பாலு** த.மு.எ.ச.
**முனைவர் கு. முருகேசன்**

புகைப்படக் கலைஞர்:
**தனுஷவன், ஜோதி வெங்கடாஜலபதி**

ஓவியர்கள்:
**ஓவியர் ரா.ராஜசேகர்**
**தனுவசி சி.தர்மராஜ், ஓவியர் சிகரன்,**

மெய்ப்புத் திருத்தம்:
**மே.கா.கிட்டு**

இதழ் வடிவமைப்பு:
**டிசைன்ஷாப்,** 76677 55673

களப்பணிக் குழு:
**அ.செ.செல்வம், சி.வீரவேல், கண்மணி,**
**தே.சுரேஷ், அரவிந்த்,**
**கவிதாரமேஷ்.**

சட்ட ஆலோசகர்கள்:
**ஆர்.சையத் அன்வர் பாசா,** வழக்கறிஞர்
**ஜெ. தம்பிபிரபாகரன்,** வழக்கறிஞர்

ஆசிரியர் குழு – அலுவலக முகவரி

**கைத்தடி**
மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்
**மதி பப்ளிகேசன்**
2/343, காமலாபுரம் (கி), மல்லிக்குட்டை (அ),
காரிமங்கலம் (வ), தருமபுரி – 635 205.
அலைபேசி: 73733 33078
மின்னஞ்சல்: kaithadimonthly@gmail.com



பேட்டிகள், சிறப்புக் கட்டுரைகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கைத்தடி மாத இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல.


## இந்த இதழில்...


| | |
|---|---|
| பெரியாரின் உரையாடல் | 5 |
| மார்பகப் பம்ப் – சமூக கடமையினையாற்றுவதற்கான கருவி | 6 |
| தமிழ்த்தேசியமும் தலித்தியமும் அயோத்திதாசரும் | 8 |
| கயிறுல கிருமி? | 10 |
| வீழ்த்தப்பட முடியாதவர் வீரமணி! | 12 |
| மீ டூ – பெண்கள் பேசட்டும்; மனம் திறக்கட்டும்! | 14 |
| சமோசா – கடவுள் | 16 |
| உயிர்மெய் – தொடர்கதை | 18 |
| அய்ம்பது ஆண்டு திராவிட கட்சிகளின் ஆட்சியில் தமிழகம் வளர்ந்திருக்கிறதா? வீழ்ந்திருக்கிறதா? | 20 |
| டிப்பர் லாரி – சிறுகதை | 24 |
| மந்திரமா? தந்திரமா? | 25 |
| தமிழர் விளையாட்டுகள் – கள்ளன் போலீஸ் | 26 |
| பார்ப்பனீய ஜனநாயகம் | 28 |
| சிலையைத் தகர்த்தால்...!!! – கவிதை | 29 |
| கலவர (வி)நாயகனும் வீரசவர்க்கர் பரம்பரையில் வீர அட்மினும் | 30 |
| எச்சில் தொட்டி – தொடர்கதை | 32 |
| மாட்டுக் கொட்டாய் – கவிதை | 34 |



| கைத்தடி சந்தா விபரம் | தனி இதழ் ₹ 20 |
|---|---|
| ஓராண்டு சந்தா | ₹ 250 |
| இரண்டு ஆண்டு சந்தா | ₹ 470 |
| நான்கு ஆண்டு சந்தா | ₹ 950 |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 1200 |

NAME : KAITHADI
A/C NO : 20160200001582
IFSC CODE : FDRL0002016 PH. NO: 7373333078
A/C TYPE : CURRENT ACCOUNT
FEDERAL BANK, DHARMAPURI

◉ பேராசிரியர் சுப.வீரபாண்டியன்





# பெரியாரின் உரையாடல்

அண்மையில் ஒரு கருத்தரங்கில், முன்னாள் துணைவேந்தர் ஜெகதீசன், "நாமெல்லாம் மக்களிடம் உரையாற்றுகின்றோம், பெரியாரோ மக்களோடு உரையாடினார்" என்றார். எளிய வரிகளில், ஓர் அரிய உண்மையை அவர் உணர்த்தினார் என்றே கூற வேண்டும்.

உரையாடலின் சிறப்பு, எளிமையான மொழியிலும், ஆழமான பொருளிலும் உள்ளது. அவை இரண்டுமே பெரியாரின் உரையாடலில் இருந்தன. அதனால்தான், படித்தவர்களே புரிந்துகொள்ளவும், ஏற்கவும் தயங்கிய செய்திகளைப் படிப்பறிவு குறைந்திருந்த, உழைக்கும் கிராம மக்களிடமும் அவரால் எளிதில் எடுத்துச் செல்ல முடிந்தது.

கருத்துகளின் அடிப்படையில் அவரை எதிர்த்தவர்கள் கூட, அவர் பேச்சினால் ஈர்க்கப்பட்டனர். எழுத்தாளர் கல்கி அதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாவார். அவர் ஒருமுறை "நான் மதன் மோகன் மாளவியா, ஈ.வே. ரா ஆகியோரின் பேச்சை மட்டுமே மணிக்கணக்கில் கேட்டிருக்கிறேன். அதிலும், ஈ.வே.ரா வின் பேச்சு எத்தனை மணி நேரம் கேட்டாலும் சலிக்காது" என்று குறிப்பிட்டார்.

பெரியார் பல கூட்டங்களில், "தலைவர் அவர்களே, தோழர்களே" என்று மட்டும்தான் குறிப்பிட்டுள்ளார். தாய்மார்களே என்று கூடச் சில கூட்டங்களில்தான் கூறுகின்றார். தோழர்கள் அல்லது நண்பர்கள் என்னும் சொல்லுக்குள் பெண்களும் அடங்குவர் என்பது அவர் கருத்தாக இருந்திருக்கலாம். அது மட்டுமின்றி, அவரின் கவனம் எல்லாம் மக்களைப் பற்றியதாகவே இருந்துள்ளது. மேடையில் உள்ளவர்களை மகிழ்விக்கும் போக்கில் பல சொற்களை அவர் சொல்வதே இல்லை.

அய்யாவின் பேச்சில் தனித்தமிழ் நடையைப் பார்க்க முடியாது. அவர் அதற்கு எதிரி என்று கொள்ள வேண்டியதில்லை. அன்றைய நடை பொதுவாக அப்படித்தான் இருந்தது. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியின் முதல் அச்சையும், இரண்டாவது அச்சையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு இந்த உண்மை நன்றாகவே புரியும். முதல் அச்சில் பல வடமொழிச் சொற்களைக் காண முடிகிறது. அடுத்த அச்சு வரும்போது அதனை அவர் கவனமாக மாற்றியுள்ளார்.

திராவிட இயக்கமும் தனித்தமிழ் இயக்கத்தைப் போன்றே சமற்கிருதத் திணிப்பைக் கடுமையாக எதிர்த்த போதிலும், திராவிட இயக்கத்தினர் எழுத்திலும், பேச்சிலும் அச்சொற்கள், அன்றைய நடைமுறையையொட்டி நிறையவே கலந்து கிடந்தன ஜில்லா, காரியதரிசி போன்ற சொற்கள் எல்லோருடைய மொழியிலும் காணப்பட்டன. "சபாஷ் அம்பேத்கார்", பகிஷ்காரப் புரட்டு", ஜேஷ்டபுத்திரனும் தேசபக்தர்களும்" போன்ற தலைப்புகளை எல்லாம் பெரியாரின் எழுத்துகளில் பார்க்க முடிகிறது. பேச்சு நடையிலும் இவை உள்ளன.

இவற்றைக் காலத்தை ஒட்டிய போக்கு என்று கொள்ளலாம். அல்லது எளிய மக்களிடம் அவர்கள் புழங்கும் மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் கையாண்டிருப்பதாகக் கொள்ளலாம். பொதுவாகவே, சொற்களை விட, கருத்துகளில்தான் பெரியார் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார். எனவே அவர் உரை ஆழமான செய்திகளைச் சுமக்கும் எளிய நடை உரையாகவே இருந்துள்ளது.

ஆனால் சமற்கிருத எதிர்ப்பு உணர்வை அதே பெரியார்தான் இம்மண்ணில் வலிமைப் படுத்தினார் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் மொழி கொண்டே அவர்களை எதிர்த்தவர் பெரியார்.

கடவுள் நம்பிக்கை, மூட நம்பிக்கை ஆகியன மண்டிக் கிடந்த அந்த நாள்களில் அவற்றை எதிர்த்து மக்களிடம் பேசுவதற்கு, அவரின் மொழி பெரிதும் பயன்பட்டது என்றே கூற வேண்டும்.

*1940*களில் ஒருமுறை, பெரம்பலூர் அருகில் உள்ள ஒரு சிற்றூருக்குப் பெரியார், கி.ஆ.பெ போன்றவர்களுடன்,

ஒரு கூட்டத்திற்காகச் சென்றார். ஊரின் எல்லையில் மக்கள் எல்லோரும் கூடி நின்றனர். வரவேற்பதற்காக என்று கருதிவிட வேண்டாம். கைகளில் கம்பு, தடியோடு அவர்கள் நின்றனர். பார்த்தவுடனேயே பெரியாருக்குப் புரிந்து விட்டது.

"எங்கள் ஊருக்கு உள்ளே நுழையக்கூடாது" அன்று அவர்கள் சத்தமிட்டனர். 'சரி, திரும்பி விடலாம்' என்றார் கி.ஆ.பெ. ஆனால் பெரியார் கேட்கவில்லை. காரை வீட்டுக் கீழே இறங்கினார். அந்த மக்களின் குரல் மேலும் பெரிதாயிற்று. அவர்களைப் பார்த்துப் பெரியார், "உங்களை மீறி, உங்கள் விருப்பத்திற்கு எதிராக உங்கள் ஊருக்குள் நாங்கள் ஒருநாளும் வரமாட்டோம்" என்றார். சத்தம் கொஞ்சம் தணிந்தது. "ஆனாலும், ஏன் எங்களை உள்ளே வரக்கூடாது என்று சொல்கிறீர்கள் என்று தெரிந்துகொண்டு போகிறோம்" என்றார்.

அங்கிருந்த பெரியவர் ஒருவர், "கடவுள் இல்லேன்னு சொல்ற உங்களுக்கெல்லாம் எங்க ஊர்ல இடமில்லே" என்றார். "அப்டீங்களா?" என்று கேட்ட பெரியார், அவர்களுடன் மெல்ல உரையாடத் தொடங்கினார் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பொறுமையாகவும், விளக்கமாகவும் விடைகளைச் சொன்னார். அவருடைய விடைகளில் இருந்த நியாயம் அவர்களைச் சற்று அசைத்தது. கைகளிலிருந்த கம்புகளைக் கீழே போட்டுவிட்டு, 'உக்காருங்கப்பா, அவரு என்னதான் சொல்றாருன்னு கேப்போம்' என்றார் அந்தப் பெரியவர். எல்லோரும் அமர்ந்தார்கள். அந்த இடத்திலேயே, ஒரு மணி நேரத்துக்கும் மேலாகப் பல செய்திகள் குறித்துப் பெரியார் விளக்கினார்.

எல்லோருடைய மனநிலையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டு விட்டது. அய்யாவின் கருத்துகளுக்குக் கைதட்டத் தொடங்கினர். பெரியார் பேசி முடித்தார். எல்லோரும், "அய்யா எங்க ஊருக்கு வாங்க, நாங்க தெரியாம உங்கள எதித்திட்டோம்" என்றனர். பெரியாரோ, "நான்தான் பேசவந்த எல்லாத்தையும் பேசிட்டேனே, இனி எதற்கு?" என்றார். மக்கள் விடவில்லை. நீங்கள் வந்தே தீரவேண்டும் என்று கூறி, ஆர்ப்பாட்டமாக உள்ளே அழைத்துச் சென்றனர்.

ஊரை விட்டுத் துரத்த வந்தவர்கள், அவரை ஊருக்குள் ஊர்வலமாய் அழைத்துச் சென்ற இந்த நிகழ்சசி, பெரியாரின் கருத்துகளுக்கு மட்டுமின்றி, பெரியாரின் மொழி நடைக்கும் கிடைத்த வெற்றி என்று கூற வேண்டும்.

செய்யாறுக்கு அருகில் நடந்த ஒரு மணவிழாவில், அய்யாவே தாலியை எடுத்து மணமகனிடம் கொடுத்துக் கட்டச் சொல்லிவிட்டு, பிறகு அந்தத் தாலி எப்படிப் பெண்ணை அடிமையாக்குகிறது என்று மணிக்கணக்கில் பேசினார். கேட்டுக்கொண்டிருந்த மணமகள், எழுந்து நின்று, எல்லோர் முன்னிலையிலும் தன் தாலியைக் கழற்றி மேசையில் வைத்துவிட்டார். இதனை விட, ஒரு பேச்சுக்கு உடனடிப் பயன் வேறு என்ன இருக்க முடியும்?

பெரியாரைப் போல் எளிமையாகப் பேசுவது கடினமா என்று கேட்கத் தோன்றும். ஆம், எளிமையாகப் பேசுவதுதான் மிகக் கடினமானது!. ●

குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதில் சிக்கல்களை எதிர்கொள்ளும் தாய்மார்களுக்கு உதவ உருவாக்கப்பட்டது தான் மார்பகப் பம்ப். ஆரம்பத்தில், வேலைக்குச் செல்லும் தாய்ப்பாலூட்டுபவர்கள் தங்கள் தாய்ப்பாலினை சேமித்து வைப்பதற்காக, அதனை வெளியேற்றும் பொருட்டு தங்கள் கைகளை உபயோகித்தனர். இதனைச் செய்வதற்கு நேரம் நிறைய ஆகும் என்பதாலே தான் பெரும்பான்மையானோர் குழந்தைகளுக்கான செயற்கை உணவுகளை கொடுக்க ஆரம்பித்தனர். அது தாய்ப்பாலுக்கு நிகரானது என்று சொல்லப்பட்டாலும் அதன் தன்மை அப்படியானது அல்ல. குழந்தைகளின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து குணநலன்களையும் கொண்டிருப்பதால் தான், வல்லுநர்கள் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதை ஊக்குவிக்கின்றார்கள்.

வேலை செல்லும் பெண்களில் பலர் வேலையில் இருக்கும் நேரத்தில் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலினை எவ்வாறு தருவது என்ற கவலையோடு இருக்கின்றனர். அதோடு தாய்ப்பாலினை வெளிக்கொணரும் மார்பகப் பம்பினைப் பயன்படுத்துவது சரியா என்ற கேள்வியோடு மார்பகப் பம்பினை எப்படி, எந்நேரத்தில் பயன்படுத்துவது போன்ற தொடர் கேள்விகளுக்கு விடை தேடுகிறார்கள்.

மார்பகப் பம்ப் பயன்பாட்டின் ஆக முக்கிய காரணம் குழந்தையினைப் பிரிந்து இருக்கும் நேரத்தில் பால் சுரப்பினை ஊக்குவிக்கவும் சுரப்பு அளவினை தக்க வைப்பது. காரணம், பால் புகட்ட புகட்டத்தான் பால் சுரப்பின் அளவும் மேம்படும்.

மார்பகப் பம்பின் வழி, தாய் தன் குழந்தைக்கு பால் புகட்ட முடியாத வேளையில் மார்பில் இருந்து தாய்ப்பாலினை வெளிக்கொணர முடிகிறது. தற்பொழுது சந்தையில் பல்வேறு விதமான மார்பகப் பம்புகள் உள்ளன என்ற போதும் எல்லா மார்பகப் பம்புகளும் எல்லா பெண்களுக்கும் பொருத்தமானதல்ல என்பதனை கவனம் கொள்ள வேண்டும். அதன் தேர்வென்பது ஒவ்வொருவரின் தேவைக்கேற்றது. சந்தையில் உள்ள பல மார்பகப் பம்ப் வடிவங்கள் ஒரே நேரத்தில் இரண்டு மார்பகங்களில் இருந்து பாலினை வெளிக்கொணருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது

மார்பகப் பம்பின் பயன்பாடென்பது ஒரு நாளில் பல முறை இருக்கலாம். ஆனால் அது மாத்திரம் பால் சுரப்பினை தக்க வைக்க முடியாது. குழந்தைக்கு நேரடியாக தாய்ப் பால் புகட்டுவதும் சுரப்பினைத் தக்க வைப்பதில் அவசியமாய் இருக்கின்றது.

இம் மார்பகப் பம்ப்களில் மூன்று வகைகள் இருக்கின்றன. கையினால் இயக்கக்கூடியது, பேட்டரிகளால் இயக்கக்கூடியது மற்றும் மின்சாரத்தால் இயக்கக்கூடியது.

## ஆக, இப் பம்பினை இயக்குவது எப்படி?

1. பம்பினை இயக்குவதற்கு முன்பு கையினை சோப் மற்றும் நீர் கொண்டு நன்கு கழுவவும். மார்பினையோ அல்லது மார்பு காம்பினையோ கழுவ வேண்டிய அவசியமில்லை.

2. பம்ப் மற்றும் தாய்ப்பாலினை சேகரித்து வைக்கும் பாட்டில் சுத்தமாக இருக்கிறதா என்று உறுதிசெய்துகொள்ளவும். ஆரோக்கியமான குழந்தைக்கு பால் சேகரம் செய்யும் போது பம்பினையோ பாட்டிலினையோ sterilize செய்ய வேண்டிய அவசியமில்லை. முக்கியமாக பம்பினைப் பயன்படுத்துவதற்கிடையே அதனை நீரினில் ஊறவைக்கக்கூடாது. பம்பில் இருக்கும் ட்யூபினை கழுவ வேண்டாம். காரணம் அது உலர நேரமாகும். ட்யூப்களில் ஈரம் கோர்த்தாலோ அல்லது பாலோ தங்கினால் வேறு ட்யூப்

மருத்துவர் யாழினி

# மார்பகப் பம்ப் – சமூக கடமையினையாற்றுவதற்கான கருவி





வாங்கவேண்டிவரும். நோய்த் தொற்று ஏற்படாமல் தடுக்க பம்பின் பாகங்கள் நாளொரு முறை சுடு நீர் கொண்டு sterilize செய்து கொள்ளலாம்.

3. பம்பினைக் கொண்டு தாய்ப்பாலினை வெளிக்கொணரும் முன் மார்பகங்களினை மெதுவாய் மசாஜ் செய்யவும். அதன் பின் ஈரமான வெதுவெதுப்பான துணியினை மார்பின் மீது பரப்பவும். பம்ப் செய்யும் போது அமைதியான, சற்று வெளிச்சம் குறைவான இடத்தில் இருத்தல் நலம். காரணம், கவனச்சிதறலினை மட்டுப்படுத்த. குழந்தையின் படத்தினையோ அல்லது அதன் ஸ்பரிசத்தினை நுகர, அதனைச் சுற்றி வைக்கும் துணியோ வைத்துக்கொள்ளுதல் வேண்டும். பயன்படுத்தும் முன் மார்பகப் பம்பின் விளிம்பினை சுடு நீர் கொண்டு வெதுவெதுப்பாக்கிக் கொள்ளவும்.

4. பம்பினைப் பயன்படுத்தும் பெண்களில் பலர், அதனை உட்கார்ந்த நிலையிலேயே பயன்படுத்த விரும்புகின்றனர். மின்சாரத்தினால் இயங்கும் பம்பினைப் பயன்படுத்தும் போது பம்பின் உறுஞ்சு திறனை உறுத்தாத அளவில் வைத்துக்கொள்ளவும். சில பம்ப் வடிவங்களில் பம்பின் சுழற்சி வேகத்தினை நமக்கு ஏற்றார் போல் வைத்துக் கொள்ள வசதி தருகிறது. சில பெண்கள், ஆரம்பத்தில் அதிகமான சுழற்சி வேகத்தினை வைத்து பின்னர் பால் சீராய் வெளிவர ஆரம்பித்த உடன் பம்பின் சுழற்சி வேகத்தினைக் குறைத்துக்கொள்வார்கள்.

5. மார்பின் மீதும் காம்பின் மீதும் பொருந்துமாறு இருக்கும் கூம்பு போன்ற மார்பகப் பம்பின் பகுதி, சரியான அளவாய் இருத்தல் வேண்டும். பம்பினை உபயோகிக்கும் போது, காம்பானது பம்பினுடைய கூம்பின் சுவர்களில் உராய்ந்து கொள்ளாமல் இருக்க வேண்டும். மார்பகங்களை முறையாய் பம்ப் செய்து பாலினை வெளிக்கொணர எதுவாக சரியான அளவிலான, பொருத்தமான கூம்பினை உடைய பம்பினை வாங்குதல் நலம்.

## பம்ப் செய்யும் அளவு:

வேலை நேரத்தில் பாலினை வெளிக்கொணர பம்பினைப் பயன்படுத்தும் பொழுது, குழந்தையின் தாய்ப்பால் அருந்தும் நேரம் மற்றும் அளவிற்கு ஏற்றார் போல் இருந்தால் போதும். 8 மணிநேரத்தில் மூன்று முறை பம்ப் செய்தல், இயற்கையான தாய்ப் பால் சுரத்தலுக்கு ஏதுவானது.

## தாய்ப் பால் சுரத்தலினை அன்றாடம் கவனித்தல்:

மார்பகப் பம்பினை மாத்திரம் பயன்படுத்தும் பெண்களும் வேலை நேரத்தில் தாய் பால் சுரத்தலினை உறுதிசெய்யும் பொருட்டு பம்பினைப் பயன்படுத்தும் பெண்களும் தங்கள் குழந்தைக்குத் தேவையான தாய்ப்பாலினை நாம் சுரக்கிறோமா என்ற கேள்வியோடு இருப்பார்கள். அதனை முறையாக கணிக்கும் பொருட்டு, எத்தனை முறை பம்ப் செய்கிறோம், எவ்வளவு பால் வெளிக்கொணரப் பட்டிருக்கின்றது என்பதனை அட்டவணை போடுதல் அவசியமானது. மார்பகப் பம்பினை மாத்திரம் பயன்படுத்தும் பெண்கள் இரண்டாவது வார இறுதியில் ஒரு நாளைக்கு 850 முதல் 900 மில்லி லிட்டர் அளவிற்கான தாய்ப்பால் சுரத்தலினைக் காணவேண்டும். குறைப்பிரசவத்தினில் பிறந்த குழந்தைக்கு ஆரம்பத்தில் தாய்ப்பாலின் அளவு குறைவாக இருந்தாலும் குழந்தை வளர வளர அதன் தேவை அதிகமாகும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

நமது சமூகத்தில் ஒரு புறம் பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் புகட்டுவதின் நன்மைகள் குழந்தைக்கு மாத்திரம் அல்ல பெற்ற தாய்க்கும் நலம் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறோம். அதே சமயம், வேலையிடத்தில் இருக்கும் பெண்களுக்கு வேலைக்கு நடுவே இடைவெளியென்றொன்று இருப்பதில்லை அல்லது அவர்களது கூலி ஒரு மணிநேரத்திற்கு இத்தனை என்று சொல்லப்பட்டிருப்பதால் இடையே இடைவெளி எடுத்துக்கொள்ளாமல் வேலை செய்கின்றனர். பிள்ளை பெற்ற நாட்களில் பணம் எத்தனை முக்கியம் என்று அனைவருக்கும் தெரியும், அதனால் தான் பல சமயம் குழந்தைக்குத் தாய்ப்பால் கூட கொடுக்காமல் வேலைசெய்ய சில பெண்கள் உந்தப்படுகின்றனர் என்பதும் புரிந்துக்கொள்ளக்கூடியதே. பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் புகட்டு என்று சொல்லத்தெரிந்த சமூகம் புதியதாய் பிள்ளையைப் பெற்றெடுத்த தாயின் நேரத்தேவைகளை, தாயாய் அவள் செய்யும் கடமைகளை உணர்ந்துகொள்ள மறுப்பதால் தான், மார்பகங்களைப் பம்ப் செய்து தாய்ப்பாலினை வெளிக்கொணர்தல் என்றொன்று இன்று தாய்மார்களால் வழக்கப்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கின்றது. மாறி வரும் சமூக பொருளாதாரச் சூழலில் ஒரு தாய், தாயாய் இருப்பதனால் மேற்கொள்ள வேண்டிய கடமையினை முறையாய் மேற்கொள்ளும் தனிப்பட்ட போராட்டத்தின் ஒரு வெளிப்பாடு தான் இது.

ஒரு தாய் தன் குழந்தைக்கு தாய்ப்பால் புகட்டுவது கடமையென்றால் அதை உணர்ந்து, அதற்கான சூழலினை அத்தாய்க்கு வழங்குவது சமூகத்தின் கடமை. இது சமூகத்தின் பொறுப்பு. ●

# தமிழ்த்தேசியமும் தலித்தியமும் அயோத்திதாசரும்

இன்றைக்கு அல்ல தந்தை பெரியார் காலத்தில் இருந்தே திராவிட சித்தாந்தங்களை ஒப்புக்கொள்ளாத போக்கு ம.பொ.சி வகையறாக்களிடம் உண்டு. இவர்கள் திராவிடத்தை அது ஏற்படுத்திய மறுமலர்ச்சியை மறுப்பார்கள். எனினும் மறுபுறத்தில் இந்தியத்திடம் மண்டியிட்டுக் கிடப்பார்கள். இந்தி எழுத்துகளை அழிக்க வேண்டும் என தந்தை பெரியார் தனி ஆளாகத் தொடர் வண்டி நிலையங்களில் உள்ள இந்தி எழுத்துகளை அழித்துக்கொண்டு வரும்போது, மண்ணெண்ணெய் கொண்டு அந்த தாரை அழித்த வரலாறு ம.பொ.சி மற்றும் தமிழ்த்தேசியத்திற்கு உண்டு. இன்று பல்வேறு அணிகளாக அவர்கள் பிரிந்து இருந்தாலும் திராவிட எதிர்ப்புக்கொள்கையில், பெரியார் எதிர்ப்பில் அவர்கள் இணைந்து கொள்வதைப் பார்க்க முடியும். இதில் முக்கியமாக ஒரு செய்தியைப் பார்க்க வேண்டும்; இந்த தமிழ்த்தேசியத்திற்கு சற்றும் குறைவில்லாத அளவிற்கு இன்று தலித்தியம் பேசுகின்றவர்கள் தந்தை பெரியாரை எதிர் நிலையில் வைத்து பேசும் போக்கு பல ஆண்டுகளாகவே அதிகரித்து உள்ளது என்பதை நாம் அறிவோம்.

ஆரம்ப காலங்களில் தந்தை பெரியார் அண்ணல் அம்பேத்கர் கொள்கைகளை முன்னெடுத்தவர்கள் இன்று தந்தை பெரியாரை ஒடுக்கப்பட்ட மக்களின் எதிரி என்பது போல் சித்தரித்து, அவர் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான தலைவர் என்பதை வலியுறுத்தி பொய் பரப்புரை செய்வதை நாம் பார்க்கின்றோம். அந்த இடத்தில் பண்டிதர் அயோத்திதாசரை கொண்டு வந்து நிறுத்துகின்றனர்; அதற்கு அவர்கள் கூறும் காரணம், தந்தை பெரியார் பண்டிதரின் புகழை மறைத்துவிட்டார் என்றும் திராவிடர்கள் எனும் பதத்தை முதன் முதலில் அவர்தான் பயன்படுத்தினார் என்றும் காரணம் கூறுகின்றனர். தந்தை பெரியார் திராவிடர் எனும் சொல்லைக் கொண்டு புது அரசியல் மாற்றத்தை சமூகப் புரட்சியாக இங்கு நடாத்திக்காட்டினார். அதனை ஒரு சமூக இயக்கமாக மக்களிடம் கட்டமைத்து கொண்டு சேர்த்தார் எனும் உண்மையை அவர்கள் ஆராயவும் ஏற்றுக் கொள்ளவும் தயாராக இல்லை. பெரியார் அயோத்திதாசரை மறைக்கவில்லை எனும் உண்மையை அவர் வரலாற்றைப் படித்தாலே உணர்ந்துகொள்ள முடியும். திராவிடர் இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு அவர்கள், திராவிட இயக்கம் தலித்துகளுக்கு எதிரானதா எனும் நூலில் பின்வருமாறு வினா எழுப்புகின்றார்.

அயோத்திதாசரது நூல்களான பூர்வத் தமிழொளி எனும் புத்தரது ஆதிவேதம், விபூதி ஆராய்ச்சி, யதார்த்த பிராமண, வேஷ பிராமண வேதாந்த விவரம் போன்ற பல நூல்கள் நமக்கு 1980ஆம் ஆண்டின் கடைசியில்தான் கிடைத்தன. 1960களில் திரு.வி.க.வின் வாழ்க்கைக் குறிப்புகளைப் படித்த நமக்கு - பெ.சு. மணி எழுதியதற்குப் பிறகு - நம் தோழர் எஸ்.வி. இராஜதுரை நீலகிரியிலிருந்து படியெடுத்து அனுப்பினார். இதற்கு இடையில் எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்துள்ளன. இப்படி நூல்கள் இருப்பதாகவே எவர்க்கும் தெரியாமல் போனதேன்? இவற்றை யார் மறைத்தது?

- *1938 வரை வாழ்ந்த ஆர். வீரையன் அயோத்திதாசர்க்கு என்ன செய்தார்?*
- *1941 வரை வாழ்ந்த ம. பழனி சாமி அயோத்திதாசரது சிந்தனைகளைப் பிரச்சாரம் செய்தாரா?*
- *1945 வரை வாழ்ந்த இரட்டை மலை சீனிவாசன் அயோத்திதாசப் பண்டிதரின் சிந்தனைகளை - நூல்களை முன்னெடுத்துச் செல்லாமல் பதிப்பிக்காமல் போனதேன்?*
- *1947 வரை வாழ்ந்த எம்.சி. ராஜா அயோத்திதாசரை நினைவுபடுத்த என்ன செய்தார்?*
- *1958 வரை வாழ்ந்த சுவாமி சகஜானந்தாவுக்கு அயோத்திதாசர் பற்றிய மதிப்பீடு என்ன? அவர் அயோத்தி தாசரது சிந்தனைகளுக்குச் செய்தது என்ன?*
- *1964 வரை வாழ்ந்த மேயர் சிவராஜ் அயோத்திதாசரது சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்ல உதவினாரா?*
- *1966 வரை வாழ்ந்த எல்.சி. குருசாமி அயோத்திதாசரது சிந்தனைகளை வெளிப்படுத்தாதது ஏன்?*

இப்படித் தாழ்த்தப்பட்ட தலைவர்களை வரிசைப்படுத்திக் காட்டிக் கேட்க முடியும்? ஆனால் குழப்பம் விளைவிப்பவர்களின் செயல் அது என்பதால் நாம் அறிவார்ந்த விவாதத்தை மட்டுமே விரும்புகின்றோம்.

மேலும் வள்ளலார் அவர்கள் அயோத்திதாசர் அவர்களுக்கு முன் வாழ்ந்து மறைந்தவர். அவர் சைவ மதத் துறவி என்றபோதும் ஆரிய எதிர்ப்பு, வேத மத எதிர்ப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு அவர் பாடல்களில் மிளிரும். அவருக்குப்





◉ தோழர் **கனிமொழி**



பின் தோன்றிய அயோத்திதாசர் இராமலிங்க அடிகள் பற்றி கூறவே இல்லை என்று அடம் பிடிப்பது அறிவிற்கு ஏற்ற செயலா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, தமிழ்த்தேசியம் பேசிடும் நபர்கள் பெரியாரை மறுத்து அயோத்திதாசரை ஏற்றுக்கொள்வதை நாம் பார்க்க முடியும். அவர்களைப் பொறுத்தவரையில் அண்ணல் அம்பேத்கர் வேற்று மாநிலத்தவர் அயோத்திதாசர் தமிழ்நாட்டில் பிறந்தவர் என்ற காரணம் மட்டுமல்லாமல் தமிழ்த்தேசியம் வலியுறுத்தும் ஜாதியை எந்த இடத்திலும் ஒழிக்க வேண்டும் என கருதாதவர் பண்டிதர் என்பதே அவரை ஏற்றுக் கொள்ள உண்மை காரணம்; ஏனெனில் தமிழ்த்தேசியத்தின் படி ஜாதி நல்லது படிநிலைகள் தான் கூடாது எனும் அரிய தத்துவத்தைக் கொண்டவர்கள்.

அயோத்திதாசரின் ஜாதிய மனநிலையை அவரின் பல்வேறு நூல்களில் பார்க்க முடியும். அவரின் பார்ப்பனிய சிந்தனை நமக்கு விளங்கும்; அவரின் கட்டுரை ஒன்றில், 'இந்தியாவில் தாழ்த்தப்பட்ட ஜாதியோருக்கு நியமிக்கப்பட்ட சங்கம்' என்ற தலைப்பிட்ட கட்டுரையில் அயோத்திதாசர் இவ்வாறு எழுதுகிறார்.

இந்த டிசம்பர் மாதம் விடுமுறைக் காலத்தில் சில பெரியோர்கள் கூடி இந்தியாவில் தாழ்த்தப்பட்டுள்ள சாதியோரைச் சீர்திருத்த வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

இவற்றுள் இயல்பாகவே அறிவின்றித் தாழ்ந்துள்ள சில வகுப்பாரும் உண்டு. சாதித் தலைவர்களின் விரோதத்தால் தாழ்த்தப்பட்டுள்ளவர்களும் நாளது வரையில் தாழ்த்தி வருகிறவற்றுள் தாழ்ந்தவர்களுமாகிய ஓர் வகுப்பாரும் உண்டு.

அவர்கள் யாரென்பீரேல் குறவர், வில்லியர், சக்கிலியர், மலமெடுக்கும் தோட்டிகள் இயல்பாகவே தாழ்ந்த நிலையிலுள்ளவர்கள்.

சாதித் தலைவர்களாகும் வேஷ பிராமணர்களால் பறையரென்றும், சாம்பாரென்றும் வலங்கையரென்றும் கூறி அவர்களைச் சுத்த ஜலங்களை மொண்டு குடிக்க விடாமலும், வண்ணார்களை வஸ்திரமெடுக்க விடாமலும், அம்மட்டர்களை சவரஞ்செய்ய விடாமலும், அந்தஸ்தான உத்தியோகங்களில் பிரவேசிக்க விடாமலும், ஏதோ துரை மக்கள் கருணையால் ஓர் உத்தியோகத்தை பெற்றுக்கொண்ட போதிலும் அதனினின்று முன்னுக்கு ஏறவிடாமலும் பலவகை இடுக்கங்களைச் செய்து தாழ்த்திக் கொண்டே வருகிறார்கள். இவர்களைத் தாழ்ந்த வகுப்பார் என்று கூறலாகாது. சாதிபேதமுள்ள மற்றவர்களால் தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்று கூறல் வேண்டும்.

இவற்றுள் கூளங் குப்பைகளுடன் குணப்பெரும் பொருட்களையும் சேர குவித்து குப்பைக் குழியென்பது போல கல்வியிலும், நாகரீகத்திலும், விவேகத்திலும், ஒற்றுமையிலும் மிகுந்து வேஷ பிராமணர்கள் கற்பனா கதைகளுக்கிணங்காமல் விரோதிகளாய் நின்ற திராவிட பௌத்தர்கள் யாவரையும் பறையர், சாம்பார், வலங்கையரென்று தாழ்த்திக் கொண்டதுமின்றி சக்கிலி, தோட்டி, குறவர், வில்லியர் இவர்கள் யாவரையும் ஐந்தாவது சாதியென்றும், பஞ்சம சாதியென நூதன பெயரிட்டு மேன்மக்களாம் பௌத்தர்களையும் அக்குப்பையில் சேர்த்து பஞ்சம சாதியென்று வகுத்திருக்கின்றார்கள்." (அயோத்தி தாசர் தொகுதி 1, ப.97)

அறிவின்றி தாழ்ந்த வகுப்பார் என்பது ஜாதி ஒழிப்புச் சிந்தனையா? மேன்மக்களாம் பௌத்தர்களை பஞ்சம ஜாதி என்று சக்கிலி, தோட்டி, வில்லியர் இவர்களோடு சேர்த்துவிட்டது மிகத் தவறு என்று எழுதுகின்றார். பல இடங்களில் ஜாதி பேதமற்ற பௌத்தர்கள் எனக் கூறுவது பறையர்களில் உள்ள உட்ஜாதிகளை குறிப்பிட்டே என்பதை அவர் சிந்தனைகளை படிக்கின்றபோது உணர முடியும்! இது ஒரு துளி தான்; அவர் சிந்தனை தொகுப்பை படித்தால் அவர் பறையர்களைத் தவிர மற்றவர்களைக் குறிப்பாகச் சக்கிலிய மக்களை எந்த அளவுக்கு இழிவாக கருதி உள்ளார் என்பது விளங்கும்; இந்த பறையர் குல உழைப்பாளரைத் தான் தந்தை பெரியார் எனும் ஜாதி ஒழிப்பு போராளி மறைத்துவிட்டதாக தலித்திய தோழர்கள் பலர் கதைக்கின்றனர்.

சரி இதில் தமிழ்த்தேசியர்கள் என்ன செய்கின்றார்கள் என்றால், அயோத்திதாசரை ஏற்றுக்கொண்டு பறையர்களை சாம்பவ குல வேளாளர், வீர சோழ பறையர் என அழைத்துக்கொண்டால் அவர்கள் மேன்மை பெற்று விடுவார்கள் எனக் கூறித் திரிகின்றனர். அண்ணலை, தந்தை பெரியாரை ஏற்றுக்கொள்ள மறுக்கும் தமிழ்த்தேசியவாதிகள் அயோத்திதாசரை ஏற்றுக் கொள்ளும் காரணம் இரண்டு; ஒன்று இனத் தூய்மை அடிப்படையில் தமிழர் மற்றொன்று அவர் ஜாதி ஒழிப்பு போராளி அல்ல; அவர் பறையர் ஜாதி உயர்ந்தது என நிறுவ முயன்றவர் என்பதால் தான்; ஏனெனில் தமிழ்த்தேசியத்திற்கு ஜாதி நல்லது ஏற்றத்தாழ்வுகள் கூடாது என்பது தானே அடிப்படை? சாக்கடை இருக்கலாம் ஆனால் கொசு மட்டும் உற்பத்தி ஆகக் கூடாது என்பதில் என்ன தெளிவு இருக்க முடியும்?

தமிழ் நாட்டு வரலாற்றில் தந்தை பெரியாரைப் புறக்கணிக்கும் எவருக்கும் அது தமிழ்த்தேசியமாக இருந்தாலும் தலித்தியமாக இருந்தாலும் இறுதியில் தோல்வியே என்பது தான் வரலாறு. ●



# கயிறுல கிருமி?

கதிரவன் கிழக்கில் மெல்ல எட்டிப்பார்த்தது. குயில்கள் காலைப் பண் பாடத் தொடங்கியது. கதிரவன் ஒளி முகத்தில் பட்டவுடன், போர்த்தி இருந்த போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டு படுக்கிறார் ஆதவன். காலை குளிரில் முழுதும் போர்த்திக் கொண்டு கட்டிலில் படுத்திருப்பதுதான் என்னே சுகம்!

ஆதவன் அருகில் வந்த நின்ற தாத்தா, “யப்பா ஆதவா, தாத்தா ஆத்துக்கு போறேன். வறீங்களா?” என்றதை கேட்டதுதான் போதும், மின்னலென போர்வையை விட்டு இருட்டைக் கிழித்துக் கொண்டு துள்ளி குதிக்கிறார் ஆதவன்.

“வந்தேன் தாத்தா” என்று விறு விறுவென பல்லை விளக்கச் செல்கிறார்.

பல் விளக்கி, பால் அருந்திவிட்டு, தாத்தாவுடன் ஆற்றில் சென்று குளிப்பதற்காக மாற்றுத்துணிகள், துண்டு, சோப்பு ஆகியவற்றை ஒரு பையில் எடுத்து வைத்துக் கொள்கிறார். தாத்தாவும் தன் பங்குக்கு தனக்குத் தேவையானவற்றை ஒரு பையில் எடுத்து வைத்துக் கொள்கிறார். தாத்தா கிளம்பி தயாராகும் முன்னே, ஆதவன் கிளம்பி தாத்தாவின் சைக்கிளின் அருகே தயாராய் தாத்தாவின் வருகைக்காக காத்திருக்கிறார். இருக்காதா பின்னே, ஆற்றுக்கு போக வேண்டுமே!

ஆதவனுக்கு ஆற்றில் குளிப்பதென்றால் கொள்ளைப் பிரியம். உடல் தூய்மைக்கு மட்டுமல்ல; நகரத்தில் சதுர அடியில் அளந்து நீச்சல் குளம் கட்டி, அதற்குள் நெருக்கடியில், நீ, நான் என்று நீந்தி கற்கும் பயிற்சியைக் காட்டிலும், ஓடும் ஆற்றில், ஆடும் மீனோடு, எல்லையில்லாமல் விளையாடும் பாங்கு மனத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டுவதாய் இருக்கும். அதுவே ஆதவன் ஆற்றில் குளிக்க விரும்பும் ஊர் அறிந்த ரகசியம்.

அதோடு ஆற்றுக்கு போகும் வழியில், தாத்தாவோடு சைக்கிளில் போகும்போது பேசிக்கொண்டே, ஆலமரம், அரசமரம், குளம், குட்டை, வயல், வாய்க்கால், வரப்பு, தோப்பு என்று பார்த்துக்கொண்டே செல்வது ஆதவனுக்கு இதமாய் இருக்கும்.

தாத்தா தயாராகி சைக்கிள் அருகே வருகிறார்.

ஆதவன், “தாத்தா, இன்னிக்கு நா சைக்கிள் ஓட்டவா?”

தாத்தா சிரித்துக்கொண்டே, “இந்த சைக்கிள்ள சைட் ஸ்டாண்ட் இல்லப்பா. உனக்கு உயரம் பத்தாது. தோது பத்தாது. இன்னும் கொஞ்ச நாள் செல்லட்டும், அப்ப ஓட்டலாம். சரியா?”

ஆதவனும் தாத்தா பேச்சைக் கேட்டுக்கொண்டு, “சரி தாத்தா” என்கிறார்.

தாத்தா சைக்கிளில் அமர்ந்தவுடன் ஆதவனும் சைக்கிளில் ஏறி அமர்ந்துகொண்டு, பேருந்தில் நடத்துனர் சொல்வது போல், “ரெய் ரெய்” என சொல்ல, தாத்தாவும் சைக்கிளை மிதிக்கத் தொடங்கினார்.

ஆதவன் சைக்கிளில் செல்லும்போது, தன் கண்களை அகல விரித்தபடி, தான் பார்த்து பார்த்து வியந்த ஊரை மீண்டும் மீண்டும் பார்த்து வியக்கிறார். சைக்கிள் எவ்வளவு நேரம் சென்றிருக்கும் என்று தெரியவில்லை. மெல்ல மெல்ல சைக்கிளின் வேகம் குறைந்தது. பக்கவாட்டில் சாய்ந்து எட்டிப் பார்த்த ஆதவனுக்கு, குளக்கரையை நெருங்குவது தெரிந்தது. குளக்கரையில் ஓர் அழகிய அரசமரம். அரசமரத்தடியில் சைக்கிளை நிறுத்தினார் தாத்தா.

ஆதவன் தாத்தாவைப் பார்த்து, "ஏன் தாத்தா சைக்கிளை நிறுத்துறீங்க. ஆத்துக்கு அழச்சிட்டு போறேன்னுதான சொன்னீங்க. இப்ப குளத்தில வந்து நிறுத்தறீங்க?" என வினவினார்.

தாத்தா, "ஆத்துக்குத்தாம்ப்பா போறோம். அரசமரத்தடியில ஒரு பிள்ளையார் சிலை இருக்கு. அந்த பிள்ளையார் சிலை கையில இருக்க கயிறை கழட்டி கையில் கட்டிகிட்டா, நோய் நொடி, காத்து கருப்பு அண்டாதுன்னு ஒரு அய்தீகம். அதான், அந்த கயிற எடுத்து உனக்கு கட்டி விடலாம்னு, சைக்கிள நிப்பாட்டினேன்" என்றார்.

ஆதவன் யோசித்தவாறே, "எனக்குத்தான் தடுப்பூசி எல்லாம் போட்டிருக்காங்களே. சத்தான உணவு, பால், எல்லா காயும், எல்லா பழமும், எல்லா கறியும் சாப்பிடறேனே. அப்பறம் ஏன் எனக்கு நோய் நொடி வரப்போகுது?" என்றார்.

தாத்தாவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை."அதெல்லாம் ஒரு அய்தீகம்ப்பா" என்று மட்டும் சொன்னதோடு நிறுத்திக் கொண்டார்.

ஆதவன் விடுவதாய் இல்லை, "ஓ! அது சரி! அது என்ன தாத்தா 'காத்து கருப்பு'? காத்துன்னா *Wind*. கருப்புன்னா *Black*. 'காத்து கருப்பு' அப்பிடின்னா *Black Wind*-ஆ? *Wind*க்கு எப்படி தாத்தா *Colour* இருக்கும்?"

தாத்தா, "காத்துக் கருப்புன்னா பேய்ப்பா. அது அண்டாம இருக்கத்தான் இந்தக் கயிறு" என்றார்.

ஆதவன் அமைதியாய் கேட்டுக்கொள்கிறார்.

அரச மரத்தடியில் உள்ள விநாயகர் சிலை அருகே சென்றனர் இருவரும். அந்த சிலையை உற்றுக் கவனித்தார் ஆதவன். அந்த சிலை கழுத்தில் ஒரு தெறிப்பு இருந்தது.

ஆதவன், "தாத்தா, இந்த சிலை கழுத்துல ஒரு தெறிப்பு இருக்கே. அது எப்படி வந்துச்சு? யாராச்சும் உடச்சிட்டாங்களா இந்த சிலைய?" என்றார்.

தாத்தா, "தெரியலப்பா. நா சின்ன புள்ளயா இருந்தப்பலேந்து இத கவணிச்சிருக்கேன். இந்த தெறிப்பு கழுத்தில இருக்கு. எங்க தாத்தா காலத்துலல்லாம் இதே அரச மரத்தடியில புத்தர் சிலை இருந்துச்சாம். அப்புறம் கொஞ்ச காலத்தில, பக்கத்து டவுனுல வேதக் கோயில் வந்த உடனதான் சுத்துப்பட்டுல நிறைய புள்ளயார் செல முளைச்சுச்சு. அப்படித்தான் ஒரு நாள் காலையில பாத்தா இங்க இருந்த புத்தர் சிலைக்கு பதிலா புள்ளையார் சிலை இருந்துச்சாம். ஊர் பெரியவங்க எல்லாம் விசாரிச்சு பார்த்தாங்க. இந்த புள்ளயார் சிலய எடுத்தா ஊருக்கு ஆகாது, சாபம் ஆயிடும்ன்னு, பக்கத்து டவுன் வேதக் கோயில் புரோகிதர் சொல்லவும், ஊர் பெரியவங்க, இத அப்படியே உட்டுட்டாங்கன்னு கேள்வி பட்டேன்."

ஆதவன், "செம சுவாரசியமா இருக்கு தாத்தா. ராத்திரி புத்தர். தூங்கி எந்திரிச்சா, காலையில தலையில ஆபரேஷன் செஞ்சு புள்ளயார் ஃபிட்டிங். செம இன்ட்ரெஸ்டிங் டுவிஸ்ட் தாத்தா" என சிரித்துக் கொள்கிறார்.

தாத்தாவும், பேரனின் நகைச்சுவை உணர்வை எண்ணி சிரிக்கிறார். சிரித்துக் கொண்டே தாத்தா விநாயகர் சிலையில் இருந்து ஒரு கயிறை எடுத்து, வாயால் தூசு தட்டிவிட்டு, துண்டில் துடைத்துவிட்டு, ஆதவன் கையில் கட்டி விடுகிறார். ஆதவன் அந்த கயிறை கட்டிக்கொண்டு ஸ்டைல் செய்துகொள்கிறார். தாத்தாவும் ஆதவனும் சைக்கிளில் ஏறி ஆற்றை அடைகின்றனர்.



ஆற்றில் ஆனந்தக் குளியல் செய்கிறார் ஆதவன். மீனோடு தானும் நீந்தி மகிழ்கிறார். ஆற்றை விட்டு வெளியே வந்து, தான் போட்டிருந்த உடுப்பை எல்லாம் ஒரு பையில் போட்டுக் கொண்டு, மறு உடுப்பு உடுத்திக் கொள்கிறார்.

மீண்டும் சைக்கிள் பயணம். தற்போது, இல்லம் நோக்கி. ஆற்றை நோக்கி வரும் போது, ஊரை நோக்கிய ஆதவன் கண்கள். திரும்பவும் இல்லம் நோக்கிச் செல்லும் போது, கையில் கட்டி இருந்த கயிறையே நோக்கின ஆதவன் கண்கள். கயிறை அவ்வப்போது தடவியபடியே ஏதோ யோசனையில் இருந்தார்.

இல்லம் வந்து சேர்ந்தவுடன், அம்மா, அப்பா, பாட்டி என அனைவரிடமும், ஊர் சுற்றிய அனுபவத்தையும், அரசமரம், புத்தர், விநாயகர் சிலை, குளம், ஆறு, கயிறு என எல்லாவற்றையும் பற்றியும் கொஞ்சமும் கயிறு திரிக்காமல், கண்டதை கண்டபடி சொல்லிக் காட்டினார்.

அம்மா, "சரி ஆதவா, நீ போட்டிருந்த சட்டை துணிகள் எல்லாம் அழுக்காயிருக்கும். அது எல்லாத்தையும் துவைக்கிற கூடையில் போடுப்பா" என்கிறார்.

ஆதவன், "ஏம்மா, ஒரு தடவ போட்ட துணிய இன்னொரு தடவ போடக் கூடாதாம்மா? ஏன் அந்த துணியல்லாம் துவைக்கணும்?"

அம்மா, "தினமும் குளிக்கறீங்களே. அது ஏன்?"

ஆதவன், "அப்பதான் உடம்புல இருக்கற அழுக்கெல்லாம் போய், பாக்டீரியா, கிருமி எல்லாம் இல்லாம சுத்தமா இருக்க முடியும் அதான்."

அம்மா, "ம், சரி! அதே போலதான் துணிக்கும். நாள் பூரா உடம்பில் இருந்த அழுக்கு, அப்புறம் வெளிப்புற அழுக்கு எல்லாம் சேந்து சட்ட துணியெல்லாம் அழுக்கு ஏறிடும்."

ஆதவன், "அப்படியா? அந்த அழுக்கு துணியவே திரும்ப போட்டுகிட்டா என்ன ஆகும்?"

அம்மா, "துணில இருக்கற கிருமி உடம்புல வந்து உக்காந்துகிட்டு நோய் வந்திடும். நோய் இல்லாம நம்மள பாதுகாக்கனும்னா, நாம சுத்தமா இருக்கனும். நாம சுத்தமா இருக்கனும்னா, உடம்பும் சுத்தமா இருக்கனும். உடையும் சுத்தமா இருக்கனும். அத விட முக்கியம் உள்ளம் சுத்தமா இருக்கனும். புரிஞ்சுதா சுட்டிப் பையா?" என் மண்டையில் செல்லமாய் ஒரு குட்டு வைக்கிறார்.

ஆதவன், "ம். புரியுதும்மா. உள்ளத்த எந்த சோப் போட்டு குளிப்பாட்டறதும்மா?" என சிரித்துக் கூறிக்கொண்டே கேட்கிறார். ஆதவன் சற்றே யோசித்துவிட்டு, தன் கையில் தாத்தா கட்டிய கயிறைக் காட்டி சந்தேகத்தோடு, "இந்த கயிறுலயும் கிருமி இருக்குமோ?" எனக் கேட்கிறார்.

ஆதவனின் அடுக்கடுக்கான அறிவான கேள்விகளை அமைதியாய் ஆனந்தமாய் ரசித்துக் கேட்டுக்கொண்டிருந்த தாத்தா, இப்போது கத்திரிகோலைத் தேட ஆரம்பித்தார். ●

# வீழ்த்தப்பட முடியாதவர் வீரமணி!

அய்யாவின் தேர்வு எப்போதும் சோடை போனதில்லை. சோடை போயிருந்தால் அது அய்யாவின் தேர்வாக இருந்திருக்காது. அய்யாவே நேரடியாகத் தேர்வு வைத்துத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் மிக முக்கியமானவர்கள் இரண்டு பேர். அவர்கள் இருவர் இல்லாமல் தமிழ்ச்சமூக, அரசியல் வரலாறு எழுதப்பட முடியாது. இருவரில் முதலாமவர் பேரறிஞர் அண்ணா. இரண்டாமவர் ஆசிரியர் கி. வீரமணி!.

திருப்பூரில் தனக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டிருந்த இளைஞரிடம், ‘என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டால் அய்யா ‘படித்து முடித்துவிட்டேன், சமூகப் பணியாற்றவே விருப்பம்” என்கிறார் அந்த இளைஞர் ‘என்னோடு வந்துவிடுகிறீர்களா? ஏன்று கேட்டார் அய்யா, அப்படி அய்யாவுடன் கிளம்பியவர் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆக அண்ணா!.

“விடுதலை’ ஏட்டை நிறுத்திவிடலாம், அதைக் கவனித்து நடத்த யாருமில்லை” என்ற கவலையை அந்த இளைஞனிடம் அய்யா சொல்கிறார். ‘கொள்கையை விளக்க ‘விடுதலை’ நாளேடாக வருவது தான் சிறந்தது, அதை நிறுத்திவிட்டு வார ஏடாகத் தொடங்குவது பின்னோக்கிச் செல்வது மாதிரி ஆகிவிடும். நம் இன எதிரிகளுக்கும் அது வாய்ப்பாக ஆகிவிடும்” என்கிறார் அந்த இளைஞர். ‘நீங்கள் சென்னை வந்து ‘விடுதலை’ ஆசிரியர் பொறுப்பை ஏற்று நடத்துவதற்கு ஒப்புக் கொண்டால் கவலை இல்லாமல் உங்களிடம் ஒப்படைக்கத் தயார்” என்கிறார் அய்யா. அப்படி 1962-ஆம் ஆண்டு கிளம்பி வந்த இளைஞர் தான் 86 வயதில் ‘விடுதலை’யை மட்டுமல்ல, சமூக விடுதலை இயக்கமாம் திராவிடர் கழகத்தின் தலைவராய், இன எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாய் இருக்கும் ஆசிரியர் கி.வீரமணி. இந்த டிசம்பர் மாதம் 2-ஆம் நாள் அவருக்குப் பிறந்த நாள். அவர் கொண்டாடுவது இல்லை. இனம் கொண்டாடுகிறது!.

**தோழர் வீரமணி அவர்கள், நான் உட்பட பலர் வேண்டுகோளுக்கும், விருப்பத்திற்கும் இணங்க, கழகத்திற்கு முழு நேரத் தொண்டராய் இருக்கத் துணிந்து, பத்திரிகைத் தொண்டையும் பிரச்சாரத் தொண்டையும் தன்னால் கூடிய அளவு ஏற்றுக் கொண்டு, தொண்டாற்ற ஒப்புக் கொண்டு குடும்பத்துடன் சென்னைக்கே வந்துவிட்டார். இது நமது கழகத்திற்கு கிடைக்க முடியாத ஒரு பெரும் நல்வாய்ப்பு என்றே கருதி திரு. வீரமணி அவர்களை மனதார வரவேற்பதோடு கழகத் தோழர்களுக்கும் இந்த நற்செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முழு நேரப் பொதுத் தொண்டுக்கு இசைந்து முன்வந்தது குறித்து நான் அதிகாரத்தோடு அவரைப் பாராட்டி வரவேற்கிறேன்” – (விடுதலை 10.8.1962) –** என்று அன்பால் எழுதி வரவேற்றார் அய்யா அவர்கள்.

பெரியாரே ஆசிரியர் அவர்களை அழைத்துச் சென்று ‘விடுதலை’ அலுவலகத்தின் ஆசிரியர் இருக்கையில் அமர வைக்கிறார். ‘வீரமணி கிடைத்தது ஒரு பெரும் நல் வாய்ப்பு, நற்செய்தி” என்ற சொற்களைப் பெரியார் அவர்கள் சும்மா ஒப்புக்குப் பயன்படுத்தவில்லை என்பதற்கான உதாரணம் இந்தக் காட்சி. எந்தவொரு இயக்கமும் தலைவரால், அவர் உருவாக்கிய தத்துவத்தால் மட்டும் நிலைத்து நிற்பதில்லை நீடிப்பதுமில்லை. அந்தத் தலைவருக்குப் பிறகு, தத்துவத்தை முன்னெடுத்துச் செல்ல யார் வருகிறார்கள் என்பதைப் பொறுத்தே இயக்கமும் நீடிக்கிறது. அந்தத் தலைவரும் உயிர்ப்போடு உச்சரிக்கப்படுவார். பெரியாருக்குப் பிறகு வீரமணி, அண்ணாவிற்குப் பிறகு கலைஞர் என்ற வரிசை, வார்ப்பு சரியாக அமைந்ததால் தான் இது இன்னமும் ‘திராவிட நாடாகவே” தொடர்கிறது. இங்கு ஆட்சியாக இருந்தாலும் ‘திராவிட ஆட்சி’யாகத் தான் இருக்கும், சுடுகாடாக இருந்தாலும் ‘திராவிடச் சுடுகாடாக’த்தான் இருக்கும். இதற்கு



ப.திருமாவேலன், பத்திரிகையாளர்

இந்த நான்கு பேர் தான் நடுநாயக கர்த்தாக்கள்.

ஆசிரியர் திராவிடமணி இல்லையென்றால் ஆசிரியர் வீரமணி இல்லை. பத்து வயதில் பகுத்தறிவு விதையை தண்டபாணியின் மூளை அதற்காகவே பதப்படுத்தப்பட்ட களமாக இருந்ததால் சட்டென முளைத்தது. 'திராவிட நாடு" இதழில் கலிங்கராணி கதையை அண்ணா எழுதி வந்தார். அதில் ஒரு கதாபாத்திரத்தின் பெயர் 'வீரமணி". கடலூர் எஸ்.டி.ஜி. உயர்நிலைப்பள்ளியில் முதல் பாரத்தில் (I Form) சேர்க்க தண்டபாணியை அழைத்துச் சென்ற திராவிடமணி, 'வீரமணி" என்று எழுதிச் சேர்த்தார். 'திராவிடநாடு' இதழுக்கு நன்கொடை திரட்டி நிதிவழங்கும் பொதுக்கூட்டம் 1943 ஜுன் மாதம் 27-ஆம் நாள் கடலூரில் நடந்தது. அன்று முதன்முதலாக மேடையேறி ஒலிக்கத் தொடங்கிய வீரமான, இனமான மணியோசை இன்று வரை ஒலிக்கிறது.

'கடைத் தெருவில் கோவிலுக்குப் பக்கத்திலுள்ள திடலில் ஒரு பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் பன்னிரெண்டு வயது நிரம்பாத அந்தச் சிறுவன் ஏறி நின்று பிராமணர்களையும் நமது புராணங்களிலுள்ள ஆபாசங்களையும் கடவுள்களையும் 'கிழி கிழி" என்று கிழிப்பதை வாயைப் பிளந்து கொண்டு நானும் பார்த்தேன்' என்று எழுத்தாளர் ஜெயகாந்தன் பிற்காலத்தில் எழுதினார். பன்னிரெண்டு வயதில் மட்டுமல்ல 86 வயதிலும் வாயைப் பிளந்து கொண்டு கேட்கும் அளவுக்கு ஆச்சர்யப் பேச்சு கொண்டவர் ஆசிரியர். எதிரிகளின் வாதங்களை மட்டுமல்ல, அவர்களது தோலையும் உரித்து ரத்தச் சுத்திகரிப்பு செய்யக்கூடியது அவரது பேச்சு. ஒருமுறை வலம்புரி ஜான் சொன்னார், 'ஆசிரியர் பேச்சு' மட்டும் தான் பல்கலைக் கழகப் பாடம் கேட்பது போல் இருக்கும்" என்று. அதனால் தான் அவர் 'ஆசிரியர்'. நடத்துவது இனப் பாடம் என்பதால் 'சிலபஸ்'-க்கு முற்றுப்புள்ளியே இல்லை!.

1. 'விடுதலை"யைத் திராவிடத்தின் போர்வாளாக வளர்த்தெடுத்தது.
2. பெரியாரின் சிந்தனைகளுக்கு சட்டபூர்வ அரண் அமைத்தது.
3. அய்யாவின் மறைவுக்குப் பிறகு மணியம்மையாருக்கு இயக்கத் தொண்டில் உறுதுணையாய் இருந்தது.
4. அவசர நிலைப் பிரகடனக் காலத்தில் இயக்கத்தை காத்ததும் – ஓராண்டு காலச் சிறையும்.
5. மணியம்மையார் மறைவுக்குப் பின்னர் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று கொள்கைப் பிரச்சாரத்தை முன்னெடுத்தது.
6. அய்யா விட்டுச் சென்ற கழகம் – நிறுவனங்கள் – டிரஸ்ட் ஆகியவைகளை தனது தனித் திறனால் காப்பாற்றியது.
7. 1980–களின் தொடக்கம் முதல் அந்தப் பத்தாண்டு காலமும் ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கான விதையை தமிழகம் முழுவதும் விதைத்தது.
8. விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு தம்பி பிரபாகரனுக்கு தோன்றாத் துணையாக இருந்தது.
9. எம்.ஜி.ஆரின் பொருளாதார ஸ்கேலை உடைத்துப் போட்டு சமூக நீதி அளவுகோலைத் தூக்க வைத்தது.
10. மண்டல் ஆணையத்தின் அறிக்கையை செயல்பட வைத்தது.
11. பெரியாரின் இயக்கத்தையும், கொள்கைகளையும் வடபுலத்துக்கு எடுத்துச் சென்றது.
12. தமிழகத்தில் 69 சதவிகித இடஒதுக்கீட்டை வலிமைப்படுத்தும் வண்ணம் அரசியல் சட்டத்தில் சட்டப் பாதுகாப்பு கொடுத்தது.
13. பகுத்தறிவு – மூடநம்பிக்கைப் பிரச்சாரத்தை விடாமல் தொடர்வது.
14. பெரியாரின் கல்விப் பணியை, நிறுவனமயப்படுத்தி நிலை நிறுத்தியது.
15. மாட்டுக்கறி மதவாதத்துக்கு மரண அடி கொடுப்பது.
16. தர்மபுரி சாதியவாதத்துக்கு தடியடி கொடுப்பது.
17. இன்றும் பார்ப்பனக் கூட்டத்துக்கு பாகற்காயாகக் கசப்பது.
18. நம் இன அரசியல் இது தான் என அனைவரையும் வழிநடத்துவது.
19. 'இவர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்" என்று பெயரெடுத்தது.
20. 'இவரது பாராட்டைப் பெற வேண்டும்" என்று நினைக்க வைத்தது.



- இப்படி எழுதிக் கொண்டே போகலாம். 100-க்கும் மேல் எழுதலாம், நூறைக் கடந்தும் அவர் வாழ வேண்டும் என நினைக்க இந்த இருபதும் அடிப்படைக் காரணங்கள்.

அய்யா இறந்த போது, 'அப்பாடா, நாஸ்திகன் ஒழிந்தான், நிம்மதி" என்று நினைத்தது அந்தக் கூட்டம். பெரியார் அவரை விட 'மோசமான' வீரமணியை விட்டுச் சென்றார் என்பதை அடுத்தடுத்த ஆண்டுகளில் உணர்ந்தார்கள். அய்யா "வெளியில்" இருந்து செய்ய வைத்தார், ஆனால் ஆசிரியர் 'கிரவுண்ட் ஒர்க்' பார்த்து செயல்படவும் வைத்தார். இது அவர்கள் எதிர்பாராதது. ஆவர்கள் எதிர்பார்ப்பை உடைப்பதே ஆசிரியர் வீரமணியின் வாத வலிமை, எழுத்து வலிமை, செயல் வலிமை, பத்து வயதிலேயே பதியம் போட்டதால் வலிமையான, வலிமை.

அய்யா சொன்ன சொல்லை நினைவுபடுத்திப் பாருங்கள், 'வீரமணி ஒரு பெரும் நல்வாய்ப்பு, அதிசயத்தோடு வரவேற்கிறென்" என்பவை பெரும் சொற்கள். அய்யா, காசு சிக்கனக்காரர் மட்டுமல்ல சொற்களையும் சிக்கனமாகப் பயன்படுத்துபவர், யாரையும் எளிதில் பாராட்டிவிடமாட்டார். அதுவும், பொதுவில் பாராட்டிவிட மாட்டார். அதுவும், எழுத்தில் பாராட்டி விட மாட்டார். அதவும், முன்கூட்டியே பாராட்டிவிடமாட்டார். இவை எல்லாமே ஆசிரியரைப் பொறுத்தவரை ஆரம்பத்திலேயே கிடைத்துவிட்டது என்றால், தண்டபாணி என்ற சிறுவன் வீரமணியாக ஆகும் போதே இனமணியாக இருந்ததால் தான்.

*'தமிழன் அடிமை தவிர்த்து குன்றென நிமிர்தல்*
*வேண்டும் என்றே நிகழ்த்தும்*
*பெரியார் ஆணை ஒன்றே பெரிதெனக்*
*கருதிய கருத்து வீரமணியை*
*வீண்செயல் எதிலும் வீழ்த்தவில்லை!"* -

என்றார் புரட்சிக் கவிஞர். இந்தப் புரட்சிச் சொல் 1958இல் சொல்லப்பட்டது. 2018-இல் மீண்டும் சொல்லப்படுகிறது. வீழ்த்தப்பட முடியாத வீரமணி வாழ்க! ●

### Me Too இயக்கம் பார்ப்பனர் மற்றும் மேட்டுக்குடிப்பெண்களுக்குத்தான் பயன்படுகிறது என்ற கருத்து சரிதானா.?

ஒருவகையில் பார்த்தால் அந்தக்கருத்து சரிதான். ஏனெனில் இந்த மீ டூ என்ற இயக்கமே இணையதளத்தில் நடக்கிறது. அதன் அடிப்படையைப் புரிந்து கொள்ளும் அறிவும் பயன்படுத்தும் பழக்கமும் பார்ப்பனர்களுக்கும் பணவசதி படைத்தவர்களுக்கும் இயல்பாகக் கிடைக்கும். மற்ற ஒரு முதன்மையான காரணம் இருக்கிறது. குடும்பத்தினரின் ஆதரவு. கல்வி நாட்டுவேலை வாய்ப்புகள் சமூக மாற்றங்களை தம் சுய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் அறிவு ஆகியவை பார்ப்பனர்களிடம் உள்ளன. மாற்றங்களை யார் முன் எடுத்தாலும் அதை கைக் கொள்வதில் பார்ப்பனர்களே முன் நிற்பார்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டபின்பு அடுத்த நிலையில் இருக்கும் உயர் சாதிகளும் பணக்காரர்களும் அதை பின்பற்றி ஏற்றுக் கொள்வார்கள்.

அந்த அடிப்படையில் என்றோ நடந்த ஒரு பாலியல் சீண்டலையோ வன்முறையையோ இப்போது வெளியே சொல்வதற்கும் அதனால் ஏற்படும் பிரச்சனைகளை எதிர் கொள்வதற்கும் அவர்களின் குடும்பங்கள் துணை நிற்கின்றன. பிற்படுத்தப்பட்ட சாதிகளின் ஆணாதிக்க மனப்பான்மை இன்றும் தொடர்கிறது. இன்று ஒரு பிரச்சனையை வெளியில் சொன்னால் இன்னும் என்னென்ன விசயங்களை மறைத்தாளோ என்று மேலும் குதறி விடும் சூழ்நிலை இருக்கிறது. மேலும் நடுத்தர மற்றும் ஏழைப் பெண்களாலும் ஒடுக்கப்பட்ட பட்டியலினப் பெண்களாலும் இதை வெளியில் சொல்லவே முடியாது. ஏனெனில் பெண்ணுக்கு எதிரான எந்தக் குற்றத்திற்கும் அந்தப் பெண்ணையே காரணம் காட்டும் மனநிலை ஒருபுறம். எளியவர்களுக்கு நடக்கும் கொடுமைகளை வெளியில் சொன்னால் அவர்களை ஏளனமாகப் பார்க்கும் ஆதிக்க சாதி மனப்பான்மை மறுபுறம். மீ டூ-வில் பதிவிடும் பெண்கள் யாருமே இத்தகைய கொடுமைகளைப் பற்றி வாய் திறக்கவும் மாட்டார்கள். எனவே இதன் பயன் சமூகத்தின் மேல்தட்டு மக்களுக்குத்தான் பயன்படும். இந்த மேல்தட்டில் பார்ப்பனர்கள், பணக்காரர்கள், பதவி அதிகாரம் மிக்கவர்கள் மற்றும் கல்வியால் உயர்நிலை அடைந்தவர்களுக்கு மட்டுமே பயன்படும். அந்த அளவுக்கு உண்மையாகப் பயன்பட்டாலே பலரது கோரைப் பற்கள் வெளியில் தெரிந்து விடும். மற்றவர்கள் கொஞ்சம் விழிப்புணர்வு பெற அது வழிவகை செய்யும்.

இன்றைக்கு பெருமளவில் தமிழ்நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கும் செய்தி *#metoo* என்பது தான். 2006ஆம் ஆண்டு *Tarana Burke* (தரானா பூர்கே) என்ற சமூக செயற்பாட்டாளர் மைஸ்பேஸ் (*My Space*) எனும் சமூக வலைத்தளத்தில் இதைத் தொடங்கி வைத்தார். இதன் நோக்கம் பெண்கள் குறிப்பாக ஒடுக்கப்பட்ட இனங்களைச் சார்ந்தவர்கள் எதிர்கொள்ளும் பாலியல் தொந்தரவு பற்றி பதிவு செய்ய இதைத் தொடங்கினார். *"Empowerment through empathy"* என்ற பரப்புரையின் மூலம் இதைத் தொடங்கி வைத்தார். பின் அக்டோபர் 15, 2017 ஆம் ஆண்டு நடிகை அலைசா மிலானோ (*Alyssa Milano*) மீண்டும் பாலியல் சீண்டல் குறித்து தெரிவிக்க இதைத் தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சி இன்று தமிழ்நாட்டை வந்து அடைந்திருக்கின்றது. இதில் சின்மயி என்ற திரைப்பாடகி பல கர்நாடக சங்கீத துறையைச் சேர்ந்தவர்களை இணைத்து அவர்கள் எப்படி தனக்கு பாலியல் தொந்தரவு தந்தனர் என்பதை டிவிட் செய்திருந்தார். அந்த பட்டியலோடு கவிஞர் வைரமுத்து பெயரும் இடம்பெற்றது மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டில் நிலவும் அரசியல் சூழலை சற்றே நாம் தள்ளிவைத்து இந்தப் பிரச்சினையை முதலில் அணுகலாம்.

திரைத்துறையில் தொடர்ந்து பெண்கள் சந்திக்கும் இடர்கள், ஊடகங்களில் பெண்கள் சந்திக்கும் பாலியல் துன்புறுத்தல்கள் அனைத்தையும் நாம் அறிவோம். இதுவரை இவை பற்றி *cinegossips* என்ற முறையில் கிசுகிசுக்களாக செய்திகள் வந்து கொண்டு இருந்தன. முதல் முறையாகப் பாதிக்கப்பட்டப் பெண்கள் தாங்கள் எதிர்கொண்ட



## வழக்கறிஞர் அ.அருள்மொழி - நேர்காணல் - தொடர்

அனுபவங்களைப் பேசுகின்றனர். அந்த தளத்தை நாம் முன்முடிவுகளோடு அணுகுதல் கூடாது. பேசட்டும்; உண்மைகள் என்ன? என்று அறிய விசாரணைகள் நடைபெற வேண்டும் என்பது இரண்டாவது கட்டம் தான், முதலில் ஒரு பெண் தான் சார்ந்த துறையில் தனக்கு பாலியல் தொந்தரவு உள்ளது என அனைத்து மனத்தடைகளையும் மீறி வெளியே வருவதை நாம் எந்தக் காரணம் கொண்டும், பார்ப்பனப் பெண் என்பதாலோ அய்யத்தோடு பார்க்கத் தேவை இல்லை. ஏனெனில் இந்த பரப்புரையை தொடங்கிய *Tarana Burke* (தரானா பூர்கே) அவர்கள் *#metoo* பரப்புரையின் முக்கியத்துவத்தை பற்றிக் கூறும் போது,



*"this idea - one that we call 'empowerment through empathy, to not only show the world how widespread and pervasive sexual violence is, but also to let other survivors know they are not alone. #metoo."* என்கிறார்.

அதாவது இந்த பரப்புரையின் நோக்கம் என்பது பெண்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறை என்பது உலகளாவியது மட்டுமல்ல அதை எதிர்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு நீங்கள் தனி அல்ல என்பதை தெரியப்படுத்துவதற்காகவும் தான் என தெரிவித்தார்.

சின்மயி காவல் துறையில் புகார் கொடுக்க வேண்டியது தானே, இத்தனை ஆண்டுகள் என்ன செய்தார்?, திட்டமிட்டு பழிவாங்குகின்றார் என்ற கருத்துகளை வெளியிடும் முன்னர் இதை ஒரு மாநில அளவிலான அரசியலோடு சுருக்காமல் சற்றே பரந்த பார்வையோடு உலகம் முழுதும் இந்த பரப்புரை பெண்களை பேச வைத்ததை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் ஆளுநர் புரோகித் பன்வாரிலால் செய்த லீலைகளை திசை திருப்ப இந்த செய்தி பயன்படும் என்ற வாதத்தில் உண்மை இருப்பினும், ஆளுநரால் பாதிப்படைந்த எண்ணற்ற பெண்கள் இந்த *#metoo* வின் மூலம் பேச ஒரு தளம் ஏற்பட்டிருக்கின்றது என நாம் சிந்திக்க வேண்டும்.

சிறுமியாக இருந்தபோது ஒரு பெண் குழந்தைக்கு ஏற்படும் பாலியல் தொந்தரவை அப்போதே வீட்டில் சென்று கூறி, காவல் துறையில் நடவடிக்கை எடுக்கும் சமூகமாக நாம் இருக்கின்றோமா? இல்லையே! பல வருடங்கள் கழித்தும் அந்த வடு அந்தப் பெண்ணின் மனதை அரித்துக்கொண்டிருக்கும் நிலையில் தங்கள் வலிகளைப் பகிர்ந்து கொள்ள இது முக்கியமானது என்பதை உணர வேண்டும். இதை நக்கல் அடிப்பதன் மூலம் நாம் உள்ளிருக்கும் ஆணாதிக்கச் சமூகத்தின் தன்மைகளை வெளியே காண்பிக்கின்றோம் என்பதே உண்மை. கோவையில் மன நல உளவியலராக இருக்கும் திரு. எழில் அருள் அவர்கள் மிகச் சரியாக இந்த *# metoo* பற்றி தன் முகநூலில் எழுதியிருந்தார். அதன் சில வாக்கியங்களை நீங்கள் படிக்க கீழே தருகின்றேன்.

"*Emotional instability* இருப்பவர்கள் வாழ்க்கை பாதிப்படையத்தான் செய்கிறதென்பதால் அவர்களும் பேசட்டும். நம்மைப் போன்றுதான் பெரும்பாலோர்க்கு நடந்திருக்கிறது என்பதை உணரும் போது தன்னிடமிருக்கும் *guilt, fear, anxiety* போன்றவற்றிலிருந்து எளிதில் வெளி வர முடியும் என்பதே *##Me too* வின் முக்கிய நோக்கமாய்க் கருதுகிறேன்." என்கிறார்.

இது தான் இந்த பரப்புரையின் முக்கிய நோக்கம். நீங்கள் அரசியல் காரணங்களுக்காக அதை குற்றம் சொல்வது சரியானதாக இருக்க முடியாது. பலர் இதில் வெகுளி ஆண்கள் பாதிப்படைவார்கள் என கண்ணீர் வடிக்கின்றனர். பல ஆண்டுகளுக்கு முன் கேஸ் அடுப்பு வெடித்து எத்துனை பெண்களை நாம் அநியாயமாக இழந்திருப்போம்? ஆனால் அந்த வலிகளைப் பற்றிக் கவலைப் படாமல் *dowry prohibition Act* மூலம் வெகுளி ஆண்கள் பாதிப்படைகின்றார்கள் என கண்ணீர் சிந்திய சமூகம் தானே நாம்? சதவீதத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் துன்பமும் உயிர் இழப்புகளும் அவஸ்தைகளும் இந்த வெற்றுக் கூச்சல் முன் ஒன்றும் இல்லை என்பதை உணராத நடுநிலைவாதிகள் தானே நம் சமூகம்?

மொள்ளமாரித்தனத்தில் இருவரும் விரும்பி ஈடுபட்டால்...- *We two.*

அதில், ஒருவர் மட்டும் விரும்பி இருந்தால்...

*#metoo..*

அவ்ளோ தான் சார் வாழ்க்கை..

போன்ற வன்மப் பதிவுகள் எல்லாம் *#metoo* பரப்புரையைக் கிண்டல் செய்வதாக தெரிந்தாலும் ஆழ் மனதில் பல ஆண்களுக்கு உள்ள பதட்டத்தைக் காண்பிப்பதாகவே உள்ளது. இனி விளையாட்டிற்கேனும் பெண்களைப் பாலியல் சீண்டல் செய்யும் முன், யாருக்குத் தெரியப்போகிறது என்ற எண்ணம் இல்லாது தயக்கம் ஏற்படும். அந்தத் தயக்கமே இந்த பரப்புரையின் வெற்றி!

பெண்கள் பேசட்டும்; மனம் திறக்கட்டும்; அய்யோ இந்தச் சமூகத்திற்கு முன் நாம் பதில் சொல்ல வேண்டிவருமோ? என்ற தயக்கங்கள் துறந்து பேசட்டும்! அவர்களின் குரலை எந்த காரணம் கொண்டும் தந்தை பெரியாரின் மண் மிதிக்காது என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்! 1920களில் ஆண்மை அழிய வேண்டும் அப்போது தான் பெண்களுக்கு விடுதலை என முழங்கியவர் தந்தை பெரியார். அவரின் பெண் விடுதலை முழக்கங்கள் பார்ப்பனப் பெண்களுக்கும் சேர்த்தே இருந்தது என்பதை அவர்கள் மறந்திருக்கலாம்; நாம் மறக்கலாமா? மனுவின் படி பெண்கள் அனைவரும் பாவ யோனியில் பிறந்தவர்கள் தானே? பஞ்சமர்களுக்கும் கீழானவர்கள் தானே பெண்கள்!?

பொய்யும் புரட்டும் நீண்ட நாட்கள் நிலைபெறாது ஆகையால் ஒரு பாலியல் தொந்தரவு குரல் ஒலிக்கும் போதே அது பொய்யாக தான்இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு சற்றே பரந்த மனப்பான்மையோடு இந்தப் பரப்புரைக்குத் துணை நிற்போம்!

**– நேர்காணல் தொடரும்.**





# சமோசா - கடவுள்

வடசென்னையின் ஸ்ட்ராகான்ஸ் ரோட்டில் இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் உள்ளது. திரு திருவிக இங்கு இருந்து தான் தன் பணிகளை 1918 ஆண்டிலிருந்து மேற்கொண்டார்.

இந்த கட்டிடத்திற்கு சரியாக 30 அடி தள்ளி இருக்கிறது மஹாலட்சுமி தியேட்டர். அந்த காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற திரையரங்கம். எம்ஜியார் படங்களுக்கு பெயர் போனது. அப்படி ஒரு பழமையான சுண்ணாம்பு கட்டிடம். இரும்பு கதவு கோட்டை போன்றதொன்று தோற்றத்தைக் கொடுக்கும். சாமி மற்றும் பேய் படங்கள் *full* ஷோ ஓடும். ஒவ்வொரு முறையும் இந்த வகை படங்கள் போடும்பொழுது அரங்கின் உள்ளே நான்கு மூலைகளிலும் ஆண்கள் தட்டு, கற்பூரம், விபூதி கற்பூரத்தோடு நிற்பார்கள். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, ஜமீன் கோட்டை என்று ஒரு படம், கிளைமாக்ஸ் அம்மன் பாடலுக்கு பெண்கள் சரமாரியாக சாமி ஆட, விபூதி கொட்டி சூடம் காட்டி, கற்பூரம் அவர்களின் வாயில் திணிக்கப்பட்டது. கரகாட்டக்காரன் படத்தில் கடைசியில் வரும் "மாரியம்மா" பாட்டிற்கும் இதே நிலைமைதான். இருட்டு அறையில் பாடல் அலற, பெண்கள் தலைவிரி கோலமாய் ஆட தாறுமாறு த்ரில்லிங் அனுபவம் அது!

சரி விஷயத்திற்கு வருவோம்.

நொறுக்குத்தீனி வியாபாரத்திற்காகத் திரையரங்குகள் படங்கள் ஓட்டி கொண்டிருக்கும் இந்த காலத்தில், படங்களை ரசிப்பதற்காக நொறுக்குத் தீனி விற்கப்பட்டக் காலங்கள் அவை. வீட்டிலிருந்தே பட்டன் முறுக்கும், அதிரசமும் எடுத்து செல்லுவோம். அதற்கும் மேல் இண்டர்வல்களை அதிகமாய் எதிர்பார்த்தது அந்த இரண்டு ரூபாய் பாப்கார்ன் (பாப்கார்ன் என்றால் பாப்கார்ன் தான், இந்த சீஸ், கேரமல் போன்ற அலட்டல் இல்லாத சாதாரண மெல்லிய பிளாஸ்டிக் கவரில் அடைக்கப்பட்ட பாப்கார்ன்). பின்பு பிங்க் மற்றும் டிஸ்டெம்பர் பச்சை நிறத்தில் கிடைக்கும் கோன் ஐஸ்கிரீம். இப்பொழுது கிடைக்கும் பற்பசை போல் வழ வழா கொழ கொழா ஐஸ் கிரீம்கள் போல் அல்லாது கொஞ்சம் நறநற என்று ஆனால் மிகுந்த சுவையுடன் இருக்கும். ஐஸ் கிரீமை தாங்கி இருக்கும் அந்த கோன் உருகும் ஐஸ் கிரீமின் ஈரத்தில் நனைந்து குழைந்து விடாமல் அந்த ஏ.சி. இல்லாத திரையரங்கில் அவசர அவசரமாகச் சாப்பிட்டு முடிப்பதுதான் அந்த காலத்தில் சாகச அனுபவம்.

ஐஸ் கிரீம் சாப்பிட்டு முடித்து கொஞ்சம் ஆசுவாசப்படுத்தி கொண்ட வேளையில் வெள்ளை சட்டை வெள்ளை வெட்டி முட்டிக்கு மேல் அணிந்து வெள்ளை தலைப்பாய் கட்டோடு ஒரு தாத்தா வருவார். கையில் பெரிய தகரப்பெட்டி, எண்ணெய் கடைகளில் காணப்படுமே அந்த வகை. அதன் மேல் சதுர சதுரமாக கிழிக்கப்பட்ட தினத்தந்தி மாலைமலர் தினசரி பக்கங்கள்.

### சம்சா...

பொதுவாக "சமோசாக்கள்" எங்களுக்கு அறிமுகம் ஆனது பின்புதான். வடசென்னை பகுதிகளில் முதலில் தோன்றியது "சம்சாதான்". இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் பகுதி அது என்பதால் அவர்கள் வழிவந்த "சம்சாக்கள்தான்" எங்களின் முதல் அறிமுகம்.

அந்த வெள்ளை உடை தலைப்பாக்கட்டி தாத்தாவின் தகரப்பெட்டகத்தில் அந்த சம்சாக்களின் ராஜ்ஜியம்தான். அந்த பெட்டகத்தில் இருந்து எழும் அந்த ஒரு சூடான வாசனைபோல் இன்னுமொரு வாசனையை எந்த ஒரு நட்சத்திர உணவகத்தில் கூட என் நாசி உணர்ந்ததில்லை. அப்படி ஒரு வாசனை. அந்த சம்சாக்களின் மேலே எண்ணெயில் பொறித்த கருவேப்பிலை இலைகளைத் தூவி இருக்கும். ஒரு சம்சா விலை ஒரு ருபாய் என்று நினைக்கிறேன். சம்சாவின் வெளி தோல் கடினமாக இருக்கும் நவீன சமோசாக்களின் மென்தோல் போலில்லாமல்.

உள்ளிருந்து அந்த வதங்கிய நீளமாக வெட்டப்பட்ட வெங்காயத்தின் மணம் ஒரு விதக் கிளர்ச்சியை ஏற்படுத்தக்

கூடியதாய் இருக்கும். அதன் பின்னே அந்த வாசனையை முகர்ந்துகொண்டே வாயில் எச்சில் ஊற அந்த சம்சாவின் கடின தோலை எலும்பு கடிப்பதைப்போல பிடித்து இழுத்து கவ்வினால் உள்ளிருக்கும் அதிகம் வறுக்கப்படாத, சற்றே பச்சையாக இருக்கும் மென்மையான வெங்காயம் சற்றே இனிப்பு சுவையுடன் நம்மை வரவேற்கும். அடுத்த கடி கொஞ்சம் எளிமையாய் இருக்க வாயில் ஒரு பெரும் பகுதி சிக்கி கொள்ள யாரும் பார்க்காத வண்ணம் அந்த சம்சாவை வாயை மூடி கொண்டே மென்று முடிப்பது சுஹானுபவம். உள்ளே வெங்காயத்தை தவிர மசாலா பொருட்கள் ஒன்றும் இருக்காது ஆனாலும் அப்படி ஒரு சுவை எப்படி சாத்தியம் என்று அநேக நாட்கள் யோசித்திருக்கிறேன். அந்த சம்சாவினுள் இருந்த பூரணம் கடவுளுக்கு ஒப்பாயிருந்தது. கடவுளின் இருப்பின் கேள்விக்கான பதில் அந்த சம்சாவில் இருந்தது. அந்த சம்சாவை உண்ணுவது என்னைப் பொறுத்தவரையில் ஒரு தீவிரஆன்மீக அனுபவமாக இருந்தது.

இதே போன்ற ஒரு ஆன்மீக அனுபவம் இன்றும் பெற ஒரு வழி உள்ளது. உருது மொழியில் 'ஜன்னத்' என்று ஒரு சொல் இருக்கிறது. அச்சொல்லின் அர்த்தம் "சொர்க்கம்" என்பதாகும். சரியாக சாயங்காலம் 4 மணிக்கு ஒரு தூக்கு எடுத்து கொண்டு மவுண்ட் ரோடு தர்கா எதிரே இருக்கும் புஹாரி ஹோட்டலுக்கு சென்றால் மட்டன் சமோசா என்கிற ஒரு அதிசய பண்டம் கிடைக்கும். மொறுமொறுவென உள்ளே கொந்திய ஆட்டுகரியின் ருசி இருக்கும் ஆனால் கண்ணுக்கு கறி தெரியாது.

அந்த சமோசாவில் ஒரு நான்கைத் தின்றுவிட்டு அங்கேயே பிரசித்திபெற்ற புஹாரியின் ஏலக்காய் டீயை சுர்ர்ர்... என்று உரிஞ்சினால். அங்கே வாய்க்கும் ஆன்மீக அனுபவத்திற்குப் பெயர் "ஜன்னத்".

## தள்ளுவண்டி

பஜ்ஜி சாயங்காலங்களுக்கு பெயர் போன சென்னைக்கு பம்பாய் ஹீரோயின்களின் வரவு போல் 90களின் துவக்கத்தில் எங்கு பார்த்தாலும் முளைத்தன தள்ளுவண்டி சமோசா கடைகள். வடசென்னையைப் பொறுத்தவரை 90களின் துவக்கத்தில் சௌகார்ப்பேட்டையைத் தாண்டி வட இந்தியர்கள் குறிப்பாகச் சேட்டுகள் எல்லா இடங்களிலும் பரவிக் கொண்டிருந்த காலம் அது. குட்டி குட்டியாய் பழைய எண்ணெயில் முக்கி பொரித்த சமோசாக்கள். மெல்லிய தோல், உள்ளே வெங்காயம், பச்சை மிளகாய் சில சமயம் பட்டாணி ஓமம் என்று பட்டி தொட்டி எங்கும் பட்டையைக் கிளப்பியன கவர்ச்சி சமோசாக்கள். அவைகளை ஊறவைத்து சாப்பிட ஒரு பக்கம் சுட சுட பட்டாணி குழம்பு என்று வட இந்தியர்களும், தமிழர்களும் ரோட்டோர சம பந்தியில் அளவளாவிக் கொண்டார்கள். தொழில் பேசினார்கள், வீடுகளை வாடகைக்கு விட்டுக் கொண்டார்கள், ஜமிக்கி வைத்த புடவையை விற்க ஆரம்பித்தார்கள்.

## 1998 The year of the onion (வெங்காயத்தின் வருடம்)

உரிக்க உரிக்க ஒன்றுமில்லாத வெங்காயம், 90 சதவிகிதம் நீரை மட்டுமே அடிப்படை பொருளாக கொண்ட வெங்காயம் இந்தியாவை ஆட்டிவைத்த வருடம் அது.



வெங்காய விலையேற்றத்தால் பாஜக படு தோல்வியைச் சந்தித்த வருடம் அது.

அந்த வருடம் காங்கிரசோடு கூட்டணி வைத்தது வெங்காயம்தான்.

இப்படிப் பட்ட விலையேற்றம் தமிழ்நாட்டில் சமோசாக்களின் வரலாற்றை திருப்பிப் போட்டது. முதல் முறையாக சமோசாக்களின் உள்ளே வெங்காயத்திற்குப் பதிலாக முட்டைக்கோஸ் திணிக்கப்படும் அவல நிலை உருவானது. சமோசா பிரியர்கள் இதனால் இடிந்து போனார்கள். உணர்வு மிக்க வெங்காயத்திற்கு பதிலாக முட்டைக்கோஸைப் பயன்படுத்திய மஹா மோசக செயல் அன்பே வா படத்தில் எம்ஜியாருக்கு பதிலாக ஏவிஎம் ராஜனை நடிக்கவைத்ததற்கு ஒப்பாயிருந்தது..

*never*... என்று தெய்வமகன் சிவாஜி போல் அலறி ஓடினார்கள் சமோசா வெறியர்கள் ...

அன்று சமோசா சாப்பிடுவதை நிறுத்திக்கொண்டேன். ஆனால் இன்றுவரை வெங்காய விலை குறைந்தாலும் அக்கிரமக்காரர்கள் வெங்காயத்தோடு முட்டைக்கோஸை எப்படியாவது கலந்து விடுகிறார்கள். சென்னை வாசிகளிடையே கலந்த வட இந்தியர்களைப் போல.

## மாரடைப்பு சமோசா

90களின் கடைசியில் சமோசாக்களின் ராஜ்யத்தை படையெடுத்து வெற்றிகொண்டது. தில்லி ஸ்டைல் என்று அழைக்கப்பட்ட குண்டு சமோசாதான் அது.

அந்த சமோசா ஒரு நேர்முகக் குறியீடு.

அதை உண்டால் நாம் எப்படி ஆகித் தொலைப்போம் என்கிற ஒரு முன்னெச்சரிக்கை தோற்றத்தைக் கொண்டது அவைகள். அந்த ஒரு ரூபாய் சம்சாக்களை போல் இல்லாமல் கொஞ்சம் வசதி வாய்ப்போடு இருந்தவை இந்த சமோசாக்கள்.

கொழு கொழு தேகம், உருளைக் கிழங்கு, பட்டாணி, சற்றே வசதி இருந்தால் வேர்கடலையோ இல்லை முந்திரி பருப்போ அடக்கிய *edible* (உண்ணக்கூடிய) சிரிக்கும் புத்தர்கள் அவை.

இன்று வரை ஆசைப்பட்டு அவைகளைத் தின்று தொலைத்தால்... இரவில் கனவில் ஒரு ராட்சச சமோசா துரத்திவருவதுபோல் கனவு வந்து பயமுறுத்துகிறது.

ஒரே நேரத்தில் கடவுளாகவும், சைத்தனாகவும் இருக்க பெற்ற சமோசாக்கள் பற்றி ஏதேனும் அரேபிய கதை இருக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகம்.

முக்கோண வடிவில் இருக்கும் அவை இலுமிநாட்டி பண்டமாக கூட இருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளது.

சமோசாக்களை முப்பாட்டன் உணவு என்று சொல்லி கூட ஒரு பகுதியினர் கொண்டாடலாம்.

மொத்தத்தில் சமோசா -கடவுள். •

# உயிர்மெய்

**3**

அறிவையா எதுவும் பேசாமல் இறுக்கமா காரில் உட்காருகிறார். என்னை எதிர்பார்க்காத அய்யா, நான் சொன்னவுடன் வந்தவன் தன்னை கூப்பிட வந்திருக்கான்னு புரிந்து கொண்டு, என்னிடம் 'முத்தையா, இங்கு நடந்ததை யாரிடமும் சொல்லக்கூடாது' என்றார். ஒரு வாரம் முடிஞ்சிட்டது. புதிய பிரச்சனை வந்துவிட்டது. தெய்வமா நான் நினைச்ச அய்யா, 'முத்தையாவை விசாரிங்க... கண்டெய்னர் ஒண்ணு காணோம்னா அவனுக்கு தெரியாமயிருக்க வாய்ப்பில்லை" என்று சொன்னதாகக் கூறி என்னை மிரட்டறாங்க. உயிருக்கே உத்தரவாதமில்லைன்னு ஆயிடுச்சி. நான் என்ன பண்ணுவேன் அய்யா, அந்த கடுப்பிலத்தான் நான் அன்னைக்கு அரிமாவிடம் போதையில் பேசிவிட்டேன். மன்னிச்சிடுங்க. அவர் அப்படி எதுவும் சொல்லலைன்னு நேத்து தான் தெரிஞ்சிக்கிட்டேன். அய்யாகிட்டே நான் பேசினதை சொல்லிடாதீங்க அரிமா. ரொம்ப வேதனைபடுவார்" என்று முடிக்கும் போது அழுதேவிட்டான்.

நல்லதம்பி பிரமிப்புடன் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு "முத்தையா, செல் பதிவு பண்ண எப்படி உனக்கு" முத்தையா இடைமறிச்சி 'அய்யா அறிவேந்தி அய்யா சொல்லி கொடுத்தது. எப்பவும் அவர் அலுவலகத்தில் பேசிக் கொண்டிருந்தாலும் முக்கிய பிரமுகர்கள் கூட பேசினாலும் செல்லுல பதிவு செய்ய சொல்லுவார். பிறகு கேட்டுட்டு அழிப்பார். அதனால்தான் எடுத்தேன்" என்றான். நல்லதம்பி, முத்தையாவின் பதிவு நல்ல ஆதாரம் வாங்கி பத்திரமாவும் ரகசியமாகவும் வைச்சிக்கிறது முக்கியம் என நினைத்தபடியே கொந்தளிக்கும் அரிமாவுடன், முத்தையாவை சேர்த்துவைத்துவிட்டு, எவ்வளவு பெரிய பிரச்சனை, என்கிட்ட கூட சொல்லலை. எப்படியிருக்கானோ, ஒண்ணும் புரியலயே எண்ணியபடியே,

''அரிமா, அண்ணியிடம் பேசு, அறிவு தொடர்பு கொண்டானா? என்று கேள்?" என்றார். அரிமா செல்லில், பொன்மதியுடன் பேசினான்.

'அண்ணி, அண்ணன் வரலையா, பேசலையா, ஒண்ணும் பயப்பட வேண்டாம். நகரத்திலதான் இருக்காராம். நல்லதம்பி அண்ணன், முத்தையா... ஆமாம் முத்தையா சரியாயிருக்கிறார். நான் நல்லசேதியோடு வரேன்'. அரிமா பேச்சிலேயே நிலைமையைப் புரிந்துகொண்ட நல்லதம்பியிடம் முத்தையா, 'அய்யா காவல்துறைக்கு உடனே போக வேண்டாம். ஓரிரு நாள் கழித்து போவலாம். அவர்கள் எதையும் செய்வார்கள்... மந்திரிங்க விஷயமா பயமாயிருக்கய்யா" என்று சொன்னதும் சரியாகத்தான் பட்டது நல்லதம்பிக்கு. உரையாடல் பதிவு காவலரிடம் கிடைத்தால் எப்படியும் ஆகலாம். பிரச்சனையையே மாத்திட்டா ஒண்ணும் செய்ய முடியாம போயிடும், என்று நல்லதம்பி சிந்தனையில் ஆழ்ந்தார். அவருக்கும், எவருக்கும் தெரியாத பதிவுகள் வரப்போவதும் அதிர்ச்சியில் யார் விழப்போகிறார்கள் என்பது நல்லதம்பிக்கும் தெரியாது. வலை அறுமா இறுகுமா பார்ப்போம்.

அரிமாவிற்கு, செம்மொழி *IPS* மீண்டும் நினைவுக்கு வந்தாள். உளவுப்பிரிவு என்று கேள்விப்பட்டிருக்கான். நல்லதம்பியிடம் கேட்க அருகே போனான். கைப்பேசி ஒலித்தது. அறிவேந்தியின் குரல், வேறு எண்ணில் அறிவேந்தி பேசினார். அரிமா மகிழ்ச்சியில்

''அண்ணா, அண்ணா நல்லாயிருக்கீங்களா? எங்கயிருக்கங்க? நல்லதம்பி அண்ணன் கூடயிருக்கார். பேசறீங்களா..." என்று படபடன்னு பேசினான்.

"அரிமா, நான் நல்லாயிருக்கேன். அண்ணிகிட்ட சொல். சீக்கிரம் வந்துடுவேன். நல்லதம்பிகிட்ட கொடு" என்றார்.

அறிவேந்தி நிதானமாகவும், தெளிவாகவும் பேசியது அரிமாவுக்கு நிம்மதியைக் கொடுத்தது. எதையும் சரியாக பேச முடியவில்லை என்று நினைத்தபடி செல்லை நல்லதம்பியிடம் கொடுத்தான். நல்லதம்பியும் சற்று பதட்டத்துடன்.

"அறிவு... எப்படியிருக்க. எங்கன்னு சொல்லு. நாங்க வரோம். முத்தையா சொன்னதை சொன்னார்'.

"தம்பி, பதட்டப்படாதே, நான் சொல்றதை வெளியில் சொல்லாதே, கேட்டுக்கோ... நான் நல்லாயிருக்கேன். எங்கேன்னு இப்ப வேண்டாம். ஒரு கண்டெய்னர் என் வசம் உள்ளது. ஆட்சி ஆடிக்கிட்டிருக்கிறது. டெல்லி மிரட்டுது. அவனுங்களுக்கு போக வேண்டிய

'போடா... லூசு... நமக்கு மானமாவது ஈனமாவது பதவி, பணம், அவ்வளவுதான்டா, OK குழப்பிக்காதே விடு. அதுக்குள்ள கண்டெய்னரை கண்டுபிடிச்சிட்டா, PM-க்கிட்டயே நான் நெருங்கிடுவேன். அவரு கால்ல விழுந்து பகோடா வித்து முன்னுக்கு வந்தவன்னு ஒரு போடு, ஆமா, எதிர்கட்சிக்காரன் பொதுமக்கள்னு சேந்து போராட்டம் செய்றானுங்களாமே, எதுக்கு..."

கடலூர் இள.புகழேந்தி

காவிகண்டெயினரைத்தான் நான் எடுத்துகிட்டு வந்திட்டேன். காவல்துறையில் தலைவர் காலத்தில் போட்ட நல்ல அதிகாரிகள் இரண்டு பேர் உதவியா உள்ளனர். திட்டப்படி எல்லாம் நடக்குது. நீ வீட்டுக்கு போய் பொன்மதியை பயப்படாமயிருக்க சொல். அரிமாவை கூடவே வச்சிக்க. மந்திரிங்க கூலிப்படைன்னு அலையறானுங்க. வீட்ல மிரட்டுவானுங்க. பொன்மதியை விட்டு காவல்துறையில் என்னை காணோம்னு புகார் கொடுக்க சொல். மற்றதை பிறகு சொல்றேன். ஒரு வாரத்திற்குள் பிரச்சனை முடிந்திடும்னு நம்பறேன். முத்தையாவை முழுமையாக நம்பாதே. எப்ப எவனோ சொன்னான்னு நம்பனானோ அப்பவே நம்பிக்கை போயிடுச்சி. சீக்கிரம் மந்திரிங்க ஆட்டம் முடிவுக்கு வரும். இது எனது உயிர் பிரச்சனை மட்டுமில்ல நாட்டின் பிரச்சனையும் கூட சரி... கூட இருப்பவர்களிடம் எதையாவது இப்ப சொல். அரிமாவிடம் பிறகு விபரமா சொல். சரி... வை... பிறகு பேசறேன்". அறிவும், முத்தையாவும் ஆவலோடு பார்த்தார்கள். நல்லதம்பி இயல்பான நிலைக்கு வந்து,

"அரிமா, அறிவு எப்போதும் நிதானத்தோடு நடந்து கொள்பவன். கவலையை விடு. நல்லாயிருக்கிறான். வீட்டுக்கு போவலாம். மந்திரிங்க காணாமல் போன கண்டெய்னரை காவலர்கள், கூலிப்படைகளைக் கொண்டு தேடுகிறார்கள். நம்ம அறிவையும் சந்தேகப்படுகிறார்கள். தொல்லைகள் பலவழியிலும் கொடுப்பார்கள் என்பதால் அறிவு யாருக்கும் சொல்லாமல் பத்திரமான இடத்தில் இருக்கிறான். என்கிட்ட கூட இப்ப சொல்லலை. முத்தையா உன்னை காவலர்கள் விசாரிப்பார்கள். ரௌடிகள் கூட வரலாம். ஜாக்கிரதை. அந்த கைப்பேசியை என்கிட்ட கொடு என்று வாங்கி கொண்டு நீ நாளைக்கு எங்களைப் பார். சீக்கிரம் பிரச்சனை தீர்ந்திடும். வாங்க போகலாம்" என்றபடியே எழுந்தார், நல்லதம்பி.

மறுத்து பேசாமல் செல்லை கொடுத்துவிட்டு முத்தையா அச்சத்துடனே போனான்.

சி.எம். என்னடா சொல்றார்... இரு மந்திரிகள் தனி அறையில்

'கன்னாபின்னான்னு திட்டறார். நம்மாலதான் ஆட்சிக்கு ஆபத்துன்னு சொல்றார். மூணுவண்டியை பாத்துக்க முடியல, பெரிய ஆளுன்னு பேரு... உன்னை பாத்தா அவ்வளவு தான்".

''சே... எனக்கே அசிங்கமாயிருக்கு. எவனை சந்தேகப்படறதுன்னே தெரியல. அறிவேந்தி பய வேற எங்கயிருக்கான்னும் தெரியல. செத்துகித்து போயிட்டான்னா... நம்ம பாடு அவ்வளவு தான். நம்ம போலீஸ்லாம் என்ன சொல்றானுங்க"

"இன்னைக்குள்ள கண்டுபிடிச்சிடலாம்னு சொல்றாங்க, எங்கேயோ தப்பு நடந்திருக்கு. காணாமல் போன கண்டெய்னர் டெல்லிக்கு போவணும், அங்க என்ன பாலிடிக்ஸோ... முருகசாமி பெரிய பிராடு ஆச்சே... அவன் ஏதாவது உள்ளடி வைக்கறானோ என்ன எழவோ... ரெண்டு நாள்ல முடியல, சட்டம் ஒழுங்கு சரியில்லைன்னு ஆட்சியை கலைச்சிடுவானுங்க சண்டாள பாவிங்க"

''பாதுகாப்புக்கு இருந்த பயலுங்க என்னதான் சொல்றாங்க"



"ம்... அழுவுறானுங்க, விடியற்காலை மூணு மணிக்கு பத்து பதினைஞ்சு பேர் வேன்ல வந்திருக்கானுங்க. துப்பாக்கி முனையில் வண்டியை எடுத்திருக்கானுங்க. தடுத்த ரெண்டு பேர்ல ஒருத்தன் எங்கேன்னு தெரியல. இன்னொருத்தன் சீரியஸ், மத்தவனுங்க நடுங்கி ஒடுங்கியிருக்கானுங்க. குப்பையைக் கொட்டி குப்பைகூட்டறேன்னு ஊரை சுத்தர கவர்னர் பாதுகாப்புக்கு அந்த ஏரியா போலீஸ் போயிட்டானுங்க. சே... நாம சாதாரணமா நினைச்சி அலட்சியமாயிருந்திட்டோம்னு நினைக்கிறேன்"

"இப்ப சொல்லு... சரி... நடந்ததை விடு. நடக்க போறதை பாப்போம். CM போட்டவர் தானே DGP பலர் எதிர்க்க விதிகளை மீறி தனக்காக இந்த மாதிரி வேலைக்குதானே போட்டார். நான் CM-மை பாக்கறேன். அவரு தப்பிக்க நம்மளை காட்டி உத்தம வேஷம் போட்டுடுவாரு. விடக்கூடாது. அவரை இழுத்துவுட்டுட்டு நாம பதுங்கிடுவோம்"

"முடியுமா?"

''முடியும்டா... கால்ல விழுந்து தெய்வமேன்னு கிடப்போம். நாளைக்கு நடக்க போற PM கலந்துக்கிற விழாவுல தொட்டு கும்பிட்டுவிட்டு... நான் பேசறேன் பாரு. கதையே மாறிடும்..."

"சூப்பர்... நான் என்ன பண்றது"

'CM பின்னால நாக்காலிலே உட்காராம கைகட்டி எழுந்து நின்னுக்க, என் பேச்சில ஓ... பேரையும் சொல்லிடறேன். உலகம் சுற்றும் ஏழைத்தாயின் குழந்தை. நாட்டுக்காக அலையும் தாமரை மணாளர்-னு PM-யை நெருங்கிட வேண்டியது தான். எப்படி அய்டியா?"

'சூப்பர்ண்ணே. நீங்க விஞ்ஞானி அண்ணே" என்றான். இவன் குளிர்ந்து போய் 'விஞ்ஞானின்னா எப்படி...' என கேட்க அண்ணே 'கேள்வி கேட்டா எனக்கு புடிக்காதுண்ணே. பரவாயில்ல சொல்றேன். இங்கிலீசுல History-னா தமிழ்ல விஞ்ஞானம்தானே விடுங்க. மானத்தை கால்ல இந்த முறை விட்டுடுவோம்.

'போடா... லூசு... நமக்கு மானமாவது ஈனமாவது பதவி, பணம், அவ்வளவுதான்டா, OK குழப்பிக்காதே விடு. அதுக்குள்ள கண்டெய்னரை கண்டுபிடிச்சிட்டா, PM-க்கிட்டயே நான் நெருங்கிடுவேன். அவரு கால்ல விழுந்து பகோடா வித்து முன்னுக்கு வந்தவன்னு ஒரு போடு, ஆமா, எதிர்கட்சிக்காரன் பொதுமக்கள்னு சேந்து போராட்டம் செய்றானுங்களாமே, எதுக்கு..."

"விலைவாசி ஏறிடுச்சாம்... கட்டுப்படுத்தாம ஊழல் செய்யறமாம்..."

"ஊழல் என்ன பொம்மையா, செய்யறதுக்கு. புரியாம போராடுகிறார்கள். விலையாம் வாசியாம். நாமே கண்டெய்னர் காணாம அலையுறோம். கிடைச்சா தானே நாளைக்கு ஓட்டுக்கு பணம் கொடுக்க முடியும். மக்களுக்காகத் தானே நாம போராடுகிறோம். என்ன சொல்ற.

"நம்ம கஷ்டம் எவனுக்கு புரிகிறது. சரி... வாங்க ரிலாக்ஸ் பண்ணிக்கலாம்."

– தொடரும்

# அய்ம்பது ஆண்டு திராவிட கட்சிகளின் ஆட்சியில்

# தமிழகம் வளர்ந்திருக்கிறதா? வீழ்ந்திருக்கிறதா?

## ஒரு வரலாற்று ஆய்வு

## 5

இந்த 5ஆவது தொடரை படிப்பவர்கள் இதன் முந்தைய 4 தொடர்களையும் ஒருமுறை திரும்பிப்பார்த்துவிடுவது அவர்களுக்கு ஒரு நியாயமான புரிதலை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமையும் என்பதில் அய்யமேதுமில்லை. வரலாற்றின் முன்னும் பின்னும் உடனுக்குடன் பயணித்து உண்மை ஆய்வுகளையும் நிகழ்வுகளையும் கண்டறிய ஏதுவாக நீங்கள் என்னுடன் "டைம் மெஷினில்" பயணித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நினைவில் வையுங்கள் தோழமைகளே.

சரி இப்பொழுது தொடர் ஐந்திற்கு வருவோம். சேரன்மாதேவி குருகுல நிகழ்வுகளும், அதுபற்றிய அக்கிரமங்களை தாம் எவ்வளவு ஆதாரங்களுடன் பலமுறை எடுத்துச்சொல்லியும் அவற்றை சிறிதும் கண்டுகொள்ளாமல் இருந்ததாலும்; வ.வே.சுப்ரமணிய ஐயரின் மேல் டாக்டர் வரதராசுலு நாயுடு அவர்கள் வைத்திருந்த அதீத குருட்டு நம்பிக்கையும் தந்தை பெரியாரைச் சோர்வடையச் செய்திருந்த நிலையில்தான் காங்கிரசில் இருந்துகொண்டே; பெண்ணுரிமை பெண்களுக்கான கல்வியுரிமை கைம்பெண் மறுமணம் தேவதாசி முறை ஒழிப்பு கல்வி வேலைவாய்ப்பில் பார்ப்பனரல்லாதோருக்கு முன்னுரிமை மற்றும் குழந்தை திருமணத்தை தடைசெய்தல் போன்ற செயல்முறைகளை முன்னிறுத்தி பல போராட்டங்களை சுயமரியாதை இயக்கம் நடத்தியது.

இதை மக்களிடையே எளிமையாகக் கொண்டு செல்ல ஏதுவாக தந்தை பெரியார் உண்மை விளக்கம் பிரஸ் எனும் அச்சகத்தை தொடங்கி 2 மே 1925ஆம் ஆண்டு குடிஅரசு என்கிற பெயரில் புதிய வார இதழை தொடங்கினார். இதே ஆண்டில்தான் 22 நவம்பர் 1925இல் நடைபெற்ற காஞ்சிபுர காங்கிரஸ் மாநாட்டிலிருந்து தந்தை பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார் என்பதையும் நமது முந்தைய பதிவுகளிலிருந்து மீண்டுமிங்கே ஒருமுறை நினைவுகூர்தல் நல்லது. எது எப்படியிருப்பினும் தந்தை பெரியார் எனும் பேராசானின் மூளையில் இருந்து உருவானதுதான் இந்த மாபெரும் சுயமரியாதை இயக்கம் என்பதில் நமக்கு பெருமையே.

17 டிசம்பர், 1920 முதல் 14 ஜூலை, 1937 வரையிலான 17 ஆண்டு காலங்களில் நடந்த தேர்தல்களில் பதவியேற்ற ஐந்து அமைச்சரவைகளில்; நான்கு முறை நீதிக்கட்சியே அமைச்சரவை அமைத்து, மொத்தம் 13 ஆண்டுகள் அது ஆட்சியில் இருந்து ஆட்சி நடத்தியது. 14 நவம்பர் 1935இல் சென்னையில் திவான்பகதூர் அப்பாதுரை பிள்ளை தலைமையில் நடைபெற்ற நீதிக்கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில்; ஏற்கனவே தந்தை பெரியாரால் அதாவது 29 மற்றும் 30 செப்டம்பர் 1934இல் இரண்டு நாள்கள் நடைபெற்ற சென்னை தென்னிந்திய நல உரிமைச்சங்க மாநாட்டிற்கு அனுப்பப்பட்ட சம தர்ம வேலைத்திட்டங்களை(ஆதாரம்:பகுத்தறிவு -23.9.1934)பற்றி விளக்கிப்பேசுமாறு தந்தை பெரியாரை திரு. பொப்பிலி ராஜா முன்மொழிந்து கேட்டுக்கொண்டார்.

சம தர்ம வேலைத்திட்டமாவது:-

1. அரசாங்க உத்தியோக சம்பளங்கள் மக்களின் பரிசுத்தத் தன்மையைக் கெடுக்கக் கூடியதாகவும், பேராசையை உண்டாக்கக் கூடியதாகவும், இந்தியப் பொருளாதார நிலைமைக்கு மிக மிகத் தாங்க முடியாததாகவும் இருப்பதால், அவைகளைக் குறைத்து உத்தியோகஸ்தர்களுடைய வாழ்க்கையின் அவசிய அளவுக்கு ஏற்றதாகவும் மீத்துப் பெருக்கி வைப்பதற்கு இலாயக்கில்லாததாகவும் இருக்கும்படி செய்ய வேண்டும்.

2. பொது ஜனத் தேவைக்கும், சவுகரியத்துக்கும், நன்மைக்கும் அவசியமென்று உற்பத்தி செய்யப்படும் சாமான்களின் தொழிற்சாலைகள், இயந்திரசாலைகள், போக்குவரவு சாதனங்கள் முதலியவை அரசாங்கத்தாராலேயே நடைபெறும்படிச் செய்ய வேண்டும்.

3. ஆகார சாமான்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், அவற்றை வாங்கி உபயோகிக்கும் பொதுஜனங்களுக்கும் மத்தியில் தரகர்கள், லேவாதேவிக்காரர்கள் இல்லாதபடி கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகளின் கஷ்டத்தையும் சாமான் வாங்குபவர்களின் நஷ்டத்தையும் ஒழிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

4. விவசாயிகளுக்கு இன்றுள்ள கடன்களை ஏதாவது ஒரு வழியில் தீர்ப்பதுடன் இனிமேல் அவர்களுக்குக் கடன் தொல்லைகள் ஏற்படாமல் இருக்கும்படியும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

5. குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள், ஒரு குறிப்பிட்ட அளவு கல்வியாவது எல்லா மக்களுக்கும் ஏற்படும்படியாகவும், ஒரு அளவுக்காவது மதுபானத்தின் கெடுதி ஒழியும் படியாகவும். ஓர் அளவுக்கு உத்தியோகங்கள் எல்லா சாதி - மதங்களுக்கும் சரிசமமாய் இருக்கும்படிக்கும் உடனே ஏற்பாடு செய்வதுடன், இவை நடந்து வருகின்றதா என்பதையும் அடிக்கடி கவனித்துத் தக்கது செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

6. மதங்கள் என்பவை எல்லாம் அவரவர்களுடைய

◉ பொறியாளர் **பார்த்திபன்.ப**



தனி எண்ணமாகவும், தனி ஸ்தாபனங்களாகவுமே இருக்கும்படிச் செய்வதுடன், அரசியலில் - அரசியல் நிருவாகத்தில் அவை எவ்வித சம்பந்தமும் குறிப்பும் பெறாமல் இருக்க வேண்டும். சாதிக்கென்றோ, மதத்திற்கென்றோ எவ்விதச் சலுகையோ, உயர்வு - தாழ்வு அந்தஸ்தோ, அவற்றிற்காக அரசாங்கத்திலிருந்து தனிப்பட்ட முறைகளைக் கையாள்வதோ, ஏதாவது பொருள் செலவிடுவதோ ஆகியவை கண்டிப்பாய் இருக்கக் கூடாது.

7. கூடியவரை ஒரு குறிப்பிட்ட ரொக்க வரும்படிக்காரருக்கோ அல்லது தானே விவசாயம் செய்யும் விவசாயிக்கோ வரிப் பளுவே இல்லாமலும், மனித வாழ்க்கைக்குச் சராசரி தேவையான அளவுக்கு மேல் வரும்படி உள்ளவர்களுக்கும், அன்னியரால் விவசாயம் செய்யப்படுவதன் மூலம் பயனடைபவர்களுக்கும் வருமான வரி முறைபோல் நிலவரி விகிதங்கள் ஏற்படுத்த வேண்டும்.

8. லோக்கல் போர்டு, முனிசிபாலிட்டி, கோவாப்பரேட்டிவ் இலாக்கா ஆகிவைகள் இன்னமும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு, இவற்றின் மூலம் மேலே குறிப்பிட்ட பல காரியங்கள் நிருவாகம் செய்ய வசதிகள் செய்து, தக்க பொறுப்பும் நாணயமும் உள்ள சம்பள அதிகாரிகளைக் கொண்டு அவைகளை நிருவாகம் செய்ய வேண்டும்.

9. விவகாரங்களையும், சட்டச் சிக்கல்களையும் குறைப்பதுடன் சாவுவரி விதிக்கப்பட வேண்டும்.

10. மேலே கண்ட இந்தக் காரியங்கள் நடைபெறச் செய்வதில் நாமே சட்டங்கள் செய்து, அச்சட்டங்களினால் அமலில் கொண்டுவரக் கூடியவைகளைச் சட்டசபைகள் மூலமும், அந்தப்படி சட்டங்கள் செய்து கொள்ள அதிகாரங்கள் இல்லாதவைகளைக் கிளர்ச்சி செய்து அதிகாரங்கள் பெறவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.



எம்.சி.இராஜா

**நீதிக் கட்சியின் போக்கால் அதிருப்தியடைந்த ராஜா, 1922இல் அதிலிருந்து வெளியேறினார். அவரைப் பின்பற்றித் தாழ்த்தப்பட்டோர் அனைவரும் நீதிக் கட்சியிலிருந்து விலகினர்.**

பெரும் பணக்காரர்கள் இருந்ததாலேயே அவர்களுக்காகத்தான் நீதிக் கட்சி உண்டாக்கப்பட்டது என்று வாய் புளித்ததோ மாங்காய்ப் புளித்ததோ என்று பேசுகிறவர்கள்; எத்தகைய செல்வந்தர்கள் மிட்டா மிராசுகள் அடங்கிய இந்த கூட்டத்தில்தான், இத்தகைய பொதுவுடைமைக் கோட்பாடுகளை உள்ளடக்கிய வேலைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் மட்டுமன்றி; இன்றைக்கு சுமார் 83 ஆண்டுகளுக்கு முன்பாகவே வெற்றியுடன் இது நடந்திருக்கிறது என்பதையும் கவனிக்கத் தவறக் கூடாது.



இராஜாஜி

ஏறத்தாழ இதே காலகட்டத்தில் மயிலை சின்னத்தம்பி பிள்ளை ராஜா என்கிற எம்.சி.ராஜா தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதியாக அரசினரால் அடையாளம் காணப்பட்டு; 1909-லேயே சென்னை ராஜதானியின் சட்டசபைக் கவுன்சிலில் நியமன உறுப்பினராக இடம் பெற்றிருந்தார். 1935ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டப்படி இரட்டை ஆட்சி முறை; அதுவரையில் நடைமுறையில் இருந்த 1919இல் இயற்றப்பட்ட மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டப் படி நடைபெற்ற நீதிக்கட்சி ஆட்சியில்; ஒரு முதலமைச்சர் 2 அமைச்சர்கள் என மொத்தம் 3 இந்தியர் மட்டுமே அமைச்சர்களாக இருந்த முறை நீங்கப்பெற்று; முழுப் பொறுப்பும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களுக்கே இருந்தது என்பதை இங்கே தேவை கருதி நினைவுகூரவேண்டியுள்ளது.

நீதிக் கட்சி ஆட்சியில் அரிசனங்கள் எவரும் அமைச்சராக்கப் படவில்லை என்ற குற்றச்சாட்டை ம.பொ.சி வைக்கிறார். (ஆதாரம்:'தமிழ்நாட்டில் பிற மொழியினர்' என்ற நூலில் பக்கம் 81). பரவாயில்லை, ஆனால் நாம் கேட்க மறந்துபோன கேள்வியும் இங்கே ஒன்று உள்ளது அதுதான்; 1937இல் அமைந்த இராஜாஜி ஆட்சியில் முதலமைச்சர் உட்பட 10 பேர் அமைச்சர்களாக இருந்தனர். 10 அமைச்சர்களில் தாழ்த்தப்பட்டவர் ஒருவருக்கு அமைச்சர் பதவி கொடுப்பது ஒன்றும் பெரிய செயல் அல்ல எனினும்; 10 அமைச்சர்களில் முதலமைச்சர் இராஜாஜி, டி பிரகாசம், டாக்டர் டி எஸ் எஸ் இராஜன், வி.வி. கிரி ஆகிய 4 பேர் பார்ப்பனர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள்; சபாநாயகரும் புலுசு சாம்பமூர்த்தி என்ற ஆந்திரப் பார்ப்பனரே. இது நியாயமா என்பதை ம.பொ.சி. அன்பர்கள்தான் கூற வேண்டும். இராஜாஜி ஆட்சியில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த வி.ஐ.முனிசாமிப் பிள்ளை என்பவரை பொம்மையாக ஆட்சியில் அமரவைத்துக் கொண்டு ஆதித்திராவிடர்களுக்கு எதிராகப் பல காரியங்களை இராஜாஜி செய்தாரே அது நியாயமா? இதைத்தான் இன்று திரு சீமான் போன்றோர்கள் ஆதரிக்கிறார்களா என்றும் வியப்பாக உள்ளது.

எம்.சி.இராஜாவை நீதிக்கட்சியில் சேர்த்தபெருமை திரு. நடேச முதலியாரையே சாரும். ஆம் நீதிக்கட்சி தொடங்கப்படுவதற்கு முனபே நடேச முதலியார், ராஜாவை அரவணைத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நீதிக்கட்சியில் பெரும் நிலப் பிரபுக்களும், வர்த்தகப் பிரமுகர்களும், படிப்பாளிகளும் இருக்கையில்; அங்கு சாமானிய மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாத

குறையை எம்.சி.ராஜாதான் நிரப்பினார். ஒரு பட்டதாரியாக இருந்த ராஜா, உத்தியோக வேட்டையில் இறங்காமல், தமது சமூகத்தினரின் நலனைப் பாதுகாப்பதிலேயே அதிகக் கவனம் செலுத்தி வந்தார். தாழ்த்தப்பட்டோர் முன்னேற இந்து சமூகத்திலிருந்து வெளியேறுவது தாழ்த்தப்பட்டோரின் பிரச்சனைகளுக்குத் தீர்வாகாது என உறுதியாக நம்பினார். நடைமுறை நிலையை உணர்ந்து; தாழ்த்தப்பட்டோருக்கான தனி வாக்காளர் பட்டியல் வேண்டும் என தன்னுடைய கோரிக்கையை மாற்றிக்கொண்டு, தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டால் போதும் என்று ஒப்புக் கொண்டார். நடேச முதலியாரும் டி.எம். நாயரும் நீதிக் கட்சியில் தாழ்த்தப்பட்டோரின் பங்கு இருக்க வேண்டும் என்று விரும்பிய நேரத்தில்தான்; டி.எம்.நாயரின் மறைவும் தியாகராயச் செட்டியால் நடேச முதலியார் கட்சியில் ஓரங்கட்டப்பட்டதும் எம்.சி.ராஜாவுக்கு நீதிக் கட்சியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. எனினும், அவர் கட்சியில் நீடித்து வந்தார்.

இதுவொருபுறமிருக்க, 1900-களில் சுமார் 20,000 தொழிலாளர்களைக் கொண்டு இயங்கிய மாபெரும் வாழ்வாதாரமாக விளங்கியது பிரிட்டிஷ்காரரான பின்னி என்பவர் தொடங்கிய ஆலை இது. சுமார் ஒரு லட்சம் குடும்ப உறுப்பினர்கள் அந்த ஒரு மில்லை நம்பி இருந்தனர். அன்றைய சென்னையின் ஜனத்தொகையில் அது கணிசமானது. வட சென்னை மக்களின் மாபெரும் பழக்க வழக்கக் காரணியாகவும் அந்த மில் இருந்தது. ஆண்டாண்டு காலமாகப் பாட்டாளிகளைப் பிரித்தாளும் சூழ்ச்சிகளின் மூலம் அவர்களின் வாழ்வை ஒரு பொம்மலாட்டமாகவே வைத்து வேடிக்கைபார்ப்பதில் கைதேர்ந்தது ஐரோப்பிய ஏகாதிபத்தியம் என்றால் மிகையல்ல. 1921-இல் நடந்த தொழிற் சங்கப் போராட்டம் சாதிப் போராட்டமாக மாறியது!



ம.பொ.சிவஞானம்

அதில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு பிரிவாகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒரு அணியாகவும் மாறினர். பிற்படுத்தப்பட்ட மக்கள் வேலை நிறுத்தத்தை ஆதரித்தனர். தலித் மக்கள் வேலைக்குச் செல்ல முடிவெடுத்தனர். அது தொழிலாளர்கள் மத்தியில் பெரும் பிளவை ஏற்படுத்தியது. இந்தியாவின் முதல் தொழில் சங்கத்தில் இப்படித்தான் வேலைநிறுத்தப் போராட்டம் நடந்தது என்பதை பதிகிறேன். தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் திரு.வி.க., தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தினார்.

சம்பள உயர்வு பேச்சு வார்த்தை, வேலை நிறுத்தம், மில்லில் நடக்கும் கெடுபிடி, அங்கு நடந்த சுவாரஸ்யம் தான் அவர்களின் பேச்சில் முக்கியப் பங்கு வகிக்கும். ஷிப்டு, சாப்பாடு, தொழிற் சங்கத் தலைவர் குசேலர், சுப்பு இப்படித்தான் பேச்சு இருக்கும். அந்த மில்... அந்தத் தொழிலாளர்களின் வாழ்வின் அங்கம், கலாசாரமாக மாறியிருந்தது. இந்நிலையில்; 1921-இல் சென்னையில் பக்கிங்காம் கர்னாடிக் மில் பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் நடைபெற்றபோது அது பிராமணரல்லாத பிற சாதியினருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் இடையிலான சண்டையாக உருவெடுத்தது. அதற்கு காரணம் அரசின் வேண்டுகோளுக்கு இணங்க, எம்.சி.ராஜா தமது செல்வாக்கைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்பதில்லை என்று முடிவெடுக்கச் செய்துவிட்டதன் விளைவு அது.

நீதிக் கட்சியின் போக்கால் அதிருப்தியடைந்த ராஜா, 1922-இல் அதிலிருந்து வெளியேறினார். அவரைப் பின்பற்றித் தாழ்த்தப்பட்டோர் அனைவரும் நீதிக் கட்சியிலிருந்து விலகினர். 1923-இல் திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்ற தென்னிந்திய ஆதி திராவிடர் காங்கிரஸ் மாநாட்டில் பேசிய ராஜா, 'புளியந்தோப்பு கலவரத்திலிருந்துதான் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக எவரும் எண்ண வேண்டாம். அதற்கும் நீண்ட காலம் முன்பிருந்தே ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் மேலாதிக்கப் போக்குடன் வெளிப்படையாகவும் மறைவாகவும் தாழ்த்தப்பட்டோரை நசுக்கும் நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறார்கள். என்று பகிரங்கக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நீதிக்கட்சி ஆதித்திராவிடர்களுக்காக செய்தது என்ன? அப்படி என்ன தீங்கிழைத்துவிட்டது?

(1) 20 பிப்ரவரி 1922-இல் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தார். அத்தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது. அதன் அடிப்படையில் இனி "பள்ளர், பறையர் என்று இழிவாக உள்ள பெயரை மாற்றி ஆதித்திராவிடர் என்ற பெயரை எங்கள் சமூகத்திற்கு இட்டு அழைக்க வேண்டும்" என்பதே அது. எண் 217 சட்டம் (பொது) dated 25.03.1922இல் பிறக்கப்பட்டு நீதிக்கட்சியின் ஆட்சியில் நடைமுறைப் படுத்தப்பட்டது.

(2) ஆதித்திராவிடர் பிள்ளைகளைப் பொது பள்ளிகளில் கட்டாயமாகச் சேர்க்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. G.O.No.87 dated 6.1.1923.

(3) அரசு மானியம் பெறும் பள்ளிகளில் ஆதித்திராவிடர் பிள்ளைகளைச் சேர்க்க மறுத்தால் அரசு மானியம் இரத்துச் செய்யப்படும் என அரசு ஆணை பிறப்பிக் கப்பட்டது. G.O.No.88. dated 16.1.1923.

(4) திருச்சி மாவட்ட நிர்வாகம் ஆதித்திராவிடர் பிள்ளைகளை தனி இடத்தில் தங்கிப் படிக்க அனுமதி கோரியதை அரசு ஏற்க மறுத்து, ஆதித்திராவிடப் பிள்ளை களையும், மற்ற சாதிப் பிள்ளைகளையும் ஒன்றாகத்தான் படிக்க வைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. G.O.No.2015 dated 11.2.1924.

(5) இந்தியாவிலேயே முதன் முதலாக ஆதித்திராவிட மாணவர்கள் இலவசமாகத் தங்கி படிக்க. ஆதித்திராவிடர் மாணவர் விடுதி திறக்கப்பட்டது. G.O.No.2563 dated 24.10.1923; மேலும் இதைக் கட்டுவதற்கான பணம் முழுவதையும் ஆதித் திராவிடர் தலைவர் எம்.சி.ராஜா அவர்களிடமே கொடுத்து கட்டுவித்தார்கள்.

*(6) 1931க்குள் ஆதித்திராவிட மாணவர்களுக்கு மூன்று விடுதிகள் ஏற்படுத்தப்பட்டன. (T.G.Boag ICS. Madras Presidency 1881 - 1931 பக்கம் 132).*

*(7) ஆதித்திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 1243.dated 5.7.1922).*

*(8) ஆதித்திராவிட மானவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதத் தேர்வுக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்று அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 1241 சட்டம் (கல்வி) dated 17.10.1922).*

*(9) ஆதித்திராவிட மாணவர்களின் கல்வி நிலையைப் பற்றிய விவரத்தை அரசுக்கு அளிக்கவேண்டும் என்று அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 859 dated.22.06.1923).*

*(10) ஆதித்திராவிட வகுப்பு மாணவர்களுக்கு நான்காம் வகுப்பு முதல் கல்வி உதவித்தொகை வழங்கிட அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 1568 சட்டம் dated 06.11.1923).*

*(11) ஆதித்திராவிட மாணவர்களுக்குச் சில பள்ளிகளில் தனி வகுப்பறைகள் இருந்ததை அரசு கண்டித்தது. ஆதித் திராவிட மாணவர்களை அதிக எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளும் கல்வி நிறுவனங்களுக்கு அதிக அளவில் அரசின் பண உதவி அளிக்கப்படும் என்று அரசாணைப் பிறக்கப்பட்டது. (அரசாணை எண் 205 dated 11.02.1924).*

*(12) மருத்துவக் கல்லூரியில் பயிலும் ஆதித்திராவிடர் மற்றும் பின் தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்க அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 866 (பொது) சுகாதாரம் dated 17.06.1922).*

*(13) இந்தியாவில் இருந்த வேறு எந்த மாகாணத்திலும் இல்லாத அளவிற்கு நீதிக் கட்சி ஆட்சியில் ஆதித் திராவிடர்களுக்குப் பஞ்சமி நிலத்தைப் பிரித்து வழங்கியது. நீதிக்கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வரை, 1920-21 ஆதித்திராவிடர்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்த பஞ்சமி நிலம் 19,251 ஏக்கர் மட்டுமே. ஆனால் நீதிக் கட்சி ஆட்சியில் 1931 வரை பிரித்துக் கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலம் 3, 42, 611 ஏக்கர் ஆகும். (சென்னை மாகாண அரசின் புள்ளிவிவர அதிகாரி எழுதிய Madras Presidency 1881 - 1931 என்ற நூல் பக்கம் 132.) மேலும் 1935 மார்ச் 31 வரை ஆதித்திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட பஞ்சமி நிலத்தின் அளவு 4, 40, 000 ஏக்கராக உயர்ந்துள்ளதை ஜஸ்டிஸ் ஏடு, 19.7.1935 இல் சுட்டிக் காட்டியுள்ளது.*

*(14) கல்வி, சுகாதாரம், பொதுப்பணி போன்ற முக்கியப் பணிகளை அப்போது உள்ளாட்சி நிர்வாகங்களே கவனித்து வந்தன. அந்த நிறுவனங்களில் ஆதித்திராவிடர் ஒருவரை அரசு நியமனம் மூலம் அமர்த்தி அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்களித்தது நீதிக் கட்சியே. சென்னை மாகாணத்தில் உள்ளாட்சியில் ஆதித் திராவிடர் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த விவரம்:*

*1920-21 மொத்த எண்ணிக்கை ஆதித்திராவிடர் நியமனம் பெற்றவை மாவட்டக்கழகங்கள் (District Boards) 17 வட்டக்கழகங்கள் (Taluk Boards) 66 நகராட்சிகள் (Municipalities) 46 என்க.*

*(15) ஆதித்திராவிடர் பொது இடங்களில் புழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால், அவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று இரட்டை மலை சீனிவாசன் 22.08.1924 இல் சென்னை சட்ட மன்றத்தில் கொண்டு வந்த தீர்மானத்தையும், வீரய்யன் 24.02.1925 இல் கொண்டு வந்த தீர்மானத்தையும் ஏற்றுக் கொண்டு சத்திரம், சாவடி, அரசு அலுவலங்கள், பொதுச் சாலைகள், பொதுக் கிணறுகள், போன்ற பொதுவான இடங்களில் ஆதி திராவிடர்கள் வருவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களுக்கு ரூ 100 அபராதம் விதிக்கப்படும் என்று அரசாணையில் (Gazette Notification 08.04.1925 Part IV)) தெரிவிக்கப்பட்டது. இந்த அரசாணையைத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளில் வெளியிட்டதோடு தண்டோரா மூலம் சென்னை மாகாணம் முழுவதும் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆதித்திராவிடர்களுக்கு இருந்த சமூகத் தடைகளை நீக்க வழிவகை செய்தது நீதிக் கட்சியே.*

*(16) 1935 அரசியல் சட்டம் நடப்புக்கு வரும்வரை தாழ்த்தப்பட்டவர் நியமனம் மூலம் மட்டுமே பதவி வகித்தனர். அப்போது டெல்லியில் இருந்த சட்டசபைக்குப் பெயர் (MLA) Member of Legislative Assembly 1928இல் சென்னை சட்டமன்றம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு டெல்லி சட்டசபைக்கு அனுப்பப்பட்ட முதல் தாழ்த்தப்பட்ட உறுப்பினர் எம்.சி.ராஜாதான். நீதிக் கட்சி ஆதரவு பெற்ற டாக்டர் சுப்பராயன் ஆட்சியில்தான் அது நிறைவேறியது. அவர் டெல்லி சென்றதால்தான் அகில இந்திய அளவில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஒருங்கிணைக்க முயற்சி செய்தார்.*

*(17) 1921 - 22 இல் வகுப்புரிமை ஆணைகள் பிறப்பிக்கப் பட்ட போதிலும், பார்ப்பனர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து அதை நடைமுறைப் படுத்தாவண்ணம் இடையூறு செய்து வந்தனர். 1924 இல் அரசுப் பணிகளில் வேலைக்கு ஊழியர்களை அமர்த்துவதற்காக ஒரு ஆணையம் உருவாக்கப்பட்டது 'Staff Selection Board 'என்று அதற்குப் பெயர் அது தான் இப்போது T.N.P.S.C ஆக மாறியுள்ளது; 1925 முதல் அரசாங்க ஆண்டறிக்கைகளில் வகுப்பு வாரியாக அரசு ஊழியர்கள் விவரம் காலாண்டுதோறும் வெளியிடப்பட்டு வந்தது.*

*(18) பனகல் அரசர் ஆட்சிக்காலத்தில் 1927-1926க்குள் ஆதித்திராவிடர்கள் காவலர் பணியில் 382 பேரும், தலைமைக் காவலர் பணியில் 20 பேரும், துணை ஆய்வாளர் பணியில் ஒருவரும் அமர்த்தப்பட்டனர். 1935இல் துணைக் கண் காணிப்பாளர் வரை ஆதித்திராவிடர் பதவி உயர்வு பெற்றனர்; 1927 இல் தான் ஆதித் திராவிடர் ஒருவர் இன்ஸ்பெக்டராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்; ('Staff Selection Board அறிக்கை பக் 120.) அந்த காலக்கட்டத்தில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் ஆதித் திராவிடர்களைக் காவல் துறையில் காவலர்களாக கூடச் சேர்த்துக் கொண்டதில்லை என்று எம்.சி ராசா 1928 இல் மத்திய அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் கூறியுள்ளார். (எம்.சி. ராசா வாழ்க்கை வரலாறும் எழுத்தும் பேச்சும் ஜெ. சிவசண்முகம் பிள்ளை, பக் 42).*

**– ஆய்வு தொடரும்**



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
கிருஷ்ணன் போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு "கீதா உபதேசம்" செய்து முடிக்கும் வரை, கவுரவர்கள் பூப் பறித்துக் கொண்டு இருந்தார்களா?

# டிப்பர் லாரி

அடியே செல்வி எங்க டி இவ்வளவு வேகமா போற... ஒரு பொம்பளையா ஒழுங்கா தலைய வாராம..! சரியா சடையப் பின்னாம ஏன் டி... இப்படி சுடுதண்ணிய காலுல கொட்டிகின மாதிரி ஓடுற... பொறுமையா தா போடி” என்று ருக்கு ஆயா கத்த அடியே கெழவி உன் மவன் படுத்துற பாட்டுக்கு சேர்மேல கால் போட்டு ஒய்யாரமா உட்காந்து சோறா திங்க முடியும். செல்வாக்கா இருந்த என்ன கட்டுன பொடவையோட வா காலம் பூரா வச்சி கஞ்சி ஊத்தரனு சொல்லி கல்யாணத்த செஞ்சான் இப்போ என்னடானா குடியும் குடித்தனமா இருக்கான் உன் மவன் இந்த இலச்சணத்துல நா எப்படி கிழவி பொறுமையா இருக்க முடியும்..! உனக்கும் இல்ல சேர்த்து பொங்கிப் போட வேண்டி இருக்கு ஜன்னல் ஓரமா வெத்தலையும் பாக்கும் வச்சி இருக்கேன் எடுத்து போட்டுன்னு என் புள்ளைய பத்திரமா பாத்துக்கோ... நா டிப்பர் லாரிக்கு போறேன் வர சாயங்காலம் ஆகும் புள்ள எழுந்து அம்மா எங்கனு கேட்டா எதையும் மறைக்காம உண்மையச் சொல்லு அப்போதாவது குடும்ப கஷ்டம் புள்ளைக்கு புரியும் புருசனுக்கு தா புரியல புள்ளைக்காச்சி புரியட்டும்” என்றபடி டிப்பர் லாரியில் ஏறினாள் செல்வி...



‘‘என்ன செல்வி என்ன சாப்பாடு செஞ்சடி’’னு செல்வியின் தோழி மஞ்சு கேட்க... அவளுக்கு என்ன வாய்க்கு ருசியா செஞ்சி இருப்பான்னு லாரி டிரைவர் கேலிசெய்ய, அன்பரசு மாதிரி நானும் லாரி டிரைவர் ஆ இருந்தா வாய்க்கு ருசியாத்தா செஞ்சி இருப்பேன் இப்போ எதோ வயித்துப் பசிய போக்க வீட்டுல இருந்தத வச்சி செஞ்சி இருக்கேன்னு உண்மைய எதார்த்தமா பதிவு செய்ய உரையாடல்தொடர்ந்தது... இவர்களின் உரையாடல் ஒருகட்டத்தில் உள்ளத்தின் வலியாக வெளிப்பட்டன. இதனை உள்வாங்கிக்கொண்டே டிரைவர் வண்டியைச் செலுத்த வண்டி செங்கல் சூளையை அடைந்தது...

இவர்கள் ஆடி கூடி விடியற்காலை ஏழு மணிக்கே கிளம்பினாலும் செங்கல் சூளையை அடையும்போது மணி பத்து. சூரியன் சுட்டெரிக்கத் தொடங்கியது... இவர்களும் தங்களின் உணவுப் பைகளை நிழலைத் தேடி மரத்தில் மாட்டி வைத்துவிட்டு செங்கல்களைத் தூக்க ஆரம்பிக்கிறார்கள்... பணி களைப்புத் தெரியாமல் இருக்க ஒருவருக்கொருவர் மாறி மாறி ஊர்க் கதை பேசத் துவங்கினார்கள்... பக்கத்துவீட்டுக் கதையில் துவங்கிப் படிப்படியாக பிரதமர் மோடி வரை பாய்ந்தது அந்த உரையாடல்... மோடியைப் பற்றி பேசும்போது மட்டும் அவர்களின் முகத்தில் கோபத்தைக் காண முடிந்தது. அந்த காலகட்டத்தில் தான் கருப்புப் பணம் ஒழிப்பு என்று மக்களை அலைய விட்ட காலம் அது. அந்த காரணத்தால் மக்களின் கோபங்களை அவர்களின் உரையாடலில் காண முடிந்தது... இப்படியாக மோடியைப் பற்றி செல்வியும் மஞ்சுவும் மாறி மாறித் திட்டிக்கொண்டு இருக்கும்போது... “என்ன மா அங்க பேச்சு சத்தம் மட்டும் தான் இருக்கு செயல் ஒன்னும் காணும்”னு முதலாளி கத்த... செல்வியும் மஞ்சுவும் காதுக்குள் குசு குசு வென்று “அடியே நம்ம முதலாளியும் அந்த மோடியோட கட்சியாம்”னு சொல்ல டிரைவர் அன்பரசுக்கு இது கேட்க.. எடு செங்கல்ல னு டிரைவர் சத்தமா சொல்ல முதலாளி காதுக்கு செய்தி போக முதலாளி இவர்களிடம் சண்டைக்குப் போக ஒரே பிரச்சனைல முடிய அங்க இருந்த ஒருத்தர் அட விடுங்கப்பா நீங்க தினக்கூலி வேலைய செஞ்சிட்டு கூலிய வாங்கிட்டு போங்கனு பஞ்சாயத்து செய்யறதுக்குள்ள மஞ்சுவும் செல்வியும் செங்கல்களை லாரியில் ஏற்றி முடித்தார்கள்!

டிரைவர் அன்பரசு பொறுமையாக வண்டிய ஸ்டார்ட் பண்ண செல்வியும் மஞ்சுவும் சாப்பாட்டுப் பைய ஓடிப் போய் மரத்துல இருந்து தூக்கி வந்து செங்கல்மேல ஏறி உட்கார லாரி புறப்பட்டது... உச்சி வெயில் மண்டைய பொளக்க ரெண்டு பேரும் சொகுசு பஸ்ல போறமாதிரி சாலை ஓரம் உள்ள இயற்கைஅழகை ரசித்தப்படி வந்தார்கள். எதிர்பாராதவிதமாக நடு வழியில் லாரி பஞ்சர் ஆக டிரைவர் அன்பரசு என்ன பண்ணறதுன்னு

டிப்பர் லாரி

◉ மு.சி.அறிவழகன்



புரியாம முதலாளிக்கு போன் செய்ய, முதலாளி காட்டு கத்துகத்த... வேண்டா வெறுப்பா போன கட் பண்ணிட்டு டயர கழட்டி பஞ்சர் போட வேற வண்டி புடுச்சி கொண்டு போக... செல்வியும் மஞ்சுவும் மரத்து அடில கொண்டு வந்த சாப்பாட்ட வேக வேகமாச் சாப்பிட்டு அன்பரசுக்காகக் காத்திருந்தனர். நேரமோ மதியம் இரண்டுகடந்து இருந்தது.

அன்பரசோ ஊர்முழுவதும் சுற்றி ஒருவழியா பஞ்சர் கடைய கண்டுபிடிச்சி பஞ்சர் போட்டு டயர கொண்டு வர செல்வி "அன்பரசு அண்ணா சாப்டிகளா"னு எதார்த்தமா கேட்க முதலாளி மீது இருந்த கோபத்தை செல்வி மீது காட்ட செல்வி முகமோ சுருங்கிப் போனது... எப்படியோ எல்லாத்தையும் சரி பண்ணி வண்டிய எடுக்க மணி மூனு ஆனது.

செங்கல்களை இறக்க வேண்டிய இடத்தை அடையும்போது நாலு மணி இருக்கும். பொழுது சாஞ்சி போச்சி வேகமா இறக்குங்கன்னு செங்கல் வாங்கனவரும் டிரைவரும் மாறி மாறி சொல்ல... வந்து செஞ்சி பாருங்க டா அங்க நின்னுனு சொல்லறதுக்கு என்ன வலிக்கவாபோதுன்னு மனசுக்குள்ள முணுமுணுத்துக் கொண்டே செங்கல்லை வேக வேகமாக இறக்க... முக்கால் வாசி முடியும் போது செல்வி கால் மீது ஒரு கல் உடஞ்சி உளுந்துபோச்சி "அய்யோ அம்மா"னு செல்வி கத்த என்ன டி ஆச்சின்னு மஞ்சு கத்தசெல்வி காலில் ரத்தம் வடிய மஞ்சு சற்றும் யோசிக்காமல் புடவையைக் கிழித்து அவள் காலில் வடியும் இரத்தத்தை நிறுத்த கட்டு போட்டாள். செல்வியோ "நமக்கு இது என்ன புதுசா" என்று சொல்லியபடி அருகில் இருந்த மண்ணை சலித்து ரத்தம் வடியும் இடத்தில் போட்டுக்கொண்டு பணியைத் தொடர்ந்தாள்.

ஒரு வழியாக மாலை ஐந்து மணிக்கு முடித்தார்கள். முதலாளி அன்றைக்கான கூலியைக் கொடுக்க, மன மகிழ்ச்சியே இல்லாமல் பெற்றுக்கொண்டனர். கூலியை உயர்த்தி கேட்க முடியாமல்... அடிபட்டக் காலோடு நொண்டிக்கொண்டேஇல்லத்தைஅடைந்தாள் செல்வி. மணி ஆறு இருக்கும்... தன் பிள்ளையை அழைத்துக்கொண்டு கடைக்கு போய் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு பிள்ளைக்கும்தேவையானதை வாங்கிக் கொடுத்துவிட்டு சமையல் செய்து விட்டு தன்னுடைய புருஷன் வருவான் வருவான் என்று உடல் வலியோடு காத்திருந்தாள் செல்வி. மணி ஒன்பது கடந்தும் செல்வியின் புருஷன் வரவில்லை பிள்ளைக்கு சாப்பாடு கொடுத்து உறங்கவைத்துவிட்டு மீண்டும் சாப்பிடாமல் காத்திருந்தாள் செல்வி... இரவு பத்து மணி. செல்வியின் கணவர் போதையில் தள்ளாடியபடி வர செல்வி தன் வலிகளைப் பகிர இருவருக்கும் சண்டை முட்டிக்கொண்டது.... இருவரும் ஓய்ந்து தூங்கும்போது மணி பனிரெண்டு.

அரைத்தூக்கத்தோடு நாலு மணிக்கே கண்விழித்து சாப்பாடு செய்து விட்டு வழக்கம்போல் ஏழு மணிக்கே அடுத்தநாள் கூலியைப் பெறுவதற்காக ஓடினாள் செல்வி. ●

◉ பேரா. பழ.வெங்கடாசலம்

மேஜிக் கலைஞர்

# மந்திரமா? தந்திரமா?



## கொதிக்கும் எண்ணெயில் கைவிடுதல்

### தேவையானப் பொருட்கள்

ஒரு வாணலி, சூடாக்க அடுப்பு, ஒரு லிட்டர் சமையல் எண்ணெய் மற்றும் அப்பளக்கட்டு.

### மேஜிக் செய்யும் முறை

அடுப்பைப் பற்ற வைத்து வாணலி சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றி காயவைக்கவும். நன்கு காய்ந்ததும் வடை பஜ்ஜி போண்டா அப்பளம் ஆகியவை வாய்ப்புக்கு ஏற்றவாறு சுட்டு எடுக்கவும். முதலில் கரண்டியால் எடுத்து பார்வையாளர்களுக்கு தரவும். உப்பு சரியா? வெந்து விட்டதா? காரம் போதுமா? என பேசிக்கொண்டே அடுப்பு எரிவதை குறைத்து விடவும். இப்போது அப்பளத்தைப் போட்டு குச்சியாலும் கையிலும் ஒரு ஓரமாக கவனமாக எடுக்கவும். கொஞ்சம் எண்ணெய் ஊற்றுவது போல் எலுமிச்சைச் சாற்றை ஊற்றினால் கொதித்து பொங்கி வரும். அப்போது சிறிது சிறிதாக எண்ணெயில் கைவிட்டு காட்டவும். இப்போது எண்ணெய் சுடாது. பார்ப்பவர்கள் பிரமித்து போவார்கள்.

மிக முக்கியமாக பார்வையாளர்களுக்கு எச்சரிக்கையாக "நீங்கள் யாரும் இதைச் செய்யக்கூடாது. கை வெந்து விடும்" என்பதை பலமுறை தெரிவிக்க வேண்டும்.



### மேஜிக் இரகசியம்

கொதிக்கும் எண்ணெயில் கை விடுவதற்கு முன்பாக தீ எரிவதை நிறுத்திவிட வேண்டும். தயாராக வைத்துள்ள "எலுமிச்சை சாற்றை" (வடிகட்டியது) கால் லிட்டர் அளவுக்கு எண்ணெயில் ஊற்றவும். உடனே பொங்கிவரும். எண்ணெய் மேலே விழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்போது சூடு மல மலவென குறைந்துவிடும். நாம் அப்படியே மிகவும் சிரமப்பட்டு கையை விடுவது போல் செய்து காட்டவும். ●



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
நாத்திக சீனாவிலும், ரஷ்யாவிலும் கலைமகளும் இல்லை, விலைமகளும் இல்லையே, ஏன்?

# தமிழர் விளையாட்டுகள்

# கள்ளன் போலீஸ்

எல்லாக் குழந்தைகளுக்கும் உடல் நலமும் மன நலமும் முக்கியம் என்பதனால் தான் பட்டுக்கோட்டையார் கூட பாடுவார்,

"ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அதுதாண்டா வளர்ச்சி
உன்னை ஆசையோடு ஈன்றவளுக்கு
அதுவே நீ தரும் மகிழ்ச்சி..."

இன்று பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு கொடுக்கிற முக்கியத்துவத்தை உடல் வளர்ச்சிக்கும் மன வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் கொடுப்பதில்லை என்பதுதான் வருத்தமான செய்தி. சுவாமி விவேகானந்தர் சொல்வார், "ஒற்றைச் சிறகோடு எந்த பறவையும் பறக்க முடியாது". வாழ்க்கை வானில் வட்டமிட்டு பறக்கப் போகும் நமது குழந்தைகளின் ஒரு சிறகாகக் கல்வியும் மற்றொரு சிறகாக விளையாட்டுமாக இருக்க வேண்டிய சூழலை மாற்றி, விளையாட்டு என்னும் சிறகை ஒடித்து கல்வி என்னும் ஒற்றைச் சிறகோடு விடுவதால்தான் அவர்களால் வாழ்கையில் உயரே பறக்க முடியவில்லை. இதற்கெல்லாம் காரணம் படிப்பு நமக்கு அளவற்ற செல்வங்களை அள்ளித்தருகிறது. பெயர், பதவி, பணம், நல்ல துணை என எல்லாவற்றையும் கொடுக்கிறது என்பதுதான். ஆனால் இவற்றையெல்லாம் அனுபவிக்க நல்ல உடல்நலத்தை கொடுக்கிறதா? என்ற கேள்வியும் எழுகிறது. இன்றைக்கு இருக்கிற மதிப்பெண்களைத் துரத்தும் கல்விமுறையானது நம்மிடம் இருந்து பறித்துக்கொண்ட முக்கியமான ஒன்று விளையாட்டாகும். வழக்கமாக பள்ளியில்வரக்கூடிய வாரத்திற்கு இரண்டு உடற்பயிற்சி பாடவேளைகளைக்கூட இதர பாடப் பிரிவுகளான கணிதம், இயற்பியல், வேதியல், உயிரியல் என மருத்துவம் மற்றும் பொறியியல் மேற்படிப்புகளுக்கு அடிப்படையாக விளங்கும் பாடங்கள் களவாடிக்கொள்கின்றன. பொதுத் தேர்வு எழுதும் 10 முதல் 12 ஆம் வகுப்புவரை உள்ள மாணவர்களின் விளையாட்டைப் பற்றி கேட்கவே வேண்டாம். அவர்களுடைய ஒட்டுமொத்த சந்தோஷத்தையும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் போட்டி போட்டு பறித்துக்கொண்டனர். எனவே அவர்களுக்கு அவற்றை மீட்டுத் தருவது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் இந்தச் சமூகத்தின் கடமையாகும்.



எந்தச் சமூகத்தில் காவல் நிலையங்களும் நீதிமன்றங்களும் மருத்துவமனைகளும் குறைவாகத் தேவைப்படுகிறதோ அந்த சமூகம் ஒழுக்கமாகவும், நேர்மையாகவும், ஆரோக்கியமானதாகவும் உள்ளது என்று பொருள். தமிழர்களின் பெரும்பாலான விளையாட்டுகள் வெறும் பொழுதுபோக்கைத் தாண்டி ஒழுக்கம், நேர்மை, ஆரோக்கியத்தின் மேல்தான் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. விளையாடுபவர்களே நடுநிலையோடும் வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தையும் பெற்றிருப்பதால்தான் இவர்கள் விளையாட்டுக்கென்று ஒரு தனி நடுவரை வைத்துக்கொள்வதில்லை. இந்த கட்டுரையின் மூலம் கள்ளன் போலீஸ் என்னும் விளையாட்டை எப்படி ஆடுவது அதன் வாயிலாக குழந்தைகள் என்ன கற்கிறார்கள் என்று பார்ப்போம்.

திருடன் போலீஸ் அல்லது கள்ளன் போலீஸ் என்ற விளையாட்டை வீட்டிற்குள்ளேயோ அல்லது வீட்டிற்கு வெளியிலேயோ விளையாடும் விளையாட்டாகும். பொதுவாக இந்த விளையாட்டைக் குறைந்தது நான்கு பேர் சேர்ந்து விளையாடுவார்கள். நான்கு சீட்டை எடுத்து அதில் ராஜா, ராணி, போலீஸ் மற்றும் திருடன் என்று எழுதி வைத்திருப்பார்கள். ஒவ்வொரு சீட்டில் எழுதப்பட்டிருக்கும் பெயருக்கும் ஒரு மதிப்பெண் இருக்கும். உதாரணமாக ராஜாவுக்கு 100, ராணிக்கு 50, போலீஸுக்கு 10, திருடனுக்கு 0 என்று மதிப்பெண்கள் கொடுத்துக்கொள்வார்கள். சிலசமயங்களில் விளையாடுபவர்களின் எண்ணிக்கை அதிகமானால், மந்திரி, சிப்பாய் என சில சீட்டுக்களையும் எழுதி சேர்த்துக்கொண்டு அதற்குத் தகுந்தாற்போல மதிப்பெண்ணையும் போட்டுக்கொள்ளவது வழக்கம். இப்படியாக நான்கு சீட்டுக்களையும் எழுதி ஒன்றுபோல சுருட்டியோ அல்லது மடித்தோ, யாராவது ஒருவர் குலுக்கி போடுவார்கள். குலுக்கிப் போட்ட சீட்டை அவசர அவசரமாக ஆளுக்கொரு சீட்டு எடுத்துக் கொள்வார்கள். ஒவ்வொருக்கும் தனக்கு வந்த சீட்டைத்தவிர மற்றவர்களுக்கு, யார் யாருக்கு என்ன சீட்டு வந்துள்ளது என்று தெரியாது. போலீஸ் என்று எழுதப்பட்ட சீட்டு யாரிடம் உள்ளதோ அவர் மட்டும் தைரியமாக நான்தான் போலீஸ் என்று பெருமையோடு சொல்லிக் கொள்வார்.


(பைபிளில்)ஒளியைப் படைத்து கடவுள் என்றால், இருளைப் படைத்து யார்?

மேலும், அவருக்குத் திருடன் யார் என்று கண்டுபிடிக்க வேண்டிய கடமை இருக்கிறது. சரியாகத் திருடன் யார் என்று கண்டுபிடித்தால் போலீஸ் சீட்டு எடுத்தவருக்கு 10 மதிப்பெண்ணும் திருடனுக்கு 0 மதிப்பெண்ணும் கொடுக்கப்படும். ஒருவேளை தவறாகக் கூறினால் திருடனுக்கு 10 மதிப்பெண்ணும், தவறாக கூறிய போலீஸ்க்கு 0 மதிப்பெண்ணும் கொடுக்கப்படும். விளையாடுபவர்களின் பெயர்களை ஒரு காகிதத்தில் எழுதி ஒவ்வொரு சுற்று முடிவிலும் அவர்கள் பெற்ற மதிப்பெண்களை அதில் குறித்துக்கொள்ளப்படும். பல சுற்று ஆட்டத்திற்குப் பின் ஆட்டம் முடியும் நேரத்தில் யாருடைய மதிப்பெண்கள் அதிகமாக இருக்கிறதோ அவர் வெற்றி பெற்றவராவார். படிப்பில்தான் மதிப்பெண்கள் உயிரை வாங்குகிறது என்றால் இங்கேயும் மதிப்பெண்கள்தான் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கிறதா? என்று நீங்கள் எண்ணக் கூடும். இது வெறும் மதிப்பெண்களை பெறவைப்பதல்ல இந்த விளையாட்டின் நோக்கம், மதிப்பான எண்ணங்களை பெறவைப்பதுதான் இந்த விளையாட்டின் நோக்கம்.

ஒவ்வொருமுறை ஆடும் போதும் சீட்டை அடையாளம் காணாமல் இருக்க, சீட்டை ஒவ்வொரு முறையும் பல்வேறு வடிவங்களில் தினுசு தினுசாக மடிப்பதோடல்லாமல், அனைத்து சீட்டுகளும் ஒரே மாதிரி மடிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும், அனைவரும் பரிசோதித்துக் கொள்வார்கள். சில சமயம் போட்டி போட்டுக் கொண்டு சீட்டை எடுக்கும்போது காகிதம் கிழிந்து விடும் விபரீதங்களும் நடப்பதுண்டு.

பள்ளியின் கோடை விடுமுறையில் மதியம் உச்சி வெய்யிலில் பிள்ளைகளை வெளியே விளையாட அனுமதிக்கமாட்டார்கள். அப்பொழுதெல்லாம் இப்படி வீட்டிற்குள்ளேயே கள்ளன் போலீஸ் விளையாடுவார்கள்.

இதே கள்ளன் போலீஸ் விளையாட்டை விட்டுக்கு வெளியில் விளையாடும்போது கிட்டத்தட்ட நிஜ போலீஸ் திருடனை துரத்திச்சென்று பிடிப்பதைப் போல் இருக்கும். கள்ளன் போலீஸ் விளையாட்டை வெளி களத்தில் விளையாடும்போது ஆட்டக்காரர்கள் இரண்டு அணிகளாக பிரிந்து கொள்வர் அதில் ஒரு அணியினர் போலீஸ்காரர்களாகவும் மற்றொரு அணியினர் திருடர்களாகவும் இருப்பார்கள். திருடர்கள் சில பொம்மைகளையோ அல்லது வேறு ஏதாவது ஒரு முக்கியமான பொருள்களையோ திருடிக்கொண்டுபோய் மறைந்துகொள்வர்கள். அப்படி மறைந்துகொள்ளும் திருடர்களை போலீஸ்காரர்கள் துரத்திக்கொண்டுபோய் பிடிப்பார்கள். இந்த நிகழ்வு நிஜத்தில் போலீஸ் திருடர்களைத் துரத்திப்பிடிப்பதை போன்ற உணர்வை விளையாடும் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தும்.

திருடன் போலீஸ் விளையாட்டின் வாயிலாக நம் பிள்ளைகள் என்ன கற்றுக்கொள்கிறார்கள்? சமூகத்தில் ராஜா, ராணி போன்ற சமூகத்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர்களும் தன் பணியின் மூலம் வாழ்க்கை நடத்தும் போலீஸ்காரர்கள் போன்ற நடுத்தர வர்க்க மக்களும் மற்றவர்களின் உழைப்பையே திருடி வாழும் திருடர்களும் இந்த சமூகத்தில் உள்ளார்கள் என்பதை நமது பிள்ளைகள் புரிந்துகொள்வதற்கு உதவுகிறது இந்த விளையாட்டு.



இதில் நம் குழந்தைகள் எந்த மாதிரி மனிதர்களாக வாழ விரும்புகிறார்கள் என்று அவர்களின் வாழ்வை வடிவமைத்துக் கொள்ள உதவுகிறது இந்த விளையாட்டு. சமூகத்தில் போலீஸ்காரர்கள், தாங்கள் யார்? என்ன வேலை செய்கிறார்கள் என்பதைப் பெருமையோடு பிறரிடம் சொல்ல முடியும். திருட்டுத் தொழிலைச் செய்பவர்கள் வெளியில் சொல்லவும் முடியாது நடமாடவும் முடியாது எந்த நேரத்திலும் நாம் பிடிபடலாம் என்ற அச்சத்தோடு வாழ்க்கை நடத்துபவர்கள் என்பதை இந்த விளையாட்டை விட வேறு எது தெளிவாக சொல்ல முடியும் நம் குழந்தைகளுக்கு. ராஜா, ராணி போன்றவர்களுக்கு உழைக்காமலே கிடைக்கும் மதிப்பெண்கள் போல அவர்களுக்கான வாழ்வாதாரம் வலுவாக உள்ளது என்பதையும் அன்றாடம் ஒழுங்கா உழைத்தால் மட்டுமே தங்களுக்கான வாழ்வாதாரத்தைச் சம்பாதிக்கமுடியும் சற்று ஏமாந்தால் கூட திருடர்கள் அதை தட்டிப்பறித்துக்கொள்வார்கள் என்பதை போலீஸ் மூலம் நமது பிள்ளைகள் தெரிந்துகொள்ளலாம். வாழ்வில் எத்தகைய சூழல் வந்தாலும் அச்சப்பட்டு வாழும் திருடனைப் போல ஒருபோதும் வாழக்கூடாது என்று நம் குழந்தைகளுக்கு மன உறுதியைக் கொடுக்கிறது இந்த விளையாட்டு.

இந்த விளையாட்டில் யாரிடம் திருடன் சீட்டு உள்ளது என்பதை அவர்களின் முக பாவனைகளைக் கொண்டே கண்டறியும் போலீஸ்காரர் போல நமது பிள்ளைகளும் மற்றவர்களின் முக பாவனைகளைக் கொண்டு ஒருவர் எப்படிப்பட்ட மனிதர் என கண்டறியும் திறனை வளர்த்துக்கொள்ள இந்த விளையாட்டு உதவுகிறது. ஒரு காலத்தில் கை நாட்டை கையெழுத்து போடச்சொல்லிக் கொடுத்தது நமது கல்வி, அதிலும் பல போலி கையெழுத்து போட்டு ஏமாற்றும் நபர்கள் பெருகவே, தற்போதைய தொழில் நுட்பம் கையெழுத்து போடுபவனையும் கைநாட்டு வைக்கச்சொல்கிறது கார்பரேட் கம்பெனிகள். அதிலும் ஏமாற்றுபவர்கள் அதிகம் இருப்பதால் இப்பொழுது விமான நிலையங்களில் முகம் பார்த்து அடையாளம் காணும் கருவி பொறுத்த இருப்பதாக இந்திய அரசு சமீபத்தில் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. முதலில் ஒரு சில குறிப்பிட்ட விமான நிலையத்தில் சோதனை முறையில் அறிமுகம் செய்து பின்பு எல்லா விமான நிலையத்திற்கும் அதை விரிவுபடுத்த உள்ளதாக வந்த செய்தியைப் படித்தவுடன் தமிழர்களின் முகம் பார்த்தே ஒருவனை திருடனா நல்லவனா எனக் கண்டறியும் கள்ளன் போலீஸ் விளையாட்டின் மகிமை புரிந்தது.

பெற்றோர்களே உங்கள் குழந்தைகள் எந்த வேலை செய்தாலும் அது நாலுபேருக்கு மத்தியில் தன் பணியை சொல்லிக்கொள்கிற பணியாக அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுக்கும் கள்ளன் போலீஸ் விளையாட்டை விளையாடச் சொல்லிக்கொடுப்போம். அது நமது குழந்தைகளுக்கு எப்படி எல்லாம் வாழ வேண்டும் எப்படி எல்லாம் வாழக்கூடாது என சொல்லிக்கொடுக்கும்.

**– இன்னும் விளையாடலாம்**



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்

“பூமி தட்டை” என்று கூறுகிறது பைபிள் (பழைய ஏற்பாடு) இக்கருத்தை ஏற்றுக் கொண்ட கிறிஸ்தவர்கள் எத்தனை பேர்?



# பார்ப்பனீய ஜனநாயகம்

நாட்டின் மக்களாட்சி ஜனநாயகத்திற்கு நேரெதிராக உள்ளதே பார்ப்பனிய ஜனநாயகம் இதனை பற்றிய பார்வையை செலுத்த வேண்டிய காலத்தின் தேவை உள்ளது. ஏனெனில் நாம் தேவையென கருதுகின்ற மக்களாட்சி ஜனநாயகத்தை சிறிது சிறிதாக நசுக்குகின்ற வேலைகளைத் திட்டமிட்டு செய்து வரும் சித்தாந்தமே பார்ப்பனியத்தின் ஜனநாயகமாக உருக்கொண்டுள்ளது.

## பாகுபாட்டின் தர்மமே நீதியாகும்

ஜனநாயகம் நாட்டில் தழைத் தோங்கிறது என்பதை சட்டத்தின் வழியான பாகுபாடற்ற நீதியே உணர்த்தும். ஆனால் இங்கு அட்மின்களுக்கும், சேகருக்கும் காரைக்குடி காவி பயங்கரவாதிக்கும் இருக்கின்ற கருத்துரிமை மற்றவர்களுக்கு இல்லை. மாறாக ஜனநாயகம் அங்கீகரித்திருக்கும் கருத்துரிமை வழியே பேசுவதும், எழுதுவதும், இயங்குவதுமான அனைத்துமே பார்ப்பனிய ஜனநாயகத்திற்கு ஏற்புடையதாக இல்லை என்பதால் மக்களாட்சி ஜனநாயகத்தைச் சுவாசிக்க விரும்புபவர்கள் மீது ஒடுக்குமுறைகளை ஏவி தன்னுடைய அதிகாரத்தை நிலைநிறுத்துகிறது பார்ப்பனிய ஜனநாயகம்.

பார்ப்பனியம் தன்னுடைய பார்ப்பன ஜனநாயகத்திற்கு எதிரானவற்றையும் தன்னுடைய சமூகத்திற்கு சாதகமானவற்றையும் தொகுத்து எவரும் கண்டிராத ரிஷிகள் படைத்ததாகவும் இது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது எனவும் மனுநூலை பரிந்துரைத்து இதுதான் முதன்மை சட்டம் என்கிறது. இப்போதெல்லாம் மனு நூலை படித்து யார் அதன்படி நடக்கிறார்கள்? அதன்படி நடக்காததினால் தான் நாட்டில் பேரழிவுகள் ஏற்படுகின்றன என்று சொல்பவர்களும் உண்டு, நீதி வழங்குமிடத்தில் இருப்பவர்கள் சிலரே கூட தீர்ப்புரைகளின் போது மனு நூலை மேற்கொள் காட்டிய நிகழ்வுகளும் நடந்துள்ளது. மனுநூலை பரிந்துரைப்பவர்கள் நாட்டில் இருப்பதனால்தான் நீதி வழங்குமிடத்தையே அவதூறு பேசினால் கூட பார்ப்பான் தண்டனைக்கு உள்ளாவதில்லை அதே வேளையில் மனுநூலின்படி பார்ப்பானை ஏசுகின்ற சூத்திரன் வாயில் பழுக்க காய்ச்சிய இரும்பு கம்பியை நுழைத்துக் கொல்ல வேண்டுமே என்ற கடப்பாடு கொண்ட நீதி அதிகார மையம்தான் தடுக்கி விழுந்தால் தண்டனை சட்டத்தையும் அமைதியாகப் பேசினால் கூட அரச பயங்கரவாத சட்டங்களையும் ஏவி தன்னால் இயன்றளவு மனுநூலின் மூலம் பார்ப்பன ஜனநாயகத்தை காக்கின்றனர்.

## சமத்துவமின்மையே சனாதனதர்மம்

ஆலயமானாலும் அடுப்பங்கரையானாலும் அவரவருக்கான இடங்களை வகுத்து வைத்திருக்கும் சமத்துவமின்மையின் உறைவிடமே சனாதன தர்மம். ஜனநாயகம் பெரியதா? அல்லது சனாதன தர்மம் பெரியதா? எனக் கேட்டால் சனாதன தர்மத்தையே உயர்வு என போற்றுபவர்களே ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையாளர்களை ஜனநாயக விரோதிகள் என்கின்றனர். இவ்விடத்தில் தான் ஜனநாயகமென்பது எதுவென சனாதனவாதிகள் நம்புகிறார்கள் என்பதை அளவிட முடியும். சனாதனத்தை நம்புகிறவர்களே நாங்களெல்லாம் சமத்துவம் கேட்க கூடாது என தங்களின் அடிமை விலங்கை இறுகப்பற்றிக் கொள்கிறார்கள் "தான் அடிமைதான் என நம்புகின்ற அடிமையே சிறந்த அடிமை" என அம்பேத்கர் சொன்னவற்றை இங்கே பொருத்திப் பார்க்க வேண்டும் ஜனநாயகம் அடிமை விலங்கை உடைக்க முற்படும்போது சனாதனத்தை இறுக பற்றுவர்களே ஆகச் சிறந்த அடிமை எனலாம்.

பெண்களுக்கான ஜனநாயக நீதியை ஏனைய பெரும்பான்மை பெண்களே ஏற்க மறுக்கிறார்கள். பேரழிவுகளை சனாதன தர்மத்தினை மீறியதன் விளைவாக சித்தரித்து அச்சமூட்டுகிறார்கள். அச்சத்தை மறுத்து அடிமை விலங்கை உடைத்து ஜனநாயகத்தை நிலை நிறுத்த முயன்ற மதிப்பிற்குரிய பெண்களை பெரும்பாலான பெண்களே ஏற்கவியலாததற்கு காரணம் சனாதனமும் ஆணாதிக்கமும் ஏற்படுத்திய அச்சமே தவிர பெண்களின் சுதந்திரத்தை அவர்களே விரும்பாதவர்களில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். சனாதனத்தை தீவிரமாக பின்பற்றி பைத்தியகாரராக உளறும் பூரி சங்கராச்சாரி நிஸ்சாலனந்த் தலித் மக்களை கோவிலுக்குள் நுழைய தடை விதிக்க வேண்டும் என்கிறார். இதுபோன்ற ஆட்களையெல்லாம் அங்கீகரிக்கவும் இவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்காததற்கும் காரணம், பெண்களையும் சூத்திரர்களையும் ஒடுக்குகின்ற பார்ப்பன ஜனநாயகத்தை மக்களாட்சி ஜனநாயகமாக அதிகார மையங்களே நம்புவதினால் தான்.

◉ தோழர் **திராவிடராசன்**

## ஊடக வழி இருட்டடிப்புகள்



பாலின சமத்துவ நீதிக்கு எதிரானதாக உள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 497ஐ நீக்கினால் அடுத்தநாள் காலை வெளிவந்த பார்ப்பனப் பத்திரிகைகள் கள்ளத் தொடர்பை அங்கீகரித்தது உச்சநீதிமன்றம் என செய்தி வெளியிடுகிறார்கள் பத்திரிகைகளை படித்துதான் செய்திகள் வெகுமக்களிடம் பரவும் என்பதை தெரிந்தும் இதுபோன்ற செயலை செய்த பார்ப்பன ஊடகங்கள் உச்சநீதி மன்றத்தின் முதல் தீர்ப்பினை கள்ளத்தொடர்புக்கு ஆதரவான தீர்ப்பு எனவும், இரண்டாவது தீர்ப்பு இந்து மதம் மீதான தலையீடு என்றும் செய்திகளை வெளியிட்டு இரண்டு வரலாற்று மிக்க சிறப்பு தீர்ப்பையும் ஊடகத்தின் வழியாக இருட்டடிப்பு செய்து, இதன் மூலமாக நீதிமன்றத்தின் ஒட்டுமொத்த தீர்ப்புகளையும் தவறான தீர்ப்பு வழங்கும் மன்றமாக மக்களிடம் சித்தரித்துள்ளனர். ஒருபுறம் ஜனநாயக உரிமைக்காக மக்கள் போராடுகின்ற வேளையில் அதனை மழுங்கடிப்பதும் மற்றொருபுறம் தங்களின் டி.ஆர்.பி. உயர்வுக்காக பாடுபடுவதையும், அரசு விளம்பரங்கள் மூலமாக தங்கள் ஊடகத்திற்கு கிடைக்கும் வருவாயைக் கையைவிட்டு போகாதபடி செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பு செய்கின்றனர். இரவு நேர விவாத அரங்கில் பார்ப்பன ஊடகங்கள் நினைப்பதை மட்டுமே பேசுகின்ற நபர்களுக்கு தொடர் ஆதரவளிப்பதும் மற்றவர்கள் புறக்கணிக்கபடுவதுமான செயலும், அவ்விதமாக ஆதரிக்கப்படும் நபர்கள் தினந்தோறும் தலைப்புகளுக்கு ஏற்றபடி சமூக சேவகர்கள், அரசியல் விமர்சகர்கள் என மாறுபட்ட பல அடையாளங்களை பூசிக் கொள்வதுமான நிகழ்வுகள் நடைபெறும். எந்த அடையாளம் பூசிக் கொண்டாலும் அவர்கள் முன்நிறுத்தி பேசுவதெல்லாம் சனாதன தர்மம் மட்டுமே. இவை அனைத்தையும் திட்டமிட்டே பார்ப்பனிய ஊடகங்கள் அரங்கேற்றுகின்றன.

## ஜனநாயகம் தழைக்க

பார்ப்பனிய ஜனநாயகம் மக்களாட்சி ஜனநாயகமாகவும், பார்ப்பனிய நலன் சார்ந்தவை பொது நலனாகவும் தேச நலனாகவும் பார்க்கப்படுகிறது. இவை தங்களை நிலைநிறுத்திக் கொள்ள சட்டம், நீதி அமைப்பு, மதநூல்கள், ஊடகம் அனைத்தையும் கருவியாகப் பயன்படுத்துகின்றன. இதனைப் புரிந்து கொள்ளாத மக்கள் இருக்கும் வரை கருவிதான் மக்களை இயக்குமே ஒழிய, மக்களின் அறிவு எதற்கும் பயன்படாது.

இக்கருத்தை தந்தை பெரியார் அவர்கள் இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

> *“இந்து மதம் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை அதற்கு எந்த முறையும் செயல்திட்டமும் கிடையாது பார்ப்பன சக்திக்கும் பார்ப்பனரல்லாதவர்களின் முட்டாள் தன்மைக்கும், மானமற்ற தன்மைக்கும் ஏற்ப அவ்வப்போது உண்டாகும், உண்டாகிக்கொள்ளும் திட்டங்களும் கருத்துக்களுமேயாகும் அதுவும் நேரத்திற்கு ஒரு விதம், நாட்டுக்கு ஒருவிதம், ஊருக்கு ஒருவிதம் சமயத்திற்கு ஒருவிதம், சந்தர்ப்பத்திற்கு ஒருவிதம் ஆளுக்கொருவிதம் என மாறும். இராஜாஜி பஞ்சமர் வீட்டில் சாப்பிடுவார் சங்கராச்சாரி பஞ்சமர்களை கண்டதற்கு குளிப்பார்”*

ஈரோட்டு கைத்தடி கொண்டுதான் பார்ப்பனிய ஜனநாயகத்தை ஒழித்து மக்களாட்சி ஜனநாயகத்தை மீட்க முடியும். ●

◉ நாகை **பாலு**

# சிலையைத் தகர்த்தால்...!!!



*சிலையைத் தகர்த்தால்*
*சில்லுகளாகும்...!*
*சில்லுகளெல்லாம்*
*சிலை வயலாகும்...!*
*பெரியார் என்பதோர்*
*நெடுங்காடு....!*
*சிதைத்தாலே அங்கே*
*முளைத்தெழும் பாரு...!!!*

*செருப்பை எடுத்தவர்*
*தலையில் வைத்தால்*
*"மண்டைச் சுரப்பு "*
*நின்றிடுமா.?*
*கங்கா நதியின்*
*மூலப் பெருக்கு*
*கல்லொன்றாலே*
*அடைபடுமா.?*
*பெரியார் உணர்வுகள்*
*ஈனர்கள் மூளையில்*
*ஊறிக் கசிந்த*
*சீழல்ல....!!!*
*இருட்டை விரட்ட*
*கிழக்கில் பிறந்த*
*சூரியக் கொழுந்தின்*
*சுடர்களவை....!!!!*

*தலையை சொரிய*
*கொள்ளிக் கட்டையை*
*கையில் ஏந்தித்*
*திரியாதே....!!!*

*தத்துவ கோட்டையை*
*சுண்டுவிரலால்*
*தகர்த்திட நினைத்து*
*சரியாதே....!!!*
*நெருப்பின் நகலல்ல*
*நெருப்பே இவர்நகல்*
*கரிக்கும் எவரையும்*
*தீண்டாதே...?!!!!*
*இருட்டைக் கிழித்து*
*நெருப்பைக் கக்கும்*
*எரிமலையோடு*
*மோதாதே...!!!*



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
பேயைப் (சாத்தானை) படைத்தது யார்? அதை ஏன் படைக்க வேண்டும், பிறகு அதை ஏன் எதிர்க்க வேண்டும்?

# கலவர (வி)நாயகனும்
# வீரசவர்க்கர் பரம்பரையில் வீர அட்மினும்

பார்வையாளர்களும், போட்டியாளர்களும் இல்லாத மைதானத்தில் தனியாக ஆட்டம் போடவேண்டியவர், அடிக்கடி பர்னிச்சர் மேளா நடத்தி தமிழ்நாட்டில் பெயர்பெற்ற கட்சிக்கு சொந்தக்காரரான இவருக்கு எங்கிருந்து வந்தது? இந்த வீரம்! இந்த வார்த்தைக்கும் இவர்களின் பரம்பரைக்கும் சம்பந்தமில்லாத செயலாயிற்றே எப்படி இவரால் இவ்வாறு பேச முடிந்தது. ஓ மறந்துவிட்டேன் மன்னிப்பு கடிதம் எழுதி சாதனை படைத்த ஆட்களுக்கு பெயர் வீரசவர்க்கர் இனத்தைச் சேர்ந்தவராயிற்றே! இவரின் செயல் இப்படித்தான் இருக்கும்.

ஆட்சி மாறினால் காட்சியும் மாறும் கட்சிகளின் செயல்பாடுகளும் மாறும் அதனால் நமக்கு எதாவது எசகுபிசகா ஆகிவிடப்போகிறது என்ற பயமில்லாமல் என்னது இது சின்னபிள்ளத்தனமா?

ஓ எதைப்பற்றிப் பேசுகிறேன் என்று தெரியவில்லையா? அதான்பா!

தமிழ்நாடு சாரண, சாரணியர் இயக்கத் தேர்தலில் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு 286-இல் 232 வாக்குகளை பெற்று வெற்றி பெற்ற முன்னாள் இயக்குநர் பி.மணியிடம், வெறும் 52 வாக்குகள் பெற்று இமாலய தோல்வி அடைந்த எச்.ராஜா புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே மெய்யபுரத்தில், கடந்த 15.09.2018 அன்று தடையை மீறி நடந்த கலவர(வி)நாயகன் ஊர்வலத்தில் பாஜக தேசியச் செயலாளர் எச்.ராஜா பங்கேற்றார். அப்போது, போலீசாருடன் கடும் வாக்குவாதம் செய்த அவர், உயர்நீதிமன்றத்தையும், போலீசாரையும் இழிவான வார்த்தைகளில் பேசினார்.

அந்த வீடியோவில், உயர்நீதிமன்றத்தால் மேடையமைத்துப் பேச தடை செய்யப்பட்ட ஒரு பகுதியில் மேடை போட்டு பேசுவேன் என அடம்பிடிக்கிறார் எச் ராஜா.

தடுத்து சமாதானப்படுத்த கூனிக்குறுகி வரிக்கு வரி அண்ணாச்சி என கெஞ்சிக் கேட்கும் போலீசு அதிகாரிகளை நாயை விட இழிவாக நடத்துகிறார் எச்.ராஜா. நொடிக்கு நொடி போலீசு அதிகாரிகளின் முகத்துக்கு நேரே கையை நீட்டி, "*Police is Corrupt*" எனக் கத்துகிறார். அந்த போலீசு அதிகாரியோ மானத்தை வீட்டிலேயே கழட்டி வைத்துவிட்டு வந்திருப்பார் போல. எச்.ராஜாவின் அழிச்சாட்டியத்துக்கு சமாதானம் கூற மீண்டும் முயல்கிறார். "அண்ணாச்சி, ஹை கோர்ட் ஆர்டர் அண்ணாச்சி" என காலில் விழாத குறையாகக் கெஞ்சுகிறார்.

அதற்கு எச்.ராஜாவோ பார்ப்பனக் கொழுப்போடு "ஹை கோர்ட்டாவது மயிராவது!" எனத்துடிக்கிறார். நீதிபதிகளுக்கும் மானம் இல்லை என நினைத்தார்களோ



என்னவோ அந்த போலீசு அதிகாரிகள் மீண்டும் எச். ராஜாவிடம் கெஞ்சத் தொடங்கினர்.

இன்னும் ஒரு படி மேலே ஏறிப் பேசினார் எச். ராஜா. "வெட்கமா இல்லையா? டிஜிபி வீட்டில ரைடு நடக்கிறது. அன்னைக்கே நீங்கள்லாம் யூனிஃபார்மைக் கழட்டிப் போட்டுட்டு வீட்டுக்கு போயிருக்கணும். ''லஞ்சம் வாங்குறீங்களேயா லஞ்சம் கிறுஸ்தவன்ட்ட முசுலீம்கிட்ட வாங்குறதயெல்லாம் சேத்து நான் தர்றேன்யா லஞ்சம்."எனக் கதறிக் கொண்டே தனது அடிபொடிகளுக்கு அங்கு மேடை போட உத்தரவிடுகிறார்.

எட்டுவழிச்சாலை போராட்டம், கருத்து சொன்னவர்களை தேடித்தேடி கைது செய்வது, தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கெதிராக போராடியவர்களில் *13* பேர்களைக் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வது போன்ற செயல்களை செய்த காவல்துறை இங்கே ராஜா முன் பயந்து நடுங்குகிறது. நீங்கள் இப்படி பேசலாமா என்று கெஞ்சுகிறது. அவர் என்ன பெரிய புடுங்கியா என்று ஒரு போலீசுக்காரர் கூட கேட்கவில்லை.

ஆனால் இதுவே வேறு ஒரு நபராக இருந்திருந்தால் கன்னத்திலே நாலு அறைவிட்டு சட்டை காலரைப்பிடித்து ரோட்டில் அடிபட்ட நாயை இழுத்துக் கொண்டுப்போய் ஏதோ ஒரு இடத்தில் வீசுவதைப்போல போலீஸ் வண்டியில் வீசியிருப்பார்கள் நமது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய காவல்துறை அதிகாரிகள். ''என்னாயிற்று இவர்களுக்கு? ''சாராயக்கடை வேண்டாமென்று போராடிய பெண்களை பட்டப்பகலில் ஏராளமான பொதுமக்கள் கூடியுள்ள இடமென்றும் பாராமல் ஒரு பெண்ணை கன்னத்தில் அடித்த வீரம் படைத்த நமது காவல்துறையினர், "நடிகரும், சமுதாய நலனில் அக்கறைக் கொண்டவருமான திரு.மன்சூரலிகான், மாணவிகளும், சமுதாயத்தில் நடக்கும் அவலங்களுக்கு காரணமானவர்கள், ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்கள்தான் என அறிந்து துணிச்சலாக அவர்களுக்கு எதிராகப் போராடும் போர்க்குணம் படைத்த போராளிகளான வளர்மதி, நந்தினி மற்றும் அவரது சகோதரி மற்றும் தந்தையார், இந்திய, தமிழகத்தின் ஆட்சியாளர்களுக்கு தற்போதைக்கு பெரும் தலைவலியாக, தமிழக இளைஞர்களுக்கு நம்பிக்கையுள்ள, சமுதாயத்தின்மீதும், மனித சமூகத்தின்மீதும் பெரும் பற்று கொண்ட தோழர் திரு. திருமுருகன் காந்தி, தற்போதைய சட்டமன்ற உறுப்பினரானாலும் பரவாயில்லை என திரு. கருணாஸ் அவர்கள். இன்னும் பலரை கைது செய்ய, காட்டிய ஆர்வமெல்லாம் இரண்டு சிரிப்பு நடிகர்களை (ஒருவர் சினிமாவில், இன்னொருவர் நிஜத்தில்) கைது செய்ய காவல்துறை ஆர்வம் காட்டவில்லையே! ஏன்? வயதானவர்கள் என்றுக்கூட பார்க்காமல் கைது செய்து இழுத்துச்செல்லும் காவல்துறை, இவர்கள் போடும் ஆட்டத்திற்கு இவர்களின் வாலை ஒட்ட நறுக்கியிருக்குமே அதைவிடுத்து ஏன் இவர்களிடம் அமைதியாக நிற்கிறது?

ஆளும் மத்திய அரசின் பர்னிச்சர் மேளா கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் அவரைக் கைது செய்யக் கூடாது என நினைக்கிறதோ? இல்லையே! தமிழகத்தில் நடிகர் பவர்ஸ்டார் திரு.சீனிவாசனுக்கு கூடும் கூட்டம் கூட எச்.ராஜாவுக்கு கூடுவதில்லையே இவரின் செல்வாக்கு என்பது தமிழ்நாட்டில் இவர் ஒரு செல்லாக்காசு என்பது காவல்துறை நன்கு அறியுமே! பிறகு எப்படி போலீஸ் பயப்படுகிறது.



முக்கியத் தலைவர்களும், சமூகவலைத்தளங்களிலும் கடும் கண்டனம் எழுந்த பிறகே பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தல், அனுமதியின்றி கூடுதல் உள்ளிட்ட *8* பிரிவுகளின் கீழ் திருமயம் போலீசார் எச். ராஜா மீது வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அவரை கைது செய்ய திருமயம் காவல் ஆய்வாளர் மனோகரன், பொன்னமராவதி காவல் ஆய்வாளர் கருணாகரன் தலைமையில் *2* தனிப்படைகளும் அமைக்கப் பட்டிருந்தாலும் இதுவரை கைது செய்ய முடியவில்லை. கைது செய்யவும் மாட்டார்கள்! இதெல்லாம் வெறும் வேசம்.

மேலும் பாஜக தேசியச் செயலர் எச்.ராஜா உயர்நீதிமன்றத்தை அவமதிப்பதாகக் கூறி தமிழக டி.ஜி. பி. அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஆ... ஊ... என்றால் நீதிமன்றத்தையும், நீதிபதிகளையும் அவமதித்துவிட்டார்கள் என்று கொதித்தெழும் நீதியரசர்களும் இந்த விவகாரத்தை தாமாகவே கையில் எடுத்து நீதிமன்ற வழக்கு தொடுக்குமாறு உத்திரவிடவில்லை. என்ன இருந்தாலும் ராஜா 'தேசிய பர்னிச்சர் மேளா கட்சியின் செயலாளர்' அல்லவா?

இதுகுறித்து எச்.ராஜா மீது நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் சி.ராஜசேகர் என்பவர் முறையீடு செய்தார். இந்த முறையீட்டை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் மறுத்ததோடு எச்.ராஜா மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்காகத் தொடர்ந்தால் அதுகுறித்து நீதிமன்றம் விசாரிக்கத் தயார் என்றும், தாமாக முன்வந்து விசாரிக்க முடியாது எனவும் கூறியுள்ளனர். அவர்களுக்கும் ஏதோ பயம் உள்ளுக்குள்ள இருக்கும் போல தெரிகிறது.

பிரச்சினை பெரிதான பிறகு அந்த வீடியோவில் பேசியது என் குரல் அல்ல என்று 'அட்மின்' புகழ் எச். ராஜா பல்டி அடித்துள்ளார். ஏன் திடீரென இந்த பல்டி? தூத்துக்குடியில் போராடிய அப்பாவிகளை வாயிலே சுட்ட காவல்துறை! ''நாம் வேறு அவர்களை "வெட்கமா இல்லையா டிஜிபி வீட்டில ரைடு நடக்கிறது. அன்னைக்கே நீங்கள்லாம் யூனிஃபார்மைக் கழட்டிப் போட்டுட்டு வீட்டுக்கு போயிருக்கணும்." என்றெல்லாம் பேசிவிட்டோமே ஒருவேளை நம்முடைய வாயில் சுட்டுவிடுவார்களோ? இல்லையில்லை அதுபோல் நடக்காது எதற்கு? வம்பு என நினைத்திருப்பாரோ!

தமிழகத்தில் எப்படியாவது மதக்கலவரத்தை தோற்றுவித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் எப்போதும் ஊளையிடும் இந்த நபரை குண்டாசில் கைது செய்து ஐந்தாறு வருடங்கள் வெளியே வராதபடி உள்ள தள்ளுவதற்கு தேவையான அனைத்துத் தகுதிகளும் இந்த நபருக்கு உள்ளது. அதைச் செய்யும்வரை, இந்த வெறியரைத் தடுக்க முடியாது! அடிமை அரசு இதை செய்யாது! அப்படிச் செய்ய வைக்க வேண்டுமென்றால் மக்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை மக்கள் செய்வார்களா? பொறுத்திருந்து பார்ப்போம். ●

# எச்சில் தெரட்டி

"இங்கே சிறைல இருக்கற நிறைய பேருக்கு நாம் ஏன் சிறைல இருக்கறம்னே தெரியாம இருக்கறவங்க அதிகம் அது விசாரணை கைதியா மட்டுமல்ல தண்டனை கைதியாகவும் இருக்கறவங்க நாம என்ன குற்றம் செஞ்சோம் ஏன் சிறைல இருக்கறோம்னே தெரியாம தன்னுடைய இளமைகளை தன் உறவு முறைகளை தன் வாழ்க்கையை இழந்து கடைசி வரைக்கும் விடையே தெரியாம செத்துப்போனவங்க ஏராளம்.

கல்யாணம் பண்ணி இரண்டு மூணு மாசத்துல ஜெயிலுக்கு வந்துட்டு மகனோ அல்லது மகளோ பதினைந்து பதினாறு வயசு ஆகற வரைக்கும் மனைவி மகன் பிள்ளைகள்னு யாரையுமே பாக்காம இருந்து விடுதலையாகி வெளிய போகும்போது தன் மனைவி இன்னொருத்தனோடு குடும்பம் நடத்தறதையும் அல்லது தன் பிள்ளைகள் அடுத்த ஒரு நபரை அப்பானு கூப்பிடுவதையும் பார்த்திட்டு தற்கொலை பண்ணி செத்துப்போன நபர்கள் ஏராளம். ஒரு சிலர் அந்த பாதிப்பை யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள இயலாமல் மனநலம் பாதிக்கப்பட்டு கடைசி வரை மனநோயாளியாகவே உள்ளூரிலேயே பிச்சைக்காரனாய் பிச்சையெடுத்து உயிர் வாழ்ந்து அனாதையாகவே செத்துப்போன வரலாறுகளையும் கவனித்தே இருக்கிறோம். சிறை ஏன் எதற்கு சமூகத்தில் நிலவும் குற்றங்களை தடுக்க சிறையெனில் இந்தியா விடுதலைபெற்று 70 ஆண்டுகள் ஆகிவிட்டதே சுதந்திர இந்தியா சுதந்திர நாடு என பெருமையாகப் பேசுகிறோம். ஆனால் சிறை பல்லாயிரக்கணக்கான மக்களை கைதியாகவே வைத்துள்ளது.

கொஞ்சம் யோசிச்சு பாரு மாப்பள இங்க இந்த சுதந்திர இந்தியாவில் எவனோ ஒருத்தன் சுதந்திரத்தை அனுபவிக்க எவனோ ஒருவன் தண்டனையை அனுபவிக்கணும்னு எழுதப்படாத விதி ஒண்ணு இருக்குது மாப்ள. இது முதலாளிகளுக்கான நாடு. இதில் முதலாளிகளும் அதன் அடிவருடிகளும் சுகபோகமாய் வாழலாம்.

முதலாளித்துவ கட்டமைப்பை நீ ஏற்றுக்கொண்டால் நீ இந்த தேசத்தில் சுதந்திர மனிதன் அதை எதிர்த்து பேசினால் நீ இந்த உலகத்தில் நிம்மதியாகவே வாழ முடியாது.



◉ தோழர் சிவா சடையன்

இதோ நம்ம சுருட்டையன் சுரேஷ் தண்டனை முடிஞ்சு போன வாரம்தான் வெளியே போனான். இப்ப பாரு போன கையோட திரும்ப உள்ள வந்துட்டான்."

"ஏன் என்னாச்சு இப்பதானே தண்டனை முடிஞ்சது அதுக்குள்ள மறுபடியும் ஏன் உள்ள வந்தாப்புல?"

"அது வேற ஒண்ணுமில்ல. ஏற்கனவே பல குற்ற வழக்குகள் அவன்மேல இருக்குது. அதனால் அவனுக்கு 35 வயசு வரைக்கும் கல்யாணமே ஆகல உள்ளூர்ல அவனை பத்தி தெரிஞ்ச யாரும் அவனுக்கு பொண்ணு கொடுக்கல. விழுப்புரத்து பக்கமா ஒரு பொண்ணுபாத்து கட்டிகிட்டு வந்தான். கல்யாணம் ஆன பத்து நாள்லயே பழைய கேசு ல உள்ள வந்துட்டான்.

வருசத்துல மூணு மாசம் குடும்பத்துல இருக்கறதே பெரிய விசயம். மீதி இருக்கற ஒன்பது மாசமும் ஜெயில்லயும் அல்லது வெளிய வந்தாக்க எதாவது வழக்கு அப்படி இப்படினு தலைமறைவு வாழ்க்கைனும் பொழப்பு ஓடுது. தன் குடும்பத்தோட நல்லா சந்தோசமா அவனால வாழ முடியறதில்ல.

வயித்துக்கு பசியெடுத்தா பிச்சையெடுத்தாவது வயித்த ரொப்பிக்கலாம் உடல் பசி அப்படிப்பட்டதா இல்லையே அதுக்கு எதாச்சும் ஒருத்தரோட உதவிய நாடவேண்டிய அவசியம் இருக்குதுல்ல. ஆண்கள் காசு பணம் கொடுத்தோ அல்லது ஏதோவொரு ஆளுமைய செலுத்தி தனக்கான தினவை தீர்த்துக்கறாங்க பெண்கள் அப்படி இல்லையே.

தன் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி ஏக்கத்தை வெளிப்படுத்த இயலாம மனசுக்குள்ளயே புழுங்கி பைத்தியமா அலையணும். உணர்ச்சிங்கறது இரண்டு பேருக்கும் பொதுவானது தானே. ஒரு ஆண் எத்தனை பேர்கிட்ட வேணா போய்ட்டு வரலாம் பெண் அதை ஏத்துக்கணும் இந்த சமூகமும் சான் பிள்ளையானாலும் ஆண்பிள்ளைனு பெருமை பேசிட்டு ஒதுங்கிடும்.

அதே ஒரு பெண் தனக்கான இணைய தேர்வு பண்ணிகிட்டா. அவ அறிப்பெடுத்தவ தேவடியா கற்புகெட்டவங்கற பட்டத்தை கொடுத்திடும்.

அதே பிரச்சனைதான் சுரேஷோட பொண்டாட்டிக்கும் இவன் இல்லாத நேரத்துல அந்த பொண்ணுக்கு எல்லாவகையான உதவிகளையும் பக்கத்து வீட்ல இருந்த திருச்சிக்கார பையன்தான் செஞ்சிகிட்டு இருந்திருக்கான். ஏதோ அவங்களுக்கு மனசு ஒத்துப்போச்சு ரெண்டு பேரும் உடலுறவு வரைக்கும் போய்ட்டாங்க. அரசல் புரசலா இவன் காதுக்கு விசயம் தெரியும்னாலும் கண்டுக்காம இருந்திருக்கான். ரிலீஸ் ஆகி வெளியே போனதும் அவங்க ரெண்டுபேரும் ஒன்னா இருக்கறத நேர்ல பாத்திட்டான் உடனே அந்த பொண்ணை தலையை துடிக்க துடிக்க துண்டிச்சே கொலை பண்ணிட்டான். தலையை ஸ்டேசனுக்கே கொண்டு வந்து சரண் அடைஞ்சிட்டான். இப்ப மறுபடியும் ஜெயிலுக்கே வந்துட்டான். அவ்வளவு தான் இனி இவனை வெளிய எடுக்க கூட ஆள் கிடையாது.

ஏற்கனவே அவனோட அப்பா அம்மா ரெண்டுபேரும் இறந்துட்டாங்க அவனோட சொந்த பந்தங்களும் இவனோட குற்ற வழக்குகளை கண்டு பயந்துகிட்டு இவனோட பேசறதில்ல."



"அதெல்லாம் சரி அந்த பொண்ணை கொலை பண்ணிட்டானே அந்த பையன் என்ன ஆனான்?"

"அதுவா அந்த பையன் ஓடிப்போய்ட்டான். அவனுக்கு இவனை எதிர்க்க முடியாது. அவன் எங்க போய்ட்டான்னே தெரியல. அப்படியே அவன் இவனை எதிர்த்தாலும் இவன்மாதிரி ஆளுங்க கள்ளக்காதலில் ஈடுபடற ஆண்களை அவ்வளவு சீக்கிரம் கொல்ல மாட்டானுக..."

இங்க கற்பு புனிதம் கலாச்சாரம் பண்பாடு சாதி கவுரவம் எல்லாமே பெண்கள் மேலதான் திணிச்சு வைச்சிருக்கு. அதனால் பெண்களைதான் கொடூரமா கொலை செய்வானுக அடிப்பானுக சித்திரவதை செய்வானுக அது ஒருவகையான உளவியல் நோய். பசியெடுக்கும்போது சாப்பிடறதைப்போல குளிர்அடிச்சா போர்த்திக்கொள்வதைப்போல உடலில் இயல்பாய் சுரக்கும் காம உணர்ச்சியும் ஒருவகை இயற்கையே அப்படிங்கறதை புரிந்துகொள்ள மறுக்கற அறிவியல் மனப்பான்மையற்ற பிற்போக்குவாதிங்க இவனுங்க. இவன்போன்ற ஆட்கள் இருக்கும் வரை இந்த சமூகத்தில் பெண் முன்னேற்றம் பெண் விடுதலை அப்படிங்கறதெல்லாம் நெனைச்சுகூட பாக்க முடியாது.

இதையெல்லாம் தெரிஞ்சும் இத்தனை உயிர்கள் பலியாவது இத்தனை குடும்பங்கள் சீரழிவது நல்லாவே இந்த சிறைத்துறைக்கு தெரியும்.

சிறைத்துறைங்கறது சாதாரண நிர்வாகமா மக்களின் உணர்வுகளை மனித மனங்களை நன்கு ஆய்வு செய்யக் கூடிய படித்த மேதைகள்தானே இந்த நிர்வாகத்துக்குள்ள இருக்கறாங்க அவங்க மனசு வைச்சா பரவாயில்லை.

இதுல கொஞ்சம் சீரமைப்பு பண்ண முடியும் ஆனா பண்ணமாட்டாங்க எவனோ வீசி எறியற எச்சிலைக்கு வேலை பாக்கறவங்கதானே இந்த அரசும் சிறை நிர்வாகமும் நீயோ நானோ பேசி இங்க ஒரு பயனும் கிடைக்கப் போறதில்ல இதுக்கெல்லாம் நிறைய வேலைகள் செய்யணும்.

மக்களுடைய அதிகாரங்கள் பொய்த்துபோய் பெரு முதலாளிகளோட அதிகாரங்கள் நிலைபெற்று நிக்குது. இப்போ நாம என்ன செய்யணும் என்ன திங்கணும் என்ன பேசணும்னு எங்கோ ஒரு கூட்டம் உட்கார்ந்துகிட்டு முடிவு பண்ணுது நாம என்ன செய்யறது இதுபோன்ற சூழ்ச்சிகளுக்கு பலியாகறது மட்டுமே மக்களோட இயல்பா போயிடுச்சு.

பார்ப்போம் வரக்கூடிய காலகட்டங்கள் தான் இதை தீர்மானிக்கனிக்கணும். இந்த முதலாளிய சாதிய மத கட்டமைப்புகள்ல மிகப்பெரிய உடைப்பு ஏற்படணும் ஏற்படும் அதுக்கான வேலையை உன்போன்ற என்போன்ற நபர்கள் முன்னெடுத்து நகர்த்தணும் அதுவரைக்கும் இந்த கொடுமைகள்லாம் நிகழ்ந்தே தீரும்"

– தொடரும்



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்
தேவர்கள் இருக்கும்போது பாவத்தை மன்னிக்கப் பாதிரியார்கள் தேவையா?

# மாட்டுக் கொட்டாய்

◉ கவிஞர். **நா.காமராசன்** மண்டகொளத்தூர்



எங்க ஒத்த குடிசைக்கு
பத்தடி தூரத்துலதான் அந்த
மாட்டுக்கொட்டாய்;
சிறுசிறு சிதிலங்களோடு
ஓங்கி உயர்ந்திருந்தது அந்த
ஓட்டுக்கொட்டகை;
அணில்களும் சிட்டுக்குருவிகளும்
கொஞ்சி விளையாடும்
மரக்கழிகளில் துள்ளிகுதித்து!

கருங்கல்லு செங்கல்லு வச்சி
சிமெண்ட் பூசியிருக்கும்;
நல்ல ஒசரத்துக்கு ஒடு போட்டு
கட்டியிருப்பாங்க;
எந்த காலத்துல கட்னதுனு
தெரியாது
பகல்லயே உள்ள போகமுடியாது
அவ்ளோ இருட்டா இருக்கும்!

விடிகாலைல வாசலுக்கு
சாணி தெளிக்கனும்னா
மாடு இல்லாதவங்க
யாருக்கும் தெரியாம
இருட்டோட இருட்ல
சாணிய கரைச்சி வாசல்
தெளிச்சிருவாங்க;
மாட்டுக் கொட்டாய்க்கு முன்னாடி
மட்டும்தான் கதவு;
பின்னாடி பக்கம் கிடையாது
சந்து வழியா வந்து
எடுத்துட்டுப் போயிடுவாங்க!

பொழுது விடிஞ்சி தெருவுல
நின்னு திட்டுற சத்தத்துலதான்
இந்த சேதியே தெரியவரும்;
ஆளாளுக்கு பேசிப்பாங்க
"அம்மாடி நான் நேத்து
சாயங்காலமே
களத்துமேட்ல போய் எடுத்துட்டு
வந்துட்டேன்"
அவ திட்றவ திட்டிட்டு
போகட்டும்னு
ஆளுக்கொருத்தராய் மாறிமாறி
பேசிப்பாங்க!

ஒரு எட்டு எட்ரைக்கெல்லாம்
மாட்டுக்காரபய வேலுதான்
எல்லாம் மாட்டயும் பூட்டத்தெறிச்சி
மேய்ச்சலுக்கு ஓட்டிட்டுப் போவான்;
மாட்டுக்கார வேலன் படம்
பார்க்குறப்போல்லாம் வேலுதான்
ஞாபகத்துக்கு வருவான்;
நாங்கலாம் சின்னப் பசங்களா
இருந்தாக்கூட வேலுவ பேர்
சொல்லிதான்
கூப்டுவோம்!

சின்னப்பையன்
சின்னக்குட்டி
வேலய்யன்
பூங்கண்ணன்
ராமு லட்சுமணன்
கூட என்னையும்
சேர்த்து பள்ளிக்கூடம்
போகாத திருட்டுக்கோடுனு
சொல்வாங்க தெருவுல;
அப்போதெல்லாம் நாங்க
பதுங்குற எடம்னா அந்த
மாட்டுக்கொட்டாய்தான்!

ஊர் வெறிச்சோடி கெடக்குற
நேரத்துலதான் நாங்க
வெளியே வருவோம்;
ஆடுமாடு மேய்க்கவும்
வயக்காட்டு வேலைக்கும்
போனது போக மிச்ச சொச்சமாய்
ஒண்ணு ரெண்டு தலை
தென்படுதுனா அந்த புளியமர
நிழலாண்ட வெத்தலை பாக்கு
மென்னு தின்னும்
எங்க பாட்டன் பாட்டிகள்தான்!

கூட்டாஞ்சோறு செய்யலாம்னு
சின்னப்பையனும்
மீன்பிடிக்க போலாம்னு
வேலய்யனும்
சொன்னபோது
காண்டீபன் புளியமரத்துல
கொக்குமுட்டை எடுக்கலாம்னு
சின்னக்குட்டிதான் சொன்னான்;
நாங்கூட அவனோட சேர்ந்து
ஆமாண்ணே!

மரமேறும் விசயத்துல
வேலய்யனையும்
சின்னப்பையனையும்
அடிச்சிக்கிவே முடியாது;
கண்ணமூடி கண்ண
தொறக்குறதுக்குள்ள
உச்சிக்கிளையிலேயே போய்
மறைஞ்சிப்பானுங்க;
மலையூர் மம்பட்டியானையும்
கரிமேடு கருவாயனையும்
வீடியோவுல
பார்க்கும்போது இவனுங்க
ரெண்டுபேரும்தான் ஞாபகத்துக்கு
வருவானுங்க!

நடேசமூட்டு கெணத்து பக்கமா
இருக்குற கிளையிலதான்
கொக்கு கூடு இருந்துச்சு;
"இரை தேடப்போன கொக்கு
சாயங்காலந்தான் வரும்;
அதுக்குள்ள எடுத்துட்டு
வாங்கடானு"
கீழ நின்னுட்டு நாங்கலாம்
கத்துவோம்!

வேலய்யனும் சின்னப்பையனும்
ஒருவழியா முட்டைங்கள
எடுத்துட்டு தாமரைக்குளத்துகிட்ட
வந்துட்டானுங்க;
சின்னக்குட்டிதான் ஓடிப்போய்
வத்திப்பெட்டி எடுத்தாந்தான்;
செவிடன்வீட்டு முள்ளேலி
தோட்டத்துலதான் எல்லாரும்
சுட்டுத் தின்னோம்!

நாலரை மணிக்கு
ரெண்டாம்பெல்லு
அடிக்குற சத்தம் கேட்டதும்
ஆளாளுக்கு ஓடுவோம்
ஜானமூட்டு மாட்டு கொட்டாயை
நோக்கி;
ஆளாளுக்கு அவங்கவங்க
பள்ளிக்கோடபையத் தூக்கிட்டு
பசங்களோட சேர்ந்து
வீட்டுக்குப் போயிருவோம்
நல்லப் பசங்களாட்டம்!

எப்பவும்போல ஒருநாளு
நானும் சின்னப்பையனும்
பள்ளிக்கூடம் மட்டம்போட்டுட்டு
மாட்டுக்கொட்டாயில மறைஞ்சி
இருக்கும்போதுதான்
தெருவுல சனங்க கத்துற சத்தம்
கேட்டது; ஏரியில தாக்குப்பள்ளம்
எடுக்கப்போன முனியனை
காத்துக்கருப்பு அடிச்சிட்டதா
சடலமா தூக்கியாந்து
மாட்டுக்கொட்டாயாண்ட
போட்டாங்க!

அதுக்கப்புறம் நாங்க யாரும்
பகல்லகூட அந்த
கொட்டாப்பக்கமே
போறதேயில்ல;
வாரத்துல மூணு நாளாவது
பள்ளிக்கூடம் போயிருவோம்;
மட்டம் போடுற அந்த நாள்ல
தாமரைக் குளத்துக்காவோ
இல்லனா
புளியாந்தோப்புக்குள்ளேயோ
ஒளிஞ்சிப்போம்; மறந்தும்கூட
மாட்டுக்கொட்டா பக்கம் போறது
இல்ல! முனியன் ஆவி அங்கேயே
சுத்துமாம்!
பன்னீராங்க அம்மாதான்
சொல்வாங்க!

முந்தாநாள் ஊருக்கு
போனப்பக்கூட
ஒரு எட்டு எட்டி பார்த்துட்டு
வரலாம்
மாட்டுக்கொட்டாயனு பன்னீரக்
கூப்டேன்;
அவன்தான் சொன்னான்
அந்த இடத்துல இப்போ
மாட்டுக்கொட்டாய இடிச்சிட்டு
பள்ளிக்கூடம் கட்டிட்டாங்கனு!
அவன் பையன்கூட அங்கதான்
படிக்கிறானாம்!
காலம் சுழல்கிறது
வாழ்க்கைச் சக்கரங்களாய்! ●



பக்தர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள் ▶ நற்கருணையில் (ரொட்டியில்) இரத்தமும், சரீரமும் எங்கே இருக்கின்றன? சிந்தனை செய்?



# ADHITHYA INFOTECH

**இங்கு பத்திரங்கள் சிறந்த முறையில் எழுதி பதிவு செய்து தரப்படும்**

- வில்லங்கம் எடுத்து தரப்படும்
- பதிவு திருமணம்
- XEROX
- கலர் ஜெராக்ஸ்
- ONLINE - EC
- லேமினேஷன்
- INTERNET - E MAIL
- PRINTING & BINDING
- DTP TAMIL & ENGLISH
- பட்டா / சிட்டா / அ-பதிவேடு
- COPY DOCUMENT எடுத்து தரப்படும்
- ரப்பர் ஸ்டாம்புகள்
- PROJECT PRINTOUT

முகவரி : எண் 2 நத்தவெளி ரோடு (ரிஜிஸ்டர் ஆபிஸ் அருகில்)
திருப்பாதிரிப்புலியூர், கடலூர் -607002
adhi.buvi@gmail.com தொடர்பு எண்: 04142-263248



## மெல்ல தமிழ் கற்கும் குழந்தைகளுக்கான எளிய தமிழ் நூல்கள்



1. அறிவுத்தென்றல் தமிழ்வாசகம்
2. அறிவுடைநம்பி தமிழ்வாசகம்
3. செல்லக்கிளி தமிழ்வாசகம்

தமிழ் எழுத்துக்கள் கற்க 247 எழுத்துக்கள் தேவை இல்லை
18+18 எழுத்துக்கள் மட்டும் போதும்


எளிய தமிழ் நூல்கள்!

16/09/2018 தினமணி கதிரில்
நூலின் விரிவான அறிமுகம்

அறிமுகக் கையேடு மற்றும் தகவல்களுக்கு
தொடர்பு கொள்ளவும்

### திருவள்ளுவர் பொத்தக இல்லம்

# 51/25A, Dr. L.S.N. வணிக வளாகம்,
ஆறுமுக ஆசாரி தெரு, (ராதா துணியகம் அருகில்)
தருமபுரி - 636701
அலைப்பேசி : 93602 24172



# மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம்

# MAKKAL JANANAYAKA MUNNETRA KAZHAGAM





**செ.இப்ராஹிம் பாதுஷா**

நிறுவனர் & தலைவர்

**செ.சார்லஸ் அந்தோனி**

பொதுச் செயலாளர்

இளம் வயதில் ஓய்வு பெற்று வருங்கால இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் உலக அளவில் களம்கண்ட வீரர்கள் வாழும் நாட்டில், 60 வயதிற்கு மேல் அரசியலில் பிரவேசித்து இளைய சமுதாயத்தின் முயற்சிகளையும் எண்ணங்களையும் சிதறடிக்கச்செய்து மாற்றம் என்னிடம் என முதல்வர் கனவுடன் பலர் வலம்வருவதால் **தகர்த்தெறியப்படுமோ இந்தியாவின் வல்லரசு கனவு...?**





**ப.யுவராஜன்**

ஒருங்கிணைப்பாளர்

**மு.சரவணாகுமார்**

பொருளாளர்

இதனை மாற்றியமைத்து நவீன திறம்படைத்த இளைய சமுதாயம் நாட்டை ஆளவேண்டும் என்ற ஒற்றை நோக்கில் பயணிக்கும் கட்சி

## மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம்

**தலைமை அலுவலகம்:**

16, ராமுகாலனி முதல் வீதி, தனலட்சுமி திரையரங்கம் பின்புறம்,
கொங்கு மெயின் ரோடு, திருப்பூர்-641607.

CONTACT: **90426 25725, 95851 16796, 80129 36465**

MAIL ID : MJMKTAMILNADU2017@GMAIL.COM WEBSITE : WWW.MJMKTAMILNADU.COM

FB : MJMKTAMILNADU FB LIKEPAGE: மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம்

FROM
ARIVAZHAGAN CM
Editor & Publisher
kaithadi Monthly
2/343, Kamalapuram Village
Mallikuttai Post,
Karimangalam
Dharmapuri - 635 205
Contact : 7373333078
kaithadimonthly@gmail.com

அச்சிடப்பட்ட செய்திநூல் அஞ்சல் – தனிச்சுற்று

PRINTED MAGAZINE BOOK POST - PRIVATE CIRCULATION

Owned, published by C. Arivazhagan printed at JAYASRI PRINTPACK, No: 223, P.K.N. Road, Murugan Colony (bye pass), Sivakasi - 626 189. Published from Madhi Publication, Dharmapuri - 635 205. Editor. C. Arivazhagan, email: kaithadimonthly@gmail.com.